
கோகுலம்

Gokulam


ஆகஸ்ட் 83 • 2





"எனக்குக் கூடப் பள்ளிக் கூடம்
திறந்தாச்சே!"

புகைப்படம் — என். ராமகிருஷ்ணா



கோகுலம்

மலர்—1 இதழ்—7 1983 ஆகஸ்ட் மாத இதழ்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
பாரதியார்

கௌரவ ஆசிரியர்:
அழ. வள்ளியப்பா

அருமைச் சிறுவர் சிறுமியரே!

'அடடே, எவ்வித முன் அறிவிப்பும் இல்லை. இப்படி வண்ணப் படங்களுடன் நமது 'கோகுலம்' வந்திருக்கிறதே!' என்று ஒருபுறம் வியப்பும், மறுபுறம் மகிழ்ச்சியும் அடைகிறீர்கள் அல்லவா? உள்ளே வண்ணப் படங்கள் இல்லாதபோதே, நீங்களும் உங்கள் பெற்றோரும் கல்வி நிலையங்களும், நூலகங்களும் நல்ல வரவேற்பைத் தந்தீர்கள். மேன்மேலும் தொடர்ந்து அனைவரின் அன்பும் ஆதரவும் கிடைக்கும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு.

வருகிற ஆகஸ்ட் 15 சுதந்திர தினம். அரும் பாடுபட்டு, அளவில்லாத தியாகங்களைச் செய்து நமக்கு விடுதலை பெற்றுத் தந்த வீரர்களுக்கு நன்றியுடன் வணக்கம் செலுத்துவோம். அவர்கள் பெற்றுத் தந்த விடுதலையைப் பேணிக் காப்போம்.

ஆமாம், நம் தேசத்தந்தை காந்திஜியின் படம் உங்கள் ஒவ்வொருவர் வீட்டிலும் இருக்கிறதா? அவர் நம் தேசத் தந்தை மட்டுமல்ல; புத்தர், ஏசு, நபி போன்ற ஒரு பெரிய மகானும் ஆவார். அவரது படம் உங்களில் சிலர் வீடுகளில் இதுவரை இல்லையென்றால் பரவாயில்லை. இனியும் அப்படி இருக்கக் கூடாது. இதற்காக நீங்கள் அதிகமாகச் செலவு செய்ய வேண்டாம். ஒரு பத்திரிகையில் வெளிவந்த படத்தைக் கூடத் தனியாக எடுத்து அட்டையில் ஒட்டிச் சுவரிலே மாட்டி வைத்துக் கொள்ளலாம்.

காந்திஜியின் படத்தைப் பார்க்கும் போதெல்லாம் நமக்கு நல்ல எண்ணங்கள் தோன்றும். அந்த எண்ணங்கள் நம்மை நல்லன செய்யத் தூண்டும்.


- அழ. வள்ளியப்பா



தனிப்பிரதி ரூ. 2/-
ஆண்டுச் சந்தா ரூ. 24/-

சிங்கராஜா செய்தது என்ன?

உமர்



சிங்கராஜாவுக்கு அபாரமான கோபம். அருகில் இருந்த புலியாரைப் பார்த்தார். ''ஏ புலியாரே, இந்தக் கழுதைப் புலி இருக்கிறதே....''

''ஆம், இருக்கிறது. ஆனால், அதற்கும் எனக்கும் சம்பந்தமே இல்லை. நான் வேங்கைப் புலி. அது கழுதைப் புலி.''

''அது தெரியும். அந்தக் கழுதைப் புலிக்கு என்ன திமிர்! என்னை மிருக ராஜனாக ஏற்றுக் கொள்ள முடியாதாம். நம் காட்டில் உள்ள மிருகங்களிடமெல்லாம் பிரசாரம் செய்து வருகிறதாம். நேற்று நரியார் என்னிடம் சொன்னார்.''

''யார் சொன்னாலும், இந்தக் காட்டுக்கு நீங்கள்தான் ராஜா; நான்தான் மந்திரி.''

''சபாஷ், அப்படிச் சொல்லும். ஆனாலும், கழுதைப் புலியைச் சும்மா விடக் கூடாது. நரியாரிடம் சொன்னேன். அவர் கழுதைப் புலியிடம் நயவஞ்சகமாகப் பேசி, இன்று மாலையில் அது இங்கே வர ஏற்பாடு செய்திருக்கிறார்.''

''அப்படியா! அதைச் சும்மா விடக் கூடாது. அதன் தோலை உரித்து, உடம்பை நார் நாராகக் கிழித்துச் சரியான தண்டனை அளிக்க வேண்டும்.''

• • •

சிங்கம், புலி, நரி மூன்றும் குகையின் முன்னே நின்று கொண்டிருந்தன. சூரியன் மறைவதற்குச் சற்று முன்பு, யாரோ சிரிக்கும் குரல் கேட்டது.

''என்ன இது! எவனோ ஒரு மனிதன் சிரிக்கிறானே! யாரது?'' என்று திகிலுடன் கேட்டது சிங்கம்.

உடனே நரி சிரித்தது. ''என்ன ராஜா, உங்களுக்குத் தெரியாதா? கழுதைப் புலியின் குரல் மனிதன் சிரிப்பது போலத்தானே இருக்கும்?''

''ஆம், ஆம்.''



அந்தச் சிரிப்பு ஒலியைத் தொடர்ந்து, பெரிதாக இரைச்சல் கேட்டது. மூன்றும் சப்தம் வந்த திசையை நோக்கின.

கழுதைப் புலி முன்னால் வந்தது. அதைத் தொடர்ந்து, கரடி, யானை, காட்டு எருமை, குரங்கு, ஒட்டகச் சிவிங்கி, முயல், மான் என்று காட்டில் உள்ள மிருகங்கள் எல்லாம் ஒன்று இரண்டு வந்தன.

சிங்கத்தின் அருகிலே வந்ததும், கழுதைப் புலியைச் சுற்றி எல்லா மிருகங்களும் நின்று கொண்டன.

''ஏ, கழுதைப் புலியே, என்னை மிருக ராஜனாக ஏற்றுக் கொள்ள முடியாது என்று நீ கூறினாயாம். இது உண்மைதானா?''— சிங்கம் கேட்டது.

கழுதைப் புலி பதில் கூறியது:

''ஆம், உண்மைதான். அரசனது முக்கிய கடமை என்ன? குடிகளைக் காப்பாற்ற வேண்டியதுதானே? நீர் அகப்பட்ட மிருகங்களை அடித்துத் தின்றுவிட்டுச் சுகமாக இருக்கிறீரே தவிர, யாரையாவது காப்பாற்றியிருக்கிறீரா? வேட்டைக்காரர்கள் எத்தனையோ மிருகங்களைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றார்களே! வலையில் பிடித்து எடுத்துச் சென்றார்களே! அப்போதெல்லாம் என்ன செய்தீர்!''

''இதையெல்லாம் கேட்க நீ யார்?''

''எனக்குக் கேட்க உரிமை இருக்கிறது. நான் உம்மைப் போல் அநாவசியமாக மிருகங்களை அடித்துத் தின்கிறேனா? நீர் அடித்துத் தின்ற மிருகத்தில் மிச்சம் மீதி இருப்பதைத்தானே சாப்பிடுகிறேன்? அதனால், இந்தக் காட்டையும் என்னால் ஓரளவு சுத்தப் படுத்த முடிகிறதல்லவா?''

''உம், நிறுத்து உன் பேச்சை.''

''முடியாது. நீர் கட்டாயம் கேட்டுத் தான் ஆகவேண்டும், என் பேச்சை..... இந்தக் காட்டிலே புயலால் மரங்கள் விழுந்து எத்தனை மிருகங்கள் செத்தன! காட்டிலே நெருப்புப் பிடித்தபோது எத்தனை இளங் குட்டிகள் தீயில் வெந்து மடிந்தன! அப்போதெல்லாம் நீர் என்ன நடவடிக்கை எடுத்தீர்? நேரில் வந்து பார்க்கக் கூட இல்லையே! இப்போது மழை பெய்யாததால், தண்ணீர் கிடைக்காமல் தவிக்கிறோமே, தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்க நீர் என்ன செய்திருக்கிறீர்? ஒரு பாவமும் அறியாத மிருகங்களை அடித்துத் தின்றுவிட்டுப் படுத்துப் படுத்துத் தூங்குகிறீர், அல்லது 'ஆவ், ஆவ்' என்று கொட்டாவி விடுகிறீர். எங்களுக்காக என்ன நன்மை செய்தீர்? சொல்லும்.''

''உம், சொல்லும், சொல்லும், உடனே சொல்லும்'' என்று மற்ற மிருகங்களும் காடே அதிரும்படி கூச்சலிட்டன. சிங்கத்தின் அருகில் நெருங்கி வந்தன.

சிங்கத்தால் பதில் கூற முடியவில்லை. பேசாமல், தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு குகைக்குள் சென்று ஒளிந்து கொண்டது.

உடனே நரி, கழுதைப் புலியின் அருகிலே ஓடிவந்தது. ''சபாஷ், நான் சொல்லிக் கொடுத்தபடி சொல்லி விட்டாயே!'' என்று கூறிக் கை கொடுத்... இல்லை, இல்லை, கால் கொடுத்துப் பாராட்டியது!



காரணம் இதுதானோ?..

மணிமொழி



அலைந்து கொண்டே இருப்பதனாலே
'அலை'யெனச் சொன்னாரோ-நம்மை
மலைக்கச் செய்வது என்பதனாலே
'மலை'யெனச் சொன்னாரோ?

கண்டதை உணர்ந்து சொல்வதனாலே
'கண்'எனச் சொன்னாரோ?—தினம்
எண்ணிப் பார்த்து எண்ணம் சிறக்க
'எண்'எனச் சொன்னாரோ...?

விளக்கும் எதையும் என்பதனாலே
'விளக்கு' என்றாரோ? — நம்மை
வளைக்கும் இசைய வைத்திடுமென்றே
'இசை'யது என்றாரோ?

குதித்துக் குதித்துச் செல்வதனாலே
'குதிரை' என்றாரோ? — நல்ல
மதுரத் தமிழை மடியில் வளர்த்தது
'மதுரை' என்றாரோ?...

பலப்பல கலைகள் இருப்பதனாலே
'பலா'என் றுரைத்தாரோ?-என்றும்
நிலையில்லாமல் வளர்ந்து தேய்வதால்
'நிலா'என் றழைத்தாரோ?...






லட்சுமி ராஜரத்னம்




ரமா ராமநாதன்



உமா கல்யாணி



ரேவதி



அட்டைப்படம்

சிறுமி புவனேஸ்வரி—ஆகஸ்ட் 15-ந் தேதியே பிறந்தவர்

சிறுவன் ராமகிருஷ்ணன்


வண்ணப்படம்: உத்ரா




மணிமொழி



நா. கோ. வி.



பூரம்



கதி. கணேசன்

மேல் நாடுகளில் வேடிக்கையான நம்பிக்கைகள்!



நம் நாட்டில் சில பெரியவர்கள் இலையின் எதிரே உட்கார்ந்து சாப்பிட ஆரம்பிக்கும்போது, இலையைச் சுற்றி இலேசாகத்தண்ணீர்தெளிப்பார்கள். அதைச் சிலர் மூட நம்பிக்கை என்று நினைக்கிறார்கள். அது மூட நம்பிக்கையா? இல்லை; இலையில் உள்ள உணவை நாடி எறும்புகள் வந்து விடாமல் இருக்கவே அப்படிச் செய்கிறார்கள்.

''இரவிலே நகம் வெட்டக் கூடாது'' என்று சில பெரியவர்கள் கூறுவார்கள். ஏன்? இரவிலே நகம் வெட்டும்போது வெளிச்சம் குறைவாக இருந்தால், சதையையும் சேர்த்து வெட்டிக்கொண்டு விடுவோமே என்ற கவலையினால்தான் அப்படிச் சொல்கிறார்கள்.

காரணம் தெரியாததால் இவற்றையெல்லாம் சிலர் மூட நம்பிக்கைகள் என்று நினைத்துக் கேலி செய்கிறார்கள். ''நம் நாட்டில்தான் இப்படிப்பட்ட மூட நம்பிக்கைகள் இருக்கின்றன! மேல் நாடுகளிலெல்லாம் இப்படியா?'' என்று சிலர் உடனே மேல் நாடுகளைப் பற்றிப் புகழ ஆரம்பித்து விடுகின்றனர்.

ஆனால், மேல் நாடுகளில் இப்படிப்பட்ட நம்பிக்கைகள் இல்லையா? நிறைய இருக்கின்றன. அவை மிகவும் விந்தையாகவும் வேடிக்கையாகவும் இருக்கும்:

நல்லது நடக்காது:

- வீட்டுக்குள்ளே குடையை விரித்தால்
- சுவரிலே சாய்த்து வைத்துள்ள ஏணிக்குக் கீழே நடந்தால்
- முகம் பார்க்கும் கண்ணாடி உடைந்து போனால்
- கால் விரல் தடுக்கினால்
- உட்புறத்தை வெளிப்புறமாகவைத்து உடை அணிந்தால்
- மயில் இறகை அணிந்து கொண்டால்
- கருப்புப் பூனையை வழியிலே சந்தித்தால்
- பிரேத ஊர்வலத்தை நேரிலே பார்த்தால்
- சன்னல் வழியாக வீட்டிலிருந்து வெளியே போனால்
- உப்பைக் கீழே சிந்தினால்

துர் அதிர்ஷ்டமாம். இன்னும்,

- கத்தியை அன்பளிப்பாகக் கொடுத்தால் நட்பு முறிந்து விடுமாம்.
- பிளவுபட்ட தரையில் காலை வைத்தால், பரிட்சையில் தோல்வி ஏற்படுமாம்.
- தேநீரில் குமிழி இருந்தாலும் உடம்பு அரித்தாலும் விருந்தாளிகள் வருவார்களாம்.
- காதிலே ஒருவருக்கு எரிச்சல் இருந்தால், யாரோ அவரைப் பற்றிப் பேசுகிறார்களாம்.

நல்லது நடக்கும்:

- குதிரை லாடத்தை வழியிலே கண்டால்
- குண்டூசியைக் கீழே கிடந்து எடுத்தால்
- காப்பியிலே குமிழி இருந்தால்

அதிர்ஷ்டமாம். இன்னும்,

நட்சத்திரம் கீழே விழும்போது எதையேனும் நினைத்தால், நினைத்தபடி நடக்குமாம்!



ஒலிம்பிக் விளையாட்டு பயிற்சி அளிக்கும் ஜிம் ஓ'டோஹர்த்தி கூறுகிறார்:

"காம்ப்ளான்® ஒண்ணுதான் வலுவையும் தெம்பையும் உருவாக்குகிறது."

ஒலிம்பிக் வீரர் ஜிம்ஓ'டோஹர்த்தி, இந்தியா உள்பட உலகம் முழுவதிலுமுள்ள இளம் விளையாட்டு வீரர்களுக்கு கடினமான போட்டிகளுக்காக பயிற்சி அளித்துள்ளார். 'பிறக்கும்போதே சாம்பியன்களாக பிறப்பதில்லை அவர்கள் உருவாக்கப்படுகிறார்கள்'. என்பதை அவர் நம்புகிறார். ஒருவரை வெற்றியாளராக்குவது கட்டுப்பாடான சக்தி—மற்றும் உடல் சக்தி.

"நீச்சல் வீரர்கள், ஓட்டம் மற்றும் களவிளையாட்டு வீரர்கள், குறிப்பாக வளரும் குழந்தைகளுக்கு இதை சிபாரிசு செய்கிறேன்" என்கிறார் ஜிம் ஓ,டோஹர்த்தி. ஒரு பரிபூரண உணவாகும் காம்பளான்—எளிதில் ஜீரணிக்கவல்லது, தெம்பு அபிவிருத்தி செய்யும் ஆரோக்கிய வளர்ச்சிக்கான 23 மூலதார ஊட்டச்சத்துக்களுடன் கூடியது."

ஜிம் ஓ' டோஹர்த்தி கூறுவதை எடுத்துக் கொள்ளுங்கள். ஆரோக்கியமான முழுமையான வளர்ச்சிக்கு உங்கள் குழந்தைக்கு அன்றாடம் வழங்குங்கள் காம்ப்ளான். குழந்தைகள் விரும்பிடும் இனிய சுவைகளில் கிடைக்கிறது காம்ப்ளான்.



காம்ப்ளான்®

-திட்டமிட்ட பரிபூரண உணவு

GLC.9-2012 TAM

விஞ்ஞான விளையாட்டு

ஆர்.பி.சாரதி



'மினி' பனிப் பாறை

கடலுக்கு அடியில் பனிப் பாறைகளைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்களல்லவா?

அவை எவ்வாறு அமைந்துள்ளன? நாமே ஒரு மினி பனிப்பாறை செய்து காண்போமா?

உங்கள் வீட்டிலோ, உறவினர், நண்பர்கள் வீட்டிலோ குளிர் பதனப் பெட்டி — ஃப்ரிட்ஜ் இருக்கிறதா? ஒரு ஜாடியில் நீரைக் கொட்டிக் குளிர வையுங்கள். அந்த ஜாடி அளவுதான் உங்கள் பனிப் பாறை! ஜாடியில் உள்ள நீர் குளிர்ந்து பனிக்கட்டியாகிவிட்ட பிறகு ஜாடியை ஃப்ரிட்ஜிலிருந்து வெளியே எடுங்கள்.

ஒரு சிறிய நீர்த் தொட்டி போன்ற பாத்திரத்தில் தண்ணீர் தயாராக இருக்கட்டும்! அதுதான் நம் பனிப் பாறைக் கடல்!

ஃப்ரிட்ஜிலிருந்து வெளியே எடுத்த ஐஸ் ஜாடியை ஒரு தட்டில் அப்படியே கவிழ்த்து வையுங்கள். அதன் மீது வெந்நீரை ஊற்றுங்கள்... அவ்வளவு சிரமம் கூட வேண்டாம். ஜாடியைக் கவிழ்க்கு முன்பே வாய்ப் பகுதியின் ஓரத்தில் விளிம்பைச் சுற்றி வெந்நீர் விட்டாலும் போதும்! ஜாடிக்குள்ளிருக்கும் பனிப் பாறை வெளியே விழத் தயார்!

நம் மினி பனிப் பாறையை அப்படியே நீர்த்தொட்டியில் மெல்ல நழுவ விடுங்கள்!


இப்போது பாருங்கள் பனிப்பாறையை! தண்ணீர் மட்டத்துக்குத் தான் பாறை தெரியும்!

நீரின் மட்டத்துக்கு மேலே பனிப் பாறை தெரிகிறதா? தெரியாது!

இப்படித்தான் நீருக் கடியே பனிப் பாறைகள் பல படகு விபத்துக்குக் காரணமாய் அமைகின்றனவாம், குளிர் பிரதேசக் கடல் வெளியில்!

தொட்டியின் நீர் அளவு... உங்கள் ஜாடியின் பனிப் பாறை அளவு ஆகிய வற்றைப் பொருத்தே பனிப் பாறை வெளியே தெரிவது அமையும்!

ஃப்ரிட்ஜ் வசதி இல்லாதவர்கள், கடையில் வாங்கிய ஐஸ் கட்டியையே நீர்த் தொட்டியில் போட்டுப் பார்க்கலாமே!



தூக்கு ஐஸ் கட்டியை

ஐஸ் கட்டியைத் தூக்குவது என்ன அவ்வளவு கஷ்டமா? என்கிறீர்களா?

எனக்குத் தெரியாதா, மலையையோ, கடலடிப் பனிப் பாறையையோ கூடத் தூக்கி எடுத்து வந்து, தோளில் வைத்தால் எளிதில் தூக்கி விடுவீர்களே!

அப்படியல்ல... பாறை.. மலைமாதிரி அல்ல... சிறு சிறு பனிக் கட்டித் துண்டுகள்... மைசூர் பாகு... கேக்... சைஸ்தான்!

இரண்டு துண்டுகளை ஒரு நூல் துண்டினால் தூக்க வேண்டும். சுற்றி முடிச்சு எதுவும் போடக் கூடாது. கீழே விழாமல் தூக்க வேண்டும். 'பேலன்ஸ்' செய்து பார்க்கிறீர்களா?

அதெல்லாம் தேவையே இல்லை. பின் எப்படித் தூக்குவது?

இதோ ஒரு சுலபமான வழி!

ஒரு பனிக் கட்டித் துண்டின் மீது நூலை இரு பக்கமும் பிடித்துத் தூக்க வசதியாக வையுங்கள். சிறிது உப்புத் தூளை நூல் படும் பகுதி மீது பரவலாகத் தூவுங்கள். இன்னொரு ஐஸ் கட்டியை அதன் மீது வையுங்கள்!

சில நொடிகள் போதும். இரண்டு பனித் துண்டுகளும் ஒட்டிக் கொண்டவை போல ஆகிவிடும்! நூலின் இரு முனைகளையும் பிடித்துத் தூக்குங்கள். நூலால் கட்டாமல் இரண்டு ஐஸ் கட்டிகளையும் தூக்கவிடலாம்!



நசுக்கு தகர டப்பாவை!

நீங்கள் தகர டப்பாவை நசுக்க வேண்டும். ஆனால், கையால் நசுக்கக் கூடாது. சுத்தியாலோ, கல்லாலோ அடிக்கக் கூடாது.

இது எப்படி முடியும் என்று யோசிக்கிறீர்களா?

உங்கள் அக்காள் உதவ முடியும்... ஏன் அம்மாவும் கூடத்தான்! சிறிய அமுல் டப்பா அல்லது சிகரெட் டப்பாவைத் திறந்து கொண்டு நன்றாகப் பொங்கிய வெந்நீரை டப்பாவுக்குள் ஊற்றச் சொல்லுங்கள். ஏன், நீங்களே கூட ஜாக்கிரதையாக ஊற்றலாம். பிறகு மூடியை அழுத்திக் காற்றுப் புக இடமில்லாமல் மூடுங்கள். இப்போது அந்த டப்பாவை நசுக்க நாம் என்ன செய்ய வேண்டும்? டப்பாவைக் காலி பக்கெட்டில் வைத்து விட்டுக் குளிர்ந்த தண்ணீரை மெல்ல மெல்ல ஊற்றுங்கள்! (பானை நீர், ஐஸ் வாட்டர் மிகச் சிறப்பு!) டப்...டப்...டப்..

இப்போது டப்பா டப்பாதான்!

வெந்நீரில் வெந்நீர் கொதிக்குமா?

நம் வீடுகளில் அடுப்பில் பாலை வைத்துவிட்டுப்பொங்கி வழிந்து ஏமாறுவது எப்போதாவது நடக்கும் நிகழ்ச்சிதான். பால் பொங்கி வழியாமல் இருக்கப் பல வீடுகளில் குக்கரைப் பயன் படுத்துகிறோம். குக்கரில் மட்டும் பால் ஏன் பொங்கி வழிவதில்லை?


இதை இன்னொரு முறையில் பார்ப்போமா?

வாயகன்ற பாத்திரத்தில் வெந்நீர் தயார் செய்யுங்கள். கொதிக்கும் வெந்நீரில் இன்னொரு சிறிய பாத்திரத்தில் சிறிதளவு நீரை வைத்து வாய் அகன்ற பாத்திரத்தின் நடுவில் வைத்து விடுங்கள். தேநீர் வடிகட்டும் சல்லடையைப் போட்டு வைப்பது நல்லது. சிறிது பாத்திர நீர் சூடாகுமே தவிர கொதிக்காது! இப்படித்தான் ஆறிய காப்பியைக் கூட சூடாக்கிக் கொடுப்பார்கள் வீட்டில்!

இதே தத்துவம்தான் குக்கரிலும். பால் குக்கரின் வெளிப்புறச் சுவரை ஒட்டி வெந்நீர்! உள்ளே பால்!

சரி... கொதிக்கும் வெந்நீர்ப் பாத்திரத்தில் வைத்தால் எந்தச் சிறு பாத்திர நீரும் கொதிக்கவே கொதிக்காதா?

கொதிக்கும்! எப்போது? எப்படி? வாயகன்ற பாத்திரத்தில் கொதி நீரில் உப்புத் தூளை அள்ளிப் போடுங்கள்.



நேரம் ஆக ஆகக் கொதி நீரில் வைத்த சிறு பாத்திர வெந்நீரும் கொதிக்கும்!

சிறு பாத்திரத்துக்குப் பதிலாக வெடித்து விடாத கண்ணாடிப் புட்டியைக் கூடப் பயன்படுத்திப் பார்க்கலாம். கொதிப்பது நன்றாகத் தெரிவது மட்டுமல்ல! கொதி அடங்கிய பின் புட்டியை மூடி வேறு பாத்திரத்தில் கவிழ்த்து வைத்து விட்டுப் பனிக் கட்டியை மேலே வையுங்கள்! அல்லது ஐஸ் வாட்டரை ஊற்றுங்கள்! கொதித்தடங்கிய வெந்நீர் மீண்டும் கொதிப்பதைக் காணலாம்! வெந்நீரை ஊற்றிப் பார்த்தால் வீண்தான்!



குமரி முனை

ரமா ராமநாதன்



மூன்று கடல்கள் மோதும்முனை.
  முத்தமிழ் போற்றும் தெற்குமுனை.
தோன்றி மறையும் இருசுடரின்
  'ஜோதி'யில் உலகம் சொக்கும்முனை.

ஆர்த்தே அலைகள் ஆடும்முனை.
  அழகு தவழும் ஆசைமுனை.
தீர்த்தம் பலவும் சிந்தும்முனை.
  தீரா நோயும் தீர்க்கும்முனை.

பாவம் அனைத்தும் போக்கும்முனை.
  பார்ப்பவர் மனத்தை பறிக்கும்முனை.
தேவி குமரி கன்னிகையாய்த்
  தினமும் தவம்செய் தென்முனையே.


சுழிக்கும் கடல்கள் சூழவுண்டு.
  சுகந்தரு காற்றும் நிதமுண்டு.
குளிக்கத் துறைகள் பலவுண்டு.
  கும்பிடக் குமரிக் கோவிலுண்டு.

வந்து தங்கிச் செல்வோர்க்கு
  வரிசைக் கேற்ற இடமுண்டு.
எந்த நாளும் இனிமைதரும்
  இயற்கைக் காட்சிகள் பலவுண்டு.

கண்ணுற் காண வாரீரோ!
  கண்டு களித்துச் செல்வீரோ!
மண்ணிற் குமரித் துறையதுபோல்
  வாய்த்த முனையும் வேறுண்டோ!

ஜாவா தீவுக் குட்டிக் கதைகள்

ஸ்ரீதேவி




ஒன்று, இரண்டு, மூன்று

எலிமான் என்ற ஓர் இனம் காட்டில் வாழ்ந்து வந்தது. அது பார்ப்பதற்கு மிகவும் சிறியதாக இருக்கும். ஆனால், மிகவும் புத்திசாலி; சூழ்ச்சி மிகுந்தது!

ஒருநாள் அந்த எலிமான் ஆற்றங் கரைக்கு வந்தது. அது ஆற்றைக் கடந்து, எதிர்க்கரைக்குச் செல்ல நினைத்தது. அதற்காக அது ஒரு சூழ்ச்சி செய்தது.

அந்த ஆற்றில் இருந்த வயதான முதலையிடம் சென்று, ''நான் உனக்காக மிகவும் வருந்துகிறேன்'' என்றது.

''நீ எதற்காக, எனக்காக வருந்துகிறாய்?'' என்று கேட்டது முதலை. அதற்கு எலிமான், ''எனக்கு நிறைய உறவினர்கள் இருக்கிறார்கள். ஆனால், உனக்கு மிகவும் குறைந்த அளவில் தானே உறவினர்கள் இருக்கிறார்கள்?'' என்றது.



''எனக்கும் நிறைய உறவினர்கள் இருக்கிறார்கள். நீ புரியாமல் பேசாதே'' என்று கோபமாகக் கூறியது முதலை.

''அதை நம்புவதற்கு நான் தயாராக இல்லை'' என்றது எலிமான். பேச்சு வார்த்தை முற்றியது. இறுதியில் எலிமான் சொன்னது: ''சரி, உன் உறவினர்களை அழைத்து வந்து இக்கரையிலிருந்து, அக்கரை வரை வரிசையாக நிற்கச் சொல். நான் எண்ணிக் கொள்கிறேன்'' என்றது. முதலையும் இதற்கு ஒப்புக் கொண்டது.

முதலை நீருக்குள் சென்று தன் சுற்றத்தாரையெல்லாம் அழைத்துக் கொண்டு வந்து ஆற்றுக்குக் குறுக்காக நிறுத்தி வைத்தது. அந்த வரிசை இந்தக் கரையில் இருந்து எதிர்க்கரை வரை நீண்டது. ''நான் இப்போது எண்ணிப் பார்க்கிறேன்'' என்று கூறி எலிமான் ஒவ்வொரு முதலையின் முதுகின் மேலும் ஏறி ''1,2,3,...'' என்று எண்ணிக் கொண்டே எதிர்க் கரையை அடைந்து விட்டது. கரையேறியவுடன் முதலைகளைப் பார்த்து, ''முதலைகளா, உங்களின் எண்ணிக்கையைப் பற்றி எனக்கென்ன கவலை? நான் இந்தக் கரையை அடைவதற்காகத்தான் இப்படிச் செய்தேன். உங்களுக்கெல்லாம் நன்றி. போய் வருகிறேன்'' என்று தாவிக் குதித்து ஓடிவிட்டது!

அகப்பட்டுக்கொண்ட நாய்

ஒரு காட்டிலே புலி இரை தேடி அலைந்தது. வெகுநேரம் அலைந்தும் ஒன்றும் கிடைக்காமல் களைத்து நின்றது. அப்போது ஒரு மரத்தடியில் ஓர் எலிமான் தூங்கிக் கொண்டிருந்தது. அதைக் கண்டதும் புலிக்கு ஏகக் குஷி. அது எலிமான் மீது பாய இருந்த சமயம், மரத்தின்மேல் அமர்ந்திருந்த ஒரு பறவை, ''எலிமானே, உன்னைக் கொல்லப் புலி வருகிறது'' என்று கத்தியது. உடனே எலிமான் எழுந்து ஒரே ஓட்டமாக ஓடிவிட்டது. அதைத் துரத்திக் கொண்டு புலியும் ஓடியது.

எலிமான் இரு பெரிய மலைகளுக்கு இடையில் இருந்த ஒரு பிளவில் குதித்து விட்டது. அந்தப் பிளவு மிகவும் குறுகலாக இருந்தது. ஆகையால் புலியால் உள்ளே குதிக்க முடியவில்லை. புலி, எலிமானைத் திட்டிக் கொண்டே அங்கிருந்து சென்றுவிட்டது.

எலிமான் குதித்த பள்ளம் மிகவும் ஆழமாக இருந்தது. 'இனி எப்படி இந்தப் பள்ளத்திலிருந்து வெளியே வருவது?' என்று கவலைப்பட்டது எலிமான். அந்தச் சமயம் அங்கே ஒரு நாய் வந்து, மெல்ல எட்டிப் பார்த்தது. அந்த நாய் ஒல்லியாகவும் மிகவும் நீளமாகவும் இருந்தது. அது எலிமானைப் பார்த்து ''நீ ஏன் இந்தப் பள்ளத்தில் இருக்கிறாய்?'' என்று கேட்டது.

புத்திசாலியான எலிமான், ''இன்னும் சிறிது நேரத்தில் வானமே இடிந்து கீழே விழப் போகிறது. ஆனால், இந்தக் குழிக்குள் பதுங்கியிருந்தால் எந்தவித ஆபத்தும் ஏற்படாது. அதனால்தான் இங்கு வந்து ஒளிந்திருக்கிறேன்'' என்றது.

''அடடே! அப்படியானால் நானும் இந்தப் பள்ளத்தில் இறங்கி வரட்டுமா?'' என்று கெஞ்சிக் கேட்டது நாய்.

எலிமான், ''ஓ, தாராளமாக இறங்கி வா'' என்றது. நாய் பள்ளத்தில் குதித்தது. இரண்டும் அந்தக் குழியிலே இருந்தன. நேரம் ஓடிக் கொண்டே இருந்தது. ஆனால், எதுவுமே நடைபெறவில்லை. ''என்ன இது! இன்னும் வானம் இடிந்து விழவில்லையே! இன்னும் வெகு நேரம் ஆகுமா?'' என்று நாய் கேட்டது.



''நிச்சயம் விழத்தான் போகிறது. ஏன் தாமதமாகிறது என்பதுதான் தெரியவில்லை. எதற்கும் நான் உன் தோள்மேல் ஏறி மேல் பரப்பில் என்ன நடக்கிறது என்று பார்க்கட்டுமா?'' என்று கேட்டது எலிமான். நாயும் ''சரி'' என்றது.

நாயின் தோளில் ஏறிய எலிமான், ஒரே தாவில் வெளியே குதித்து ஓடிவிட்டது; பாவம், நாய்தான் அந்தக் குழியில் அகப்பட்டுக்கொண்டு விழித்தது!

வயதான முதலை

ஆற்று ஓரமாக இருந்த ஒரு மரத்தில் ஓர் அண்டங்காக்கை அமர்ந்திருந்தது. அது ஆற்றுக்குள் இருந்த ஒரு வயதான முதலையைக் கண்டது. உடனே அது, ''இந்த முதலையைக் கொன்றால் நாமும் நம் சொந்தக்காரர்களும் நல்ல விருந்தாகக் கொள்ளலாமே'' என்று எண்ணியது.

அண்டங்காக்கை முதலையிடம், ''முதலையே, ஏன் இந்தச் சேற்றுத் தண்ணீர் உள்ள ஆற்றிலேயே கிடக்கிறாய்? இங்கிருந்து சிறிது தொலைவிலே நிறையத் தண்ணீர் உள்ள ஆறு இருக்கிறதே! அங்கே போய்ச் சுகமாக வாழலாமே!'' என்றது.

முதலையும் மகிழ்ந்தது. பிறகு அண்டங்காக்கையையே வழிகாட்டும்படி சொன்னது.

அண்டங்காக்கை மெதுவாக மேலே பறந்தது. முதலை நடக்க முடியாமல் தரையிலேயே நடந்தது. இரண்டும் வெகு தூரத்தைக் கடந்து விட்டன. முதலையால் மேலும் நடக்க முடியவில்லை. களைத்து விட்டது. அதனால் குளிர்ந்த நீரைவிட்டு வெயிலில் வெகு நேரம் தாக்குப் பிடிக்க முடியவில்லை. அது அண்டங்காக்கையிடம், ''நாம் போக வேண்டிய ஆறு இன்னும் தூரத்தில் உள்ளதா? என்னால் நடக்க முடியவில்லையே!'' என்று கேட்டது.

அண்டங்காக்கை ''இல்லை, இன்னும் கொஞ்ச தூரம்தான். நாம் ஆற்றுக்கு மிக அருகில் வந்து விட்டோம்.'' என்றது. முதலையும் மெதுவாக நடந்தது. சிறிது நேரத்தில் அது சோர்ந்து படுத்து விட்டது. ''என்னால் இனி நடக்க முடியாது'' என்றது.

அண்டங்காக்கை பெரிதாகச் சிரித்தது. ''உன்னால் நடக்க முடியாது என்பது எனக்குத் தெரியும். இங்கு ஆறு எதுவும் கிடையாது. உன்னால் இந்த வெய்யிலைத் தாங்க முடியாது. நீ இப்படியே மயங்கி இறந்து விடுவாய். அப்புறம் நான் என் சொந்தக்காரர்களுடன் சேர்ந்து உன்னை ருசித்துச் சாப்பிடுவேன்'' என்று கூறிவிட்டு, அது தன் சுற்றத்தாரை அழைத்து வரச் சென்றது.

முதலை மயங்கிக் கிடந்தது. அப்போது அந்த வழியாக மாட்டுவண்டியில் ஒரு கிராமத்தான் வந்தான். சத்தத்தைக் கேட்ட முதலை மெல்லத் தலையைத் தூக்கிப் பார்த்தது. பிறகு அந்த கிராமத்தானிடம் முதலை தன்னை

அண்டங்காக்கை ஏமாற்றிய விதத்தைக் கூறியது. தன்னை அவனுடைய வண்டியில் ஏற்றிக் கொண்டு போய், தான் முன்பிருந்த ஆற்றிலேயே விட்டுவிடும்படி கெஞ்சிக் கேட்டது. கிராமத்தானும் முதலையின் நிலைகண்டு இரங்கி அதனை வண்டியில் அழைத்துச் சென்ருன். ஆற்றை அடைந்ததும் முதலை, ''என்னை ஆற்றங்கரையில் இறக்க வேண்டாம். ஆற்றுத் தண்ணீரிலேயே தயவு செய்து இறக்கி விடு'' என்றது.



கிராமத்தானும் அவ்வாறே தன் மாட்டு வண்டியை ஓட்டினன். தண்ணீருக்குள் குதித்த முதலை 'லபக்'கென்று மாட்டின் காலைப் பிடித்துக் கொண்டது. கிராமத்தான் செய்வதறியாது புலம்பினன். அப்போது அங்கு தண்ணீர் குடிக்க வந்த முயல், மாட்டை அடித்து ஓட்ட வைத்திருக்கும் குச்சியால் முதலையின் வாயைப் பார்த்துப் பலமாக அடிக்கும்படி கூறியது. அவனும் அவ்வாறே செய்தான். முதலை மாட்டின் காலை விட்டுவிட்டது.

முதலைக்கு முயலின் மேல் ரொம்பக் கோபம். முயல் மறுபடி நீர் அருந்த வரும்போது பழிவாங்க வேண்டும் என்று நினைத்தது.

மறுநாள் முயல் நீர் குடிக்க வரும் நேரத்தில், முதலை ஆற்றின் கரையில் படுத்திருந்தது. அதன் வாலும், முகமும் மட்டுமே நீருக்குள் அமிழ்ந்திருந்தன. முதுகு பாறைபோல் மேலே தெரிந்தது. முயல் இதைக் கண்டதும், ''இது மரமாக இருந்தால் நீருக்கு அடியில் மிதந்து செல்லும்'' என்று கூறியது. இதைக் கேட்ட முதலை அவ்வாறே நீருக்குள் மூழ்கியது. உடனே முயல் தண்ணீர் குடித்து விட்டு, ''அடே முட்டாள் முதலையே, உன்னல் என்னை ஏமாற்ற முடியாது'' என்று கூறிவிட்டு ஓடியது.

மறுநாளும் முயல் தண்ணீர் அருந்த வந்தது. முதலை முதல் நாள் கிடந்ததைப் போலவே கிடந்தது. முயலும் முதல் நாள் கூறியது போலவே, ''இது கட்டையாக இருந்தால் நீருக்குள் அமுங்கிவிடும்'' என்றது. அதைக் கேட்டும் முதலை பேசாமல் இருந்தது. முயல் அதைக் கட்டை என்றே நினைத்துத் தண்ணீர் குடித்தது. முதலையோ, அதனை 'லபக்'கென்று பிடித்துவிட்டது. அதை வாய்க்குள் வைத்துக் கொண்டு, தான் முயலைப் பிடித்ததைப் பற்றிக் கூறிப் பெருமைப் பட்டுக் கொள்ள நினைத்தது. எனவே ஆற்றுக்குள் சென்றது. ''ஹி, ஹி, ஹி'' என்று கூறிச் சிரித்தது. முயல் முதலையிடம், ''ஹி, ஹி, ஹி என்றுதான் எல்லோரும் சிரிப்பார்கள். ''ஹா, ஹா, ஹா'' என்று உன்னல் சிரிக்க முடியுமா?'' என்று ஏளனமாகக் கேட்டது.

உடனே முதலை ''ஏன் முடியாது? ஹா, ஹா, ஹா'' என்று சிரித்தது. அப்போது அதன் வாய் நன்ருக விரிந்தது. அந்தச் சமயம் பார்த்து முயல் முதலையின் வாயிலிருந்து குதித்துத் தப்பித்து விட்டது. முதலை ஏமாந்து போனது!

சொல்லிப் பாருங்கள்

இது யாரு தைச்ச சட்டை
எங்க தாத்தா தைச்ச சட்டை

அந்த ஆமணக்கிலே, சித்தாமணக்கிலே
எட்டு ஆமணக்கிலே
நாலு ஆமணக்கு உனக்கு
நாலு ஆமணக்கு எனக்கு

நம்ம ஊர்த்தச்சன் நல்ல தச்சன்
தோலூர்த் தச்சன் சொத்தைத் தச்சன்

—மைதிலி ராகவன்



சார் தபால்



எடுத்தவுடனே நேதாஜி சுபாஷ் போஸின் படக்கதை. தன்னலமற்ற அவரைப் போன்ற ஒரு தலைவரை இனி எப்போது காண்போமோ?

க. சுப்பராயன் மேலூர்.

படத்தைப் பார்த்துத் திருக்குறளைக் கண்டுபிடித்து எழுத உதவும் புதிர்கள் மிகவும் பயனுள்ளவை. என்றென்றும் நம் மனத்திலே அக்குறள்கள் நிற்கும். மறக்கவே மறக்காது. இப்படித் தொடர்ந்து வெளியிடுங்கள்.

த. கருணானந்தம், சிவகங்கை.

'கோகுலம்' கைக்கு வந்ததும், 'குப்புசாமி அப்புசாமி' உள்ள பக்கத்தைத்தான் புரட்டுவேன். அதற்குப் பிறகுதான் மற்றவற்றைப் படிப்பேன்.

என்.எஸ்.முரளி(2606) செங்கற்பட்டு.

ஜூன் கோகுலம் படித்தேன். குழந்தைகளுக்கு மனமகிழ்ச்சி தரும் வகையில் அத்தனையும் சிறப்பாக உள்ளன.

கூத்தபிரான், சென்னை—20.

'செல்வனின் சிபாரிசு' படிக்கப் படிக்க என் நெஞ்சம் உருகிவிட்டது. என்னை மீறிக் கண்களில் நீர் ததும்பியது. அப்படி மனத்தைத் தொடும்படி வெ. நல்லதம்பி எழுதியிருக்கிறார். இப்படிப்பட்ட கதைகளைச் சிறுவர்கள் படித்தால், அவர்கள் மனம் இளகி, சேவை மனப்பான்மை உண்டாகும்.

எஸ். ராமனுதன்,
காளப்பநாயக்கன்பட்டி

'அண்டார்டிகாவில் அய்யாசாமி' படுஜோர். சிரித்துச் சிரித்து வயிறு புண்ணாகி விட்டது.

எஸ்.சந்திரசேகரன், செகந்திராபாத்.

(இந்தக் கதையைப் பாராட்டி ஏராளமான கடிதங்கள் வந்திருக்கின்றன. —ஆசிரியர்)

ஹாஸ்யம் நிரம்பிய நாடோடிப் பாடல்கள் கனியமுதாய் இனித்தன. தொடர்ந்து வெளியிட்டு எங்களை மகிழ்ச்சிக்குள் ஆழ்த்துங்கள்.

ஆர். கே. பிரபா, தேவி, சுபா, சுனிதா
மேலகிருஷ்ணன்புதூர்.

எங்கள் அம்மா கோகுலத்தை வாங்கிவந்து, அதில் இருந்த 'சின்னான் கதை'யைப் படிக்கச் சொன்னார்கள். கதை வெகு ஜோர்.

சுகன்யா ரங்கநாதன், சுனிதா ரங்கநாதன். சென்னை—17.

'பாட்டியின் வீட்டில் பலே திருடன்' என்னைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைத்தது.

சு. ஆயப்பன் (3194).
திருமேனியார் கோவில்.

சென்ற இதழில் வந்த விளையாட்டுக்கள் அத்தனையும் அருமை. அனைத்தையும் விளையாடி மகிழ்ந்தேன்.

த. பாக்கியலெட்சுமி (458) பணகுடி.

எனக்கு மிகவும் பிடித்த பகுதி 'கேள்வி நேரம்'தான். அதைப் படிப்பதற்கு முன்பு இருந்த அறிவைவிட, படித்த பின்பு ஓரளவு வளர்ந்திருப்பதாக உணருகிறேன். இது உண்மை. வெறும் புகழ்ச்சி இல்லை.

ம. அம்பலவாணன், மதுரை—5.


'பிருந்தாவனம் பகுதி'யில் அப்பப்பா, எப்படி எப்படியெல்லாம் கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர்கள் புகுந்து விளையாடியிருக்கிறார்கள்! அருமை! அருமை!

டி. பாஸ்கரன், திருச்சி—2.

பரீட்சையில் தேறாமல் பழைய வகுப்பிலேயே இருக்கும்படி ஆகிவிட்ட ஒரு சில மாணவ, மாணவிகளுக்குத் தாங்கள் கூறிய அறிவுரையும் யோசனையும் உண்மையிலேயே பாராட்டும்படியாக இருந்தன. 'கோகுலம்' வாசக சிறுவர் சிறுமியர்களைத் தாங்கள் தங்கள் குழந்தைகளைப் போலப் பாவித்து அவர்கள் வாழ்வில் முன்னேற எடுத்துக் கொண்டு செயல்படும் விதம், அடேயப்பா...! மெய்சிலிர்க்கச் செய்கிறது எனக்கு.

பிரசன்ன ராஜன், கும்பகோணம்—1.

படித்த புத்தகங்கள்





பாடங்கள்

சென்ற ஜூன் மாதம் 14ம் தேதி மாலை நேரம். நானும் என் அப்பாவும் மயிலாப்பூர் போயிருந்தோம். அப்போது சில பெரியவர்களும் என் போன்ற சில சிறுவர்களும் சீனிவாச சாஸ்திரி அரங்கத்திற்குள் நுழைவதைக் கண்டோம்.

''அங்கு என்ன விசேஷம்?'' என்று என் அப்பா கேட்டார்.

''ஒரு பாட்டுப் புத்தகத்தை ஒரு சின்னப் பெண் வெளியிடுகிறாளாம்'' என்றார் ஒருவர்.

உடனே, என்னை அழைத்துக் கொண்டு என் அப்பா அரங்கத்திற்குள் சென்றார்.

''கவிஞர் 'இளையவன்' எழுதிய 'பாடங்கள்' என்ற சிறுவர் கவிதை நூலை இப்போது மயிலை லேடி சிவசாமி ஐயர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி செல்வி என். கனகலட்சுமி வெளியிடுவார்'' என்று தலைவர் அறிவித்தார். உடனே அந்தப் பெண் நூலை வெளியிட்டாள். பல அறிஞர்கள் அந்த நூலையும், கவிஞர் இளையவன் அவர்களையும் பாராட்டிப் பேசினார்கள்.

ஏற்கெனவே இளையவன் அவர்கள் எழுதிய பல கவிதைகளைப் பத்திரிகைகளில் படித்து மகிழ்ச்சி கொண்டிருக்கிறேன். அதனால் இந்தப் புத்தகத்தை அங்கேயே வாங்க வேண்டுமென ஆசைப்பட்டேன். என் ஆவலை அறிந்த என் அப்பா, உடனே அந்தப் புத்தகத்தை வாங்கிக் கொடுத்துவிட்டார்.

வீட்டுக்கு வந்ததும் சாப்பிட்டுவிட்டு அந்தப் புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்தேன். ஆஹா! ஒவ்வொரு பாட்டுமே அருமையாக இருந்தது!

கண்ணன் குளிப்பதற்காக, பீமன் ஒரு பெரிய பானையில் குடம் குடமாகத் தண்ணீர் ஊற்றுகிறார். அடுப்பின் மீது குடத்தை வைத்து, காட்டு விறகுகளைப் போட்டுக் கொளுத்துகிறார். வெகு நேரமாகியும் நீர் சுடவில்லை.

பீமனுக்கு ஒன்றும் புரியவில்லை: வருத்தப்படுகிறார். அப்போது கண்ணன் பானையில் உள்ள நீரைக் கீழே கொட்டச் சொல்கிறார்.

பீமன் பானையைக் கவிழ்க்கிறார். நீர் 'கொட கொட' என்று கொட்டுகிறது. அப்போது உள்ளே இருந்த இரண்டு தவளைகளும் நீருடன் வெளியில் வந்து விழுகின்றன!

பானையினைக் கவிழ்க்கையிலே
பாய்ந்து இரண்டு தவளைவர,
ஏன் தண்ணீர் சுடவில்லை?
தெரிந்து கொள்கிறான்!
எம்பெருமான் கருணை என்று
புரிந்து கொள்கிறான்!

மாடியிலிருந்து ஒரு சிறுவன் பார்க்கிறான். அவனுக்கு என்ன என்ன தெரிகின்றன? அவனே கூறுகிறான்:

மாடியிலிருந்து பார்க்கின்றேன்
  மாதா கோவில் தெரிகிறது.
கோடியில் என்ன தெரிகிறது?
  கோவில் கோபுரம் தெரிகிறது.
இங்கே என்ன தெரிகிறது?
  இஸ்லாம் கோவில் தெரிகிறது.
எங்கள் வீட்டு மாடியிலே
  எல்லாம் ஒன்றாய்த் தெரிகிறது!

உயர்ந்த நிலையிலே, உயர்ந்த உள்ளத்துடன் பார்ப்பவர்களுக்கு மக்கள் அனைவரும் ஒன்றுதானே! மதத்தின் பெயரால் சண்டை போட்டு ஒருவரை ஒருவர் வெறுக்க மாட்டார்கள் என்ற உண்மையை எவ்வளவு அழகாகக் கூறுகிறது இந்தப் பாட்டு!

இம்மாதிரி 23 பாடல்கள் கொண்ட அருமையான புத்தகம் இது.

ஓவியர் நடனம் வரைந்திருக்கும் படங்கள் அபாரம். எல்லாமே சிரிப்பூட்டும் படங்கள்.

வெளியிட்டோர்: எஸ். பவானி, 5, தானப்ப முதலி தெரு, சென்னை-4. விலை ரூ. 3.

—ஆர். ராஜா, சென்னை-17

பம்பாய்ப் பையன்

கோடை விடுமுறையில் சென்னைக்கு வந்திருந்தபோது, நானும் என் நண்பனும் தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கத்தில் வேலை பார்க்கும் அவன் மாமாவைக் காணச் சென்றோம். வேலை முடிந்து அவர் வரும் வரை அங்கிருந்த புத்தகங்களைப் பார்த்துக்கொண்டிருந்தோம். அவற்றில் 'பம்பாய்ப் பையன்' என்ற புத்தகம் என்னைக் கவர்ந்தது. எடுத்துப் புரட்டினேன். உள்ளே ஒன்பது கதைகள் இருந்தன. படங்களுடன் இருப்பதைக் கண்டதும் உடனே வாங்கினேன்; படித்தேன்.

முதல் கதையான 'பம்பாய்ப் பையன்' என்பதே புத்தகத்தின் பெயராக அமைந்திருக்கிறது. 'யாருக்குத் தீபாவளி?' என்ற கதையில் 'ராமு சொல்கிறான்', 'முருகன் சொல்கிறான்' என்று அவரவர் கூறுவது போலவே கூறிக் கதையை உருவாக்கியிருக்கிறார். இதில் ஏழைக்கும் பணக்காரருக்கும் உள்ள ஏற்றத் தாழ்வே மையக் கருத்தாக உள்ளது.

இந்தப் புத்தகத்தில் எனக்கு மிகவும் பிடித்தவை: 'கருமி கந்தப்பர்' 'பல்லி விழுந்தது!'

கந்தப்பர் மிகவும் சிக்கனமானவர். அனாவசியமாகச் செலவு செய்ய மாட்டார். அதனால் அவரைக் 'கருமி கந்தப்பர்' என்றே பலரும் அழைத்தார்கள். அவர் இறக்கும்போது, தன் மகனை அழைத்து, ''இரும்புப் பெட்டியில் பணமும் ஒரு குறிப்பும் இருக்கின்றன. அந்தக் குறிப்பில் கண்டபடி நீ நடக்க வேண்டும்'' என்று சொல்கிறார்.

அவர் இறந்த பிறகு இரும்புப் பெட்டியில் உள்ள குறிப்பைப் படித்துப் பார்க்கிறான் அவருடைய மகன்.

எடிசன் பாராட்டிய சிறுமி




எடிசன் எப்பேர்ப்பட்டவர்! நூற்றுக் கணக்கான கண்டு பிடிப்புகளுக்குச் சொந்தக்காரர். அவர் ஒரு நாள் மாலையில், காலார நடக்கலாம் என்று தமது பண்ணையின் பக்கம் போனார். அங்கு ஒரு சிறிய கன்றுக்குட்டி, இருந்த இடத்தை விட்டு அசையாமல் நின்று கொண்டிருந்தது. எல்லாப் பசுக்களும், கன்றின் தாய் உட்படக் கொட்டிலை அடைந்தாயிற்று. கன்றுக்குட்டி அதே இடத்தில் சத்தம் போட்டுக் கொண்டிருந்தது. பார்த்தார் எடிசன். கன்றுக்குட்டியின் கயிற்றைப் பிடித்து இழுத்தார். அது துளியும் அசைந்து கொடுக்கவில்லை. அப்போது அங்கு ஆறு வயது நிரம்பிய சிறுமியொருத்தி வந்தாள். ''ஸார்! நான் இதைக் கொட்டிலில் அடைக்கிறேன்'' என்றாள்.

எடிசனுக்கு ஒரே ஆச்சரியம். இந்தப் பெண் என்ன செய்யப் போகிறாள்! சிறுமி கன்றுக்குட்டியிடம் போய், நின்று கைவிரல்களில் இரண்டை அதன் வாய்க்குள் விட்டாள். பின் நடந்தாள். கன்றுக்குட்டியும் அவள் பின்னே அந்த விரல்களைச் சப்பிக் கொண்டே போய்ச் சேர்ந்தது. எடிசன் மனம் திறந்து அந்தச் சிறுமியைப் பாராட்டினார்.

— எம். கலாவதி

17 ஆண்டுகளாக 100க்கு 100 பெறும் பள்ளி!



கடந்த பதினேழு ஆண்டுகளாகத் தொடர்ந்து, ஒவ்வோர் ஆண்டும் எஸ்.எஸ்.எல்.சி.தேர்வில் 100க்கு 100 சதம் வெற்றி பெற்றுள்ளது ஒரு மேல்நிலைப் பள்ளி. தேர்வில் கடைசி மாணவன்கூட 500க்கு 300 மதிப்பெண்கள் பெற்று முதல் வகுப்பில் தேறுகிற பெருமை இப்பள்ளிக்கு உண்டு. நம் மாநிலத்திலேயே இத்தனை ஆண்டுகளாகத் தொடர்ந்து முதலிடம் பெற்று வருகின்ற இப்பள்ளியின் சாதனை இத்துடன் நிற்கவில்லை.

இந்த ஆண்டு பிளஸ் 2 தேர்விலும் 100க்கு 100 வெற்றி பெற்றுள்ளது! இதுதான் முதன் முதலாக இப்பள்ளி அனுப்பிய பிளஸ் 2 செட் என்பது குறிப்பிடத் தக்கது. இத்தேர்விலும் கடைசி மாணவன்கூட 60 சதவிகிதத்துக்கு மேல் பெற்று முதல் வகுப்பில் தேறியுள்ளான்!

ஆக, எஸ். எஸ். எல். சி.யிலும் 100க்கு 100. பிளஸ் 2விலும் 100க்கு 100. இப்படி இந்த ஆண்டு இரட்டைச் சதம் போட்டுள்ள மேல்நிலைப் பள்ளி,

மத்திய மேல்நிலைப் பள்ளி
ஏ. நாகூர், பொள்ளாச்சி

இப்பள்ளியின் தலைமை ஆசிரியர், திரு ஆர். கே. இராமசாமி அவர்களுக்கும், அவருடன் மிகுந்த கருத்துடன் கல்விப் பணியை ஆற்றி வரும் ஆசிரியப் பெருமக்களுக்கும், தேர்வுக் களத்தில் நின்று வெற்றி வாகை சூடிய மாணவ மணிகளுக்கும் நமது பாராட்டுக்கள்.

இப்பள்ளி தொடர்ந்து வெற்றிமேல் வெற்றி பெற்றுத் திகழ வாழ்த்துகிறோம்.

கந்தப்பர் இளமையில் கல்வி கற்க முடியாமல் துன்பப் பட்டதையும், அவரது தமிழாசிரியரா யிருந்த தங்கவேலரின் உதவியால் படித்து முன்னேறியதையும் விளக்கமாக எழுதி, 'இந்தப் பணத்திலே ஒரு பள்ளிக்கூடம் கட்டி, அதற்குத் தமிழாசிரியர் தங்கவேலரின் பெயரை வைக்க வேண்டும்' என்றும் குறிப்பிட்டிருந்தார். அவர் விருப்பத்தை மகன் நிறைவேற்றினான்.

கந்தப்பர் கருமியல்ல; சிக்கனமாக வாழ்ந்து, சேமித்து நல்லதொரு செயலைச் செய்யக் காரணமா யிருந்தவர் என்பதை அறியும்போது மகிழ்ச்சியாக இருந்தது.

'பல்லி விழுந்தது' என்ற கதை வேடிக்கையாகவும், மூட நம்பிக்கையைக் கேலி செய்வதாகவும் இருக்கிறது.

சங்கரன் தனது வலது கையில் பல்லி விழுந்ததாக அப்பாவிடம் கூறுகிறான். உடனே அவர் பஞ்சாங்கத்தை எடுத்துப் 'பல்லி விழும் பலன்' என்ற பகுதியைப் பார்க்கிறார்.

'வலக்கை — பெரு மரணம்' என்று இருந்தது. அன்று முதல், சங்கரனைப் பள்ளிக்கு அனுப்பாமல் வீட்டிலேயே பத்திரமாக வைத்துப் பாதுகாத்து வருகிறார். இது சங்கரனுக்குப் பிடிக்கவில்லை. பள்ளிக்குச் சென்று படிக்க வேண்டும் என்று துடி துடிக்கிறான்.

சங்கரனின் வேதனையை அறிந்த அவனுடைய தாய், ஒரு தந்திரம் செய்கிறாள். அதன்படி சங்கரன் ஒரு நாள் அவன் அப்பாவிடம் ஓடிச் சென்று, ''அப்பா, அப்பா, என் வலது காதின் மேல் பல்லி விழுந்தது'' என்கிறான்.

உடனே அவர் பஞ்சாங்கத்தை எடுத்துப் புரட்டுகிறார்.

'வலக்காது — தீர்க்காயுசு' என்று இருக்கிறது.

''கடவுள்தான் பல்லியாக வந்து சங்கரனின் வலது செவியில் விழுந்திருக்க வேண்டும்'' என்று அப்பா மகிழ்ச்சி அடைகிறார். பிறகு...? சங்கரனைப் பள்ளிக்கு அனுப்புகிறார். அவன் மகிழ்ச்சியோடு பள்ளி செல்கிறான்.

இப்படி ஒவ்வொரு கதையும் நல்ல முறையில் எழுதப் பட்டிருக்கிறது. இந்தக் கதைகளை எளிய நடையில் எழுதியிருக்கிறார் இதன் ஆசிரியர் ஜெ. எத்திராஜன்.

கிடைக்குமிடம்: தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், 107, பெரிய தெரு சென்னை-5. விலை ரூ. 6.

— ஏ. எல். இராமசாமி, சடலூர்





எனக்குப் பிடித்தது...?

கதி. கணேசன்

ஆனை பெரிய மிருகந்தான்
அய்யோ, எனக்குப் பிடிக்காது!

சிங்கம் வலிய மிருகந்தான்.
சேச்சே, எனக்குப் பிடிக்காது!

புலியும் கொடிய மிருகம்தான்.
போ, போ, எனக்குப் பிடிக்காது!

கரடி காட்டு விலங்குதான்.
காணக் கூடப் பிடிக்காது!

மாடு வீட்டுப் பிராணிதான்.
மருண்டு பாயும்; பிடிக்காது!

என்ன மிருகம் பிடிக்குமென
என்னைக் கேட்டால் சொல்லிடுவேன்.

சின்னஞ் சிறிய மிருகம்தான்
செவிகள் நீண்ட மிருகம்அது.

விரைந்து ஓடும் மிருகம்தான்
வீட்டில் கூட வளர்த்திடலாம்.

பஞ்சு உடலைக் கொண்டதுதான்
பதுங்கிப் பதுங்கிச் செல்லும்அது.

தாவித் திரியும் மிருகம்தான்
தழுவி நெஞ்சில் அணைத்திடலாம்.

பயமே இன்றிப் பழகிடலாம்.
பரம சாது மிருகம்அது.

முயன்றால் கண்டு பிடித்திடலாம்.
முயல்தான் எனக்குப் பிடித்ததுவே!







காட்சி—1

இடம்: ரவியின் வீடு.
பாத்திரங்கள்: ரவி, அவன் அப்பா, தங்கை மாலா.

அப்பா: ரவி! டேய் ரவி!
ரவி: என்னப்பா?
அப்பா: இன்னும் நீ குளிக்கல்லே; சாப்பிடல்லே; இப்போ மணி என்ன தெரியுமா?
ரவி: (தன் கையில் கட்டியுள்ள கடிகாரத்தைப் பார்த்து) இன்னும் ஏழரைகூட ஆகல்லியே அப்பா.
மாலா: ஏழரையாகி எவ்வளவு நேரமாச்சு! இப்போ மணி எட்டரை. ரேடியோவிலே இங்கிலீஷ் நியூஸ் கூட வாசிச்சு முடிச்சாச்சு. ரவி, உன் கடிகாரத்தைச் சரியாகப் பாரு.
ரவி: எனக்கென்ன கடிகாரம் பார்க்கத் தெரியாதா? சரியாத்தான் பார்த்தேன். இதோ சின்ன முள்ளு ஏழுக்கும், எட்டுக்கும் நடுவிலே இருக்கு. பெரிய முள்ளு ஆறிலே இருக்கு.
அப்பா: அப்படின்னு உன் கடிகாரத்தைக் காதிலே வச்சுப் பாரு.
ரவி: (கடிகாரத்தைக் காதிலே வைத்துப் பார்த்துவிட்டு) அடடே, இது என்ன ஓடல்லே? நின்னு போச்சு!
அப்பா: ரவி, நாம நாலுவேளையும், வேளை தவறாமே சாப்பிடுறோம். ஆனால், கடிகாரத்துக்கு ஒரு நாளைக்கு ஒருவேளை சாவி கொடுக்க உன்னாலே முடியல்லே. சரி, நீ எப்போ சாவி கொடுத்தாய்?
ரவி: அதுவா,.... நேத்துக் காலையிலே.. இல்லே, இல்லே... முந்தா நாள் காலையிலே சாவி கொடுத்தேன்....
அப்பா: சரி, அதுக்கு முந்தி எப்போ சாவி கொடுத்தாய்?
ரவி: அதுக்கு முந்தின இரவு படுக்கப் போகையிலே சாவி கொடுத்தேன்.
மாலா: மாமா உனக்குக் கடிகாரம் வாங்கிக் கொடுத்தாலும் கொடுத்தாரு. குளிக்கிற நேரம் தவிர எந்த நேரமும் அதை ஸ்டைலாகக் கட்டிக்கிட்டே இருக்கே.
அப்பா: வீட்டுக்கு வந்ததும், கடிகாரத்தைக் கழற்றி ஓரிடத்திலே பத்திரமா வைக்கணும். கண்ட கண்ட நேரத்திலே சாவி கொடுக்கிறது, ரெண்டு மூணு நாளைக்குச் சாவி கொடுக்காமலே இருக்கிறது— இதெல்லாம் சரியில்லே. எவ்வளவு ஒசத்தியான கடிகாரமும் கெட்டுத்தான் போகும்.
மாலா: ரவி, நம்ம அப்பாவுடைய கடிகாரம் ஒரு நாளாவது தப்புமணி காட்டியிருக்கா? காலையிலே ரேடியோவிலே ஏழு மணி என்று சொன்னவுடனே, அப்பா கடிகாரத்துக்குச் சாவி கொடுத்திடுவாங்க. ஒருநாள்கூட நின்னதுமில்லே; தப்பு மணி காட்டினதுமில்லே.
அப்பா: சரி, சரி. ரவி, நீ போய்க் குளித்துச் சாப்பிடு.
மாலா: ஆமா ரவி, பள்ளிக்கூட பஸ் வந்துடும். சீக்கிரம் தயாராகணும்.

காட்சி—2

இடம்: ரவி வீடு.
பாத்திரங்கள்: ரவி, மாலா, ரவியின்

அண்ணன், அப்பா, அம்மா.

(ரவி குளித்துச் சாப்பிட்டுவிட்டுச் சீருடை அணிந்து புத்தகங்களின் முன்பு அமர்ந்து, அட்டவணையைப் பார்த்துப் புத்தகங்களை எடுத்துப் பெட்டியில் வைக்கிறான்.)

ரவி: முதல் பீரியட் இங்கிலீஷ்... இரண்டாவது பீரியட் தமிழ்... மூன்றாவது பீரியட் சயின்ஸ் (விஞ்ஞானப் புத்தகத்தைத் தேடுகிறான்.) எங்கே போச்சு என் சயின்ஸ் புத்தகம்? ...சேச்சே, இந்த வீட்டிலே எதை வச்சாலும், வச்ச இடத்திலே இருக்கிறதில்லே... யார் எடுத்தது?

(மாலா புத்தகங்கள் வைக்கும் தட்டைக் கலைத்துப் பார்க்கிறான்.)

மாலா: என்ன ரவி, நான் அழகா அடுக்கி வச்சிருக்கேன். இப்படிக் கலைச்சிட்டியே!

ரவி: என் சயின்ஸ் புத்தகத்தைக் காணோம்.

மாலா: நீ எங்கே எறிஞ்சியோ?

ரவி: ஒருவேளை... அண்ணா புத்தகங்களோடே கலந்து இருக்குமோ?

(அண்ணா புத்தகங்கள் வைக்கும் அலமாரியையும் கலைத்துப் பார்க்கிறான்.)

அண்ணன்: டேய், டேய், ரவி! என்னடா இது! என் காலேஜ் புத்தகங்களையெல்லாம் கலைச்சுப் போடுகிறாய்!

ரவி: என் சயின்ஸ் புத்தகத்தைக் காணோம். ... ஐயோ, என் சயின்ஸ் புத்தகத்தைக் காணோமே! சயின்ஸ் வாத்தியார் மகாக் கோபக்காரர். வெளியே துரத்திடுவாரே?

(ஸ்கூல் பஸ் ஹாரன் சப்தம் கேட்கிறது.)

மாலா: (தன் புத்தகப் பெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டு) ஸ்கூல் பஸ் வந்தாச்சு. சீக்கிரம் வா, ரவி.

ரவி: ஐயோ, புத்தகம் இல்லாமப் போனா சயின்ஸ் வாத்தியார் உதைப்பாரே! வெளியே அனுப்பிடுவாரே!

(பரபரப்பாக அறை முழுவதும் தேடுகிறான். மீண்டும் ஹாரன் ஒலி கேட்கிறது.)

மாலா: ரவி, இரண்டாம் தடவை ஹாரன் அடிச்சாச்சு, சீக்கிரம் வா.

(மாலா முன்னால் ஓட, ரவியும் புத்தகப் பெட்டியுடன் ஓடுகிறான். சிறிது தூரம் ஓடியவன் திரும்பவும் வீட்டுக்குள் வருகிறான்.)

ரவி: (நடுக்கத்துடன்) ஐயையோ! சயின்ஸ் புத்தகம் இல்லாமப் போகிறதா? புத்தகம் இல்லாதபோனால், மொத்து மொத்துன்னு மொத்திடுவாரு சயின்ஸ் வாத்தியார்.

(மூன்றாவது முறையாக ஹாரன் ஒலி கேட்கிறது.)

ஐயோ! ஐயோ! மூணாவது தடவை ஹாரன் அடிச்சுட்டானே!

(முன்னும் பின்னுமாக நாலைந்து முறை ஓடுகிறான்.)

சேச்சே, புத்தகம் இல்லாமே போகப் படாது.

(மீண்டும் தேடுகிறான்.)

அப்பா: டேய் ரவி, இன்னும் பள்ளிக்கூடம் போகல்லியா? என்னடா தேடுகிறாய்?

ரவி: அப்பா, என் சயின்ஸ் புத்தகத்தைக் காணோம்பா.

அம்மா: ஆமா, கண்ட கண்ட இடத்திலே புத்தகங்களை விசிறி எறியுறது. தேவைங்கிற போது, அதுகளெல்லாம் ஓடிவந்து உன் முன்னாலே நிற்குமாக்கும். எங்கே போட்டியோ?.... ஏண்டா ரவி, பழைய பேப்பரெல்லாம் அடுக்கி வச்சிருக்கே, அங்கே தேடிப் பார்த்தியா?

(உடனே, ரவி ஓடிப் போய்ப் பழைய பேப்பர்கள் வைக்கும் இடத்தில் தேடிப் பார்க்கிறான்.)

ரவி: ஆ! இதோ இருக்குது, என் சயின்ஸ் புத்தகம்! ஆமா, யார் இதை இங்கே ஒளிச்சு வச்சது?

அம்மா: யாரும் ஒளிச்சு வச்சிருக்க மாட்டாங்க. காலையிலே முனியம்மா வீடு பெருக்குற போது இது கீழே கிடந்திருக்கும். அங்கே எடுத்து வச்சிருப்பாள்.

ரவி: ஓ... முனியம்மாவாம் முனியம்மா.... சனியம்மா!

அப்பா: அவளை ஏண்டா திட்டுறாய்? இதையும் சேர்த்துப் பெருக்கிக் குப்பைத் தொட்டியிலே போடாமல் போனாளே...!

ரவி: இப்போ நான் என்ன பண்றது? ஸ்கூல் பஸ் போயிடுத்தே...!

அப்பா: பஸ் போனால் என்னடா? கால் இருக்கில்லே? நடந்தே பள்ளிக்கூடத்துக்குப் போ... உம்... ஓடு.

(ரவி பெட்டியுடன் ஓடுகிறான்.)

காட்சி 3

இடம்: ரவியின் வீடு.
பாத்திரங்கள்: ரவி, மாலா, அண்ணன்

ரவி: அண்ணா, நம்ம அப்பா டில்லியிலேயிருந்து நாளை மறுநாள் ராத்திரி புறப்பட்டு வருவாருன்னு சொன்னியே! எனக்கு ஒரு 'கிரிக்கெட் பாட்' வாங்கி வரச்சொல்லி, அப்பாவுக்கு இதோ ஒரு கடிதம் எழுதி வச்சிருக்கேன். நீங்களெல்லாம் உங்களுக்கு வேண்டியதுகளை முந்தா நாளே எழுதிப் போட்டுட்டீங்க.

அண்ணன்: ஏண்டா, நாங்க கடிதம் எழுதறப்போ நீ வீட்டிலே இருந்தால்தானே! ஊர் சுத்தப் போயிட்டே... சரி, நேத்துக் காலையிலே சொன்னேனே, நேத்தே எழுதித் தபாலிலே போட்டிருக்கப் படாது?

ரவி: மறந்திட்டேன் அண்ணா, இதோ நான் கவர் மேலே எழுதியிருக்கிற விலாசம் சரிதானா, பார்.

(கடித உறையைக் கொடுக்கிறான்.)

அண்ணன்: (கடித உறையில் எழுதியிருப்பதை வாய்விட்டுப் படிக்கிறான்.) S. Gopalsamy, 16-A/15, N.N.A. Karol Bagh, New Delhi.... என்னடா ரவி, நியூ டெல்லின்னு மொட்டையா எழுதினால், இது போய்ச் சேர்றதுக்குள்ளே அப்பா இங்கே வந்து சேர்ந்திடுவாரே! பின்கோடு இருந்தால்தான், தாமதமில்லாமே' போய்ச் சேரும்... இதோ நானே பின்கோடையும் எழுதிடுறேன் (எழுதுகிறான்) நியூடெல்லிக்குப் பக்கத்திலே ஒரு சின்னக் கோடு போட்டு 110005.

ரவி: ரொம்ப ரொம்ப தாங்க்ஸ் அண்ணா.



அண்ணன்: ரவி, இந்தா லெட்டர். இப்போ மணி 5 ஆகுது. நம்ம போஸ்டாபீஸிலே 5.15-க்குத் தபால் எடுத்திடுவாங்க. உடனே ஓடு.... மத்தியானமேபோட்டிருக்கப்படாது?

ரவி: அண்ணு, அண்ணு, தயவு செய்து எனக்காக ஒரு உதவி செய்யணும். உன் சைக்கிளிலே போய் இந்த லெட்டரை....

அண்ணன்: தபாலிலே சேர்த்திடணும். சரி, கொடு லெட்டரை. (கடிதத்தைக் கையில் வாங்கிக்கொண்டு வழக்கமாக சைக்கிள் சாவி மாட்டும் சுவர் அருகே சென்று பார்க்கிறுன். சாவியைக் காணும்!)

ரவி, சைக்கிள் சாவியை எங்கேடா போட்டாய்? சைக்கிள் கத்துக்கிறதாகச் சொல்லி, மத்தியானம் சாவியை வாங்கிப் போனியே! எங்கே எறிஞ்சியோ? கண்டகண்ட இடத்திலே போடாதேன்னு உனக்கு எத்தனை தடவை சொல்லியிருக்கேன்?

ரவி: அடடே, சுவரிலே சாவியை மாட்டல்லியா? மேஜை மேலே போட்டுட்டேன் போலேயிருக்கு!

(மேஜைமேல் தேடுகிருர்கள். கிடைக்கவில்லை.)

ஐயோ, இன்னும் 10 நிமிஷம் தானே இருக்கு! தபால் எடுத்துடுவாங்களே! கிரிக்கெட் பாட் கிடைக்காமே போயிடுமே!

அண்ணன்: போகட்டுமே!... எல்லாம் உன்னுலே வந்ததுதானே?

(மாலா மேஜைமேல் இருந்த ரேடியோ பெட்டிக்கு அடியில் ஓர் ஓரமாகக் கிடந்த சைக்கிள் சாவியைத் தேடி எடுத்து விடுகிறுள்.)

மாலா: ரவி! ரவி! இதோ சாவி கிடைச்சுடுத்து. ரேடியோப் பெட்டிக்கு அடியிலே போட்டுட்டு....

(மாலாவிடம் சாவியை வாங்கி அண்ணனிடம் கொடுக்கிறுன்.)

ரவி: அண்ணு, அண்ணு, பிளீஸ் அண்ணு, தயவு செய்து தபாலிலே சேர்த்துடு அண்ணு.

அண்ணன்: சரி, தபாலிலே சேர்த்துடறேன். ஆனல், இனிமேல் உன் கிட்டே சைக்கிள் சாவி தரமாட்டேன், தரமாட்டேன், தரவேமாட்டேன்.

(அண்ணன் சைக்கிளை எடுத்துக் கொண்டு செல்கிறுன்.)

காட்சி—4

இடம்: ரவியின் வீடு.

பாத்திரங்கள்: மாலா, ரவி, டீச்சரம்மா.

(வீட்டுச் சுவரில் ரவி சில படங்களை வரைந்து கொண்டிருக்கிறுன்.)

மாலா: என்ன ரவி இது! சுவரெல்லாம் கிறுக்கி வைக்கறியே?

ரவி: என்ன! கிறுக்கி வைக்கிறேனு? இதெல்லாம் சித்திரங்கள்! ஓவியங்கள்!

மாலா: ஆமா, சித்திரம் எழுதறதுக்கு உனக்குச் சுவர்தான் கிடைச்சுதா?

ரவி: மாலா, நீ ஒரு பழமொழி கேட்டதில்லையா? 'சுவரை வைத்துத் தான் சித்திரம் எழுத வேண்டும்' அதனுல்தான் சுவரிலே சித்திரம் எழுதறேன்.

மாலா: ஆமா, வீட்டுச் சுவரிலேதான் சித்திரம் எழுதணும்னு சொன்னுங்களா? சுவரெல்லாம் ஒரே அசிங்கமாயிருக்கு. நான் இப்போ இந்தக் கிறுக்கல்களையெல்லாம் அழிக்கப் போறேன்.

(பின்புறம் ஓடிப்போய் ஒரு வாளியில் தண்ணீர் எடுத்து வருகிறுள். அதற்குள் ரவி, தான் வரைந்த குரங்குப் படத்தின் கீழ் 'மாலா' என்று கொட்டை எழுத்திலே எழுதி வைக்கிறுன். அதைப் பார்க்கிறுள் மாலா)

மாலா: ரவி, வர வர உனக்குத் திமிர் அதிகமாயிடுச்சு. நான் என்ன குரங்கு மாதிரியா இருக்கேன்? அப்பா வரட்டும் சொல்றேன்.

ரவி: அப்படின்னு, அப்பா வர்றவரை இதை அழிக்காமே வச்சிருப்பாய்? அதுவும் நல்லதுதான். அப்பா சாயங்காலந்தானே வருவாரு அதுக்குள்ளே நம்ம வீட்டுக்கு வர்ரவங்களெல்லாம் உன் படத்தை நல்லாப் பார்க்கட்டும். ஜோராப் பார்க்கட்டும். பார்த்து மகிழட்டும்.

மாலா: அதுவரை வச்சிருப்பேனு? இதோ அழிக்கப் போறேன். (வாளித் தண்ணீரை எடுத்துச் சுவரில் தெளிக்கப் போகிறுள்.)

ரவி: (தடுத்துக்கொண்டே) நான் அழிக்க விடமாட்டேன்.

மாலா: நான் அழிப்பேன்.

ரவி: விட மாட்டேன்.

மாலா: இல்லே, அழிப்பேன்.

ரவி: விடமாட்டேன், விடமாட்டேன்.

(எதிர் வீட்டு டீச்சரம்மா வருகிறார்.)

மாலா: அதோ, எதிர் வீட்டு டீச்சரம்மா வருகிறாங்க.

ரவி: வரட்டுமே.

டீச்சர்: அடடே! இது என்ன! சுவரெல்லாம் சித்திரம்! அட, என்ன இது! குரங்குப் படம் போட்டுக் கீழே உன் தங்கை பெயரை எழுதி வச்சிருக்கியே!

மாலா: இதைத்தான் நான் அழிக்கப் போனேன். இவன் விடமாட்டேங்கிறான் டீச்சர்.

டீச்சர்: ரவி, உன் தங்கையை இப்படிக் கேலி செய்யலாமா? மாலா குரங்கு என்றால், மாலாவுடன் கூடப் பிறந்த உன்னை எப்படிக் கூப்பிடுறதாம்? இதெல்லாம் தப்பு இல்லையா?

ரவி: (தலைகுனிந்தபடி) தப்புத்தான் டீச்சர்.

டீச்சர்: ரவி, நீ நல்லாப் படம் போடுறாய். ஆனால், வீட்டுச் சுவரிலேயா படம் போடுறது? உங்கப்பாகிட்டே சொல்லி டிராயிங் பேப்பர், பென்சில், கலர் பாக்ஸ் எல்லாம் வாங்கித் தரச் சொல்றேன். தாளிலே படம் போட்டுப் பழகினால், நல்லாப் படம் போட வரும். சீக்கிரத்திலே பெரிய ஓவியனாகிடலாம்.

மாலா: ஆமா ரவி, உன் திறமையெல்லாம் ஏன் இப்படிப் பாழாக்குறாய்? டீச்சர் சொல்ற மாதிரியே செய்.

டீச்சர்: (தன் கைப் பைக்குள்ளிருந்து சதுரமான இரண்டு தாள்களை எடுக்கிறார்.)


ரவி, இந்தா இதை நீ வச்சுக்கோ.

மாலா, இதை நீ வச்சுக்கோ.

(ஆளுக்கு ஒரு தாளைக் கொடுக்கிறார்.)

இப்போ, நீங்க ஒவ்வொருவரும் உங்க கையிலேயிருக்கிற தாளைச் சரிபாதியாகக் கிழிக்கணும். எங்கே, கிழியுங்க பார்க்கலாம்.

(ரவி, விருட்டென்று தாளைக் கிழிக்கிறான். ஒரு பக்கம் கூடுதலாகவும், இன்னொரு பக்கம் குறைவாகவும், அத்துடன் கோணலாகவும் கிழிந்து விடுகிறது. மாலா, டீச்சர் தந்த தாளைஇரண்டாகமடித்து, மடித்தஇடத்தில்நன்றாகத் தேய்த்து, பிறகு கிழிக்கி



ருள். சரிபாதியாக, பிசிறு இல்லாமல் இருதுண்டுகளும் இருக்கின்றன.)

ரவி, இதோ நீ கிழித்ததைப் பார். மாலா கிழித்ததையும் பார். கோணல் மாணலாக நீ கிழித்திருக்கிறாய். மாலா, சரிபாதியாக அழகாகக் கிழித்திருக்கிறாள். எதிலும் ஒரு ஒழுங்கு வேணும். ஒழுங்கு இல்லாத எதுவுமே உருப்படாது. காகிதத்திலே வரைய வேண்டியதைச் சுவரிலே வரையிறது, பொறுமையாகச் செய்ய வேண்டியதை அவசரப் பட்டுச் செய்யுறது, காலம் கடந்தே காரியம் செய்யுறது இதெல்லாம் நல்லதில்லே.

ரவி: ஆமா டீச்சர். நீங்க சொன்ன மாதிரி எங்க அப்பாகிட்டே டிராயிங் பேப்பர், பென்சில், கலர் பாக்ஸ் எல்லாம் வாங்கித் தரச் சொல்லுங்க. நீங்க சொன்ன மாதிரியே ஒழுங்கா, அழகா, பொறுமையாப் படம் வரைஞ்சு பழகிக்கிறேன்.

டீச்சர்: இப்பத்தான் ரவி நல்ல பையன்!

காட்சி—5

இடம்: ரவியின் வீடு.

பாத்திரங்கள்: ரவி, மாலா, அம்மா, டீச்சரம்மா, தபால்காரர்.

தபால்காரர்: சார், போஸ்ட்.

அம்மா: போஸ்டா! யாருக்கு வந்திருக்கு?

தபால்காரர்: ரவித் தம்பி பேருக்கு ஒரு கடிதம், ஒரு பத்திரிகை வந்திருக்கு.

ரவி: என்ன! என் பேருக்கா?

(பரபரப்பாகக் கடிதத்தை வாங்கிப் படிக்கிறான். மாலா பத்திரிகையை வாங்கி, உறையை அகற்றி உள்ளே புரட்டுகிறாள்.)

ஹய்யா! என் படத்துக்குப் பரிசு!

(துள்ளிக் குதிக்கிறான்.)

அம்மா: என்ன! பரிசா! உன் படத்துக்கா!

ரவி: ஆமாம்மா. என் படத்துக்குன்னு நான் எழுதிய படத்துக்கு! 'பால பாரதி' பத்திரிகை நடத்திய ஓவியப் போட்டியிலே கலந்துக்கிட்டேன். அதுக்கு 100 ரூபாய் பரிசு கிடைச்சிருக்கு.

மாலா: ஆமாம்மா, இதோ ரவி எழுதின படத்தை அச்சடிச்சிருக்காங்க.

(மாலா படத்தை அம்மாவிடம் காட்டுகிறாள்.)

அம்மா: என்ன படம்?... ஐயோ குரங்குப் படமா?

மாலா: அம்மா, இது சாதாரணக் குரங்குப் படம் இல்லேம்மா. மகாத்மா காந்திக்குப் பிடித்தமான மூணு குரங்குகளின் படம்! ஒரு குரங்கு தீயதைப் பார்க்கமாட்டேன் என்கிறது. இன்னொன்று, தீயதைப் பேச மாட்டேன் என்கிறது. மூணாவது குரங்கு தீயதைக் கேட்கமாட்டேன் என்கிறது... அடே! இதோ டீச்சர் வாராங்களே....

ரவி: வாங்க டீச்சர். என்னுடைய ஓவியத்துக்குப் பரிசு கிடைச்சிருக்கு, டீச்சர். நூறு ரூபாய் பரிசு! பரிசு பெற்ற படமும் இதோ இந்த 'பால பாரதி'யிலே வெளிவந்திருக்குது!

டீச்சர்: (படத்தைப் பார்த்துவிட்டு) ரவி, பார்த்தியா! சும்மா சுவரிலே கிறுக்கின யார் பரிசு தருவா? எதிலும் அக்கறையும், ஒழுங்கும் இருந்தால், வெற்றி தானாக வரும்.

ரவி: ஆமா டீச்சர். நீங்க சொன்னபடி நடந்ததனாலேதான் எனக்கு இந்தப் பரிசு கிடைச்சுது. ஒரு நிமிஷம் இங்கே இருங்க டீச்சர். இதோ வந்திடுறேன்.

டீச்சர்: ரவி, எங்கே போகிறாய்?


ரவி: எனக்குப் பரிசு கிடைச்சதுக்கு, உங்களுக்கு ஸ்வீட் வாங்கத்தான் டீச்சர்.

டீச்சர்: நல்ல பையனா மாறிட்டியே, அதைவிட வேறே ஸ்வீட் வேணுமா?

(திரை)

திருக்குறள் புதிர்

▽ புதிர் 3



▽ புதிர் 4



சென்ற இதழில் வெளியான இரு படங்களுக்கும் சரியான குறட்பாக்களைக் கண்டுபிடித்திருப்பீர்கள். சரியாகவும் அவற்றை எழுதிப் பார்த்திருப்பீர்கள்.

இப்போது, மேலும் இரு படங்களைப் பார்க்கிறீர்கள். உடனே, உங்களுக்கு இரு குறள்கள் நினைவுக்கு வரும். உடனே ஒரு தாளில் அவற்றை எழுதிச் சரியாக இருக்கின்றனவா? என்று பாருங்கள். (விடை:–**33**–ஆம் பக்கம்.)

புதிர் மன்றம்

புதிர்–1

சிட்டு, பட்டு இருவரும் அக்கா, தங்கைகள். சிட்டுவின் இப்போதைய வயது 5. சிட்டுவின் வயதைப் போல் நான்கு மடங்கையும், பட்டுவின் வயதைப்போல் ஐந்து மடங்கையும் கூட்டி, அதிலே ஒன்றைக் குறைத்தால் அவர்களுடைய தாத்தாவின்வயது வருகிறது. தாத்தாவின் வயதை 2, 3, 4, 5, 6 ஆகியவற்ருல் வகுத்தால் மீதியாக முறையே, 1, 2, 3, 4, 5 என வருகிறது. அப்படியென்ருல்,

பட்டுவின் வயது என்ன?

அவர்களுடைய தாத்தாவின் வயது என்ன?



புதிர்–2

முருகனுடைய மாந்தோப்பில் வரிசையாக ஆறு மாமரங்கள் இருந்தன. ஒருநாள் அவன் மாம்பழங்கள் பறிக்கச் சென்ருன். 6 மரங்களிலிருந்தும் வெவ்வேறு எண்ணிக்கையில், மொத்தம் 60 பழங்களைப் பறித்தான். அவன் முதல் மரத்திலிருந்தும், மூன்ரும் மரத்திலிருந்தும் பறித்த மொத்தப் பழங்களின் அளவு, நான்காம் மரத்திலிருந்து பறித்தான். அவன் இரண்டாம் மரத்தில் பறித்த பழங்களின் எண்ணிக்கையும் ஐந்தாம் மரத்தில் பறித்த பழங்களின் எண்ணிக்கையும் சமம். மூன்ருவது நான்காவது மரங்களிலிருந்து பறித்த பழங்களின் மொத்த எண்ணிக்கை — 11.

அவன் 4—வது மரத்தில் பறித்த பழங்களின் எண்ணிக்கையையும், 6-வது மரத்தில் பறித்த பழங்களின் எண்ணிக்கையையும் கூட்டினுல் 38 என வருகிறது.

ஆருவது மரத்தில் பறித்த பழங்களின் எண்ணிக்கை ஏழால் (7—ஆல்) வகுபடுகிறது எனில்,

அவன் ஒவ்வொரு மரத்திலிருந்தும் பறித்த பழங்கள் எத்தனை?

1 முதல் 4 புதிர்கள்:
மூ. கா.தமிழ்ச்செல்வன்

5 முதல் 7 புதிர்கள்: லெ

புதிர்–3

எங்கே உங்கள் அறிவைப் பயன்படுத்துங்கள், பார்க்கலாம்?

''ஒரு பெரிய மீன் ஒரு முறை இடும் முட்டைகளின் எண்ணிக்கை 999 என்ருல், அதைவிட 10 மடங்கு பெரியதான திமிங்கிலம் ஒரு முறை எவ்வளவு முட்டையிடும்?

விடையை 'டக்'கென்று சொல்ல வேண்டும்.

புதிர்–4

பூம்பொழில் என்னும் ஊரில் கோகுலம் சிறுவர் சங்கக் கூட்டம் ஒன்று ஏற்பாடாகியிருந்தது. கூட்டத்திற்கு நிறையச் சிறுவர், சிறுமியர், பெரியவர்கள் வந்திருந்தனர். கூட்டத்திற்கு வந்தவர்கள் ஒழுங்கில்லாமல் அமர்ந்திருந்ததைக் கண்டு, கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தவர் அவர்களை ஒழுங்குபடுத்த எண்ணினுர்.

ஒரு வரிசைக்கு இரண்டு பேர் வீதம் பல வரிசைகளில் வந்தவர்களை அமரச் செய்தார். அப்போது கடைசி வரிசையில் ஒரு சிறுவன் மீதியானுன். அதனுல் எண்ணிக்கையை மாற்றி வரிசைக்கு நான்கு பேர் வீதம் அமரச் செய்தார். இப்போது கடைசி வரிசையில் 3 பேர் மீதியாயினர். அதனுல், மீண்டும் முயன்று ஒரு வரிசைக்கு ஐந்தைந்து பேராக அமரச் செய்தார். இப்போது கடைசி வரிசையில் 4 பேர் மீதியாயினர். கூட்டத்தை ஏற்பாடு செய்தவர் இதைக் கண்டு, எப்படியும், ஓர் ஒழுங்கான அமைப்பில் உட்கார வைக்க வேண்டும் என்று வரிசைக்கு ஏழேழு பேராக உட்கார வைத்தார். இப்போது கடைசி வரிசையில் 6 பேர் மீதியாயினர்.

பிறகு ஒரு வரிசைக்கு எட்டு, எட்டுப் பேராக உட்கார வைத்துப் பார்த்தார். அப்போது கடைசி வரிசையில் 7 பேர் மீந்தனர்.


கூட்ட ஏற்பாட்டாளர் கடைசி முயற்சியாக வந்தவர்களை வரிசைக்கு 9 பேர் வீதம் உட்கார வைத்தார். இப்போது மிகச் சரியாக எல்லா வரிசையிலும் 9 பேர் இருந்தனர்.

அப்படி என்ருல் கோகுலம் சிறுவர்

சங்கக் கூட்டத்திற்கு வந்தவர்கள் எத்தனை பேர்?

புதிர்–5


ஒன்பது மரங்கள் கீழ்க்கண்டவாறு உள்ளன.



நான்கு கம்புகள்தான் கையிலிருக்கின்றன. இந்தக் கம்புகளை வளைக்காமல் 9 மரங்களையும் இணைக்கும்படி கட்ட வேண்டும். முடிகிறதா, பாருங்கள்!

புதிர் 6


ஓர் ஆட்டிடையன் கஷ்டப்பட்டுச் சம்பாதித்து 14 கழிகள் வாங்கி 50 அடி நீளமும் 20 அடி அகலமுமுள்ள வேலி கட்டித் தன்னுடைய 100 ஆடுகளை அடைத்தான்.



அடுத்த ஆண்டு மேலும் 100 ஆடுகள் வாங்கினன். இப்போது அவன் எத்தனை கழிகள் மேலும் வாங்கினல் அவனுடைய 200 ஆடுகளையும் அடைக்கலாம்?

புதிர் 7

3'' × 3'' × 3'' கியூப் (CUBE)–ன் மையத்திலிருக்கும் 1'' × 1'' × 1'' கியூபை தனியே எடுக்க வேண்டுமென்ருல் எத்தனை முறை அதை வெட்ட வேண்டியது வரும்?



விடைகள்:

பட்டுவின் வயது – 6.
தாத்தாவின் வயது – 59.


புதிர். 2:–
முருகன் பறித்த பழங்கள்:–

முதல் மரத்தில்	–	9 பழங்கள்
2–வது மரத்தில்	–	6 பழங்கள்
3–வது மரம்	–	1 பழம்
4–வது மரம்	–	10 பழங்கள்
5–வது மரம்	–	6 பழங்கள்
6–வது மரம்	–	28 பழங்கள்
மொத்தம்	–	60 பழங்கள்


புதிர். 3:–
திமிங்கிலம் முட்டையிடாது. குட்டி போட்டுப் பால் கொடுக்கும்.

புதிர். 4:–
கோகுலம் சிறுவர் சங்கக் கூட்டத்திற்கு வந்திருந்தவர்கள் 279 பேர்.

புதிர். 5:–
இதோ 9 மரங்களையும் இணைக்கும் கம்புகள்!




புதிர். 6:–
மேலும் 4 கழிகள் வாங்கினல் போதும்.



புதிர். 7:–
ஆறுமுறை வெட்ட வேண்டும். (உள்ளிருக்கும் கியூபிற்கும் ஆறுபக்கம் உள்ளது. ஆகையால் 6 முறை வெட்ட வேண்டும்.)

குப்பு வண்டி

நா.கோ.வி



நாகூரில் 'குப்பு வண்டி' மிகப் பிரசித்தம் பெற்றிருந்தது. குப்புவின் மாட்டு வண்டியில் பிரயாணம் செய்யாத குழந்தைகளே இல்லையென்று சொல்லலாம்.

குப்பு – யாருமற்ற அனாதை. அவனுடைய ஆஸ்தியெல்லாம் ஒரு சிறு குடிசையும், மோசமான நிலையிலிருந்த ஒரு மாட்டு வண்டியும், கிழடு தட்டிப் போயிருந்த காளை மாடும் தான்.

குப்புவின் அப்பா இறக்கும்போது, குப்புவுக்குப் பதினொரு வயதிருக்கும். அப்போது அவன் ஆறாவது படித்துக் கொண்டிருந்தான். அப்பா இறந்த பிறகு, வயிற்றுப் பிழைப்பைக் கருதி அப்பா செய்த வண்டி ஓட்டும் தொழிலை இவன் மேற்கொண்டான். படிப்புக்கு அத்தோடு முற்றுப்புள்ளி வைக்கும்படி ஆகிவிட்டது.

குப்பு நேர்மையானவன். பொய் சொல்லத் தெரியாது. கிடைக்கும் வருமானத்தில் பாதியைக் காளைமாட்டுக்குச் செலவழிப்பான்.

இந்த உலகத்தில் குப்புவுக்குக் காளை மாடும், காளை மாட்டிற்குக் குப்புவும்தான் துணை.

நாகூரிலிருந்து அதிகாலை 5 மணிக்கு ஒரு ரயில் புறப்படும். அவ்வளவு அதிகாலையில் ஒருவரும் வண்டி கட்ட மாட்டார்கள். ஆனால், குப்பு முன் வருவான்.

சவாரிக்கு யாராவது கூப்பிட்டால், குறித்த நேரத்திற்கு முன்னதாகவே வண்டியுடன் போய் நிற்பான். மற்றவர்களைப் போல, மாட்டைத் தார்க் குச்சியால் குத்தியும், வாலைக் கடித்தும் – முறுக்கியும் துன்புறுத்த மாட்டான். சவுக்கை அவன் உபயோகிப்பதே கிடையாது. நத்தையைப் போல ஊர்ந்து சென்றாலும், அவனுடைய வண்டி குறித்த நேரத்திற்குப் போய்ச் சேர்ந்து விடும். குடும்பத்தோடு சவாரி செய்பவர்கள் அனைவரும் குப்பு வண்டியைத்தான் தேடுவார்கள்.

முன்பு போல் குப்புவுக்கு இப்போதெல்லாம் அவ்வளவாக வருமானம் கிடையாது. அசுர கதியில் இயங்கும் இவ்வுலகத்தில் குப்புவின் வண்டியை ஒருவரும் விரும்பவில்லை.

குதிரை வண்டி, ஆட்டோ, டாக்சியோடு போட்டி போடக் குப்புவின் ஒற்றை மாட்டு வண்டியால் முடியவில்லை. போதிய வருவாய் இல்லாத காரணத்தினால் வண்டி சிதைந்து, பார்க்க அவலட்சணமாகக் காட்சி அளித்தது.

குப்பு விரைவிலேயே வறுமையின் காரணமாக முதுமையை அடைந்து விட்டான். கண்கள் குழி விழுந்து, வயிறு ஒட்டி, நடமாடும் எலும்புக் கூட்டைப் போல் ஆகிவிட்டான் குப்பு.

காய்ந்த புல்லையும், குளம் — குட்டைகளில் தேங்கிக் கிடக்கும் தண்ணீரையும் குடித்து உயிர் வாழக் கற்றுக் கொண்டது குப்புவின் காளை மாடு.

குப்புவின் குடிசையில் போடப்பட்டிருந்த கீற்றுகள் காற்றில் பறந்து, அக்கம்பக்கத்தில் வசிப்பவர்களுக்கு, அடுப்பெரிக்கப் பயன்பட்டு விட்டன.

இந்த நிலையில் மேலும் சோதனைக்குள்ளானான் குப்பு.

பாவம், அன்று ஒருநாள் அவனுடைய ஒற்றை மாட்டு வண்டியின் மீது வேகமாக வந்த லாரி ஒன்று மோதி விட்டது! குப்புவும், காளை மாடும் தூக்கி எறியப்பட்டார்கள். வண்டி தூள் தூளாகி விட்டது.

குப்புவுக்கு முதுகில் பலத்த அடி. மாட்டின் ஒரு கால் சப்பை நழுவி விட்டது.

ஒரு மாதம், நாகப்பட்டினம் ஆஸ்பத்திரியில் இருந்து, பிறகு ஊர் திரும்பினான் குப்பு.

அவன், தன்னுடைய குடிசையை வந்தடைந்து பார்த்த போது அவனுக்குப் பேரதிர்ச்சியாக இருந்தது. அவன் ஆஸ்பத்திரியில் இருந்த சமயம், அவனுடைய குடிசையில் இருந்த பாத்திரங்கள், துணிமணிகள் எல்லாவற்றையும் யாரோ திருடிச் சென்று விட்டிருந்தார்கள்.

குப்புவைக் கண்டதும், குளத்தோர மர நிழலில் படுத்துக் கிடந்த காளை மாடு நொண்டியவாறே குப்புவிடம் வந்து, அவன் காலை நக்கிக் கொடுத்தது.

முன்பு போல் எழுந்து நடமாட முடியாத நிலையில் இருந்த குப்பு, தன்னுடைய விதியை எண்ணி நொந்தவாறே, ஓட்டைக் குடிசையில் நாள் முழுவதும் முடங்கிக் கிடந்தான். எப்போதாவது, யாராவது அவனைத் தேடிவந்து பழைய சோறு கொடுத்தால் சாப்பிடுவான். இல்லாவிட்டால் முனிசிபல் குழாயிலிருந்து வரும் தண்ணீரைக் குடித்துவிட்டு, மீண்டும் மூலையில் போய் முடங்கிவிடுவான்.

போதிய ஆகாரமில்லாததால், குப்புவின் ஜீரண உறுப்புக்கள் சீர்குலைந்தன. விரைவிலேயே வியாதி அவனைப் பற்றிக் கொண்டது. ஆஸ்பத்திரிக்குச் சென்று உடலைக் காட்டி, மருந்து வாங்கி வர இயலாத நிலையில் இருந்தான் குப்பு. அவனுடைய நிலைமை மிக மோசமாகிவிடவே, மனமிரங்கிய ஒருவன், ஒரு நாள் உள்ளூர் டாக்டரை அழைத்து வந்தான்.

டாக்டர் குப்புவை நன்றாகப் பரிசோதித்தார். பிறகு, உதட்டைப் பிதுக்கினார். ஒரு தாளில் நாலைந்து மருந்துகளின் பெயர்களையும், டானிக்குகளின் பெயர்களையும் எழுதித் தந்துவிட்டு, ஒப்புக்காக ஓர் ஊசியையும் போட்டுவிட்டுப் போனார் டாக்டர்.

ஊசி குத்தப்பட்ட இடத்தில் மருந்து கட்டிக் கொண்டு, அதிக வலியைக் கொடுத்ததைத் தவிர, ஊசி போட்டுக் கொண்டு விட்டதால் எந்த வலி நிவாரணத்தையும் பெறவில்லை குப்பு.

டாக்டர் எழுதிக் கொடுத்த மருந்துச் சீட்டைத் தலையணையின் கீழ் வைத்து விட்டு, மீண்டும் முடங்கிக் கொண்டான் குப்பு. பாவம், மருந்து வாங்க அவனிடம் பணம் ஏது?

அன்று மாலை பக்கத்து ஊரைச் சேர்ந்த ஒருவன் குப்புவைத் தேடிவந்தான். வந்தவன், குப்புவிடம் அவன் உடல் நிலைமையைப் பற்றி விசாரிக்கவே, டாக்டர் எழுதிக் கொடுத்த மருந்துச் சீட்டைக் காண்பித்தான் குப்பு.

அதைப் பார்த்த அந்த ஆள், ''இதோ பாரப்பா! உனக்குப் பயங்கர வியாதி வந்திருக்கு. டாக்டர் எழுதிக் கொடுத்த மருந்தை வாங்கிச் சாப்பிட்டால் நிச்சயம் உன் உடம்பு குணமாகி விடும். பணத்திற்கு நான் வழி சொல்கிறேன்'' என்றான்.


புரிகிறதா?

நான் கொடுத்த மாம்பழம் மாமா மாமாமாமாமாமாமாமாமா? ஆ-ஆ-ஆ-ஆ ஆ-ஆ-ஆ-ஆ-ஆ ஆதா?

புரியவில்லையா?

நான் கொடுத்த மாம்பழம் பத்துமா? பத்தாதா?

—எஸ். குப்புசாமி



பணம் என்றதும், வந்த ஆளைக் கேள்விக் குறியோடு பார்த்தான் குப்பு.

''குப்பு, உனக்கு அவ்வளவாக வயதாகவில்லை. உன் உடலிலே தெம்பு வந்ததும், வேலை ஏதாவது செய்து பிழைத்துக் கொள்ளலாம். ஆனால் உன்னுடைய மாடோ கிழடாகிவிட்டது. இனி அதனால் யாதொரு பிரயோஜனமும் கிடையாது. பேசாமல், அதைக் கசாப்புக்காரனிடம் விற்று விடு. நூறு ரூபாயாவது கிடைக்கும்....'' என்றான்.

''மாட்டைக் கொல்கிறதாவது?'' — மனமில்லாமல் முனகினான் குப்பு.

''இதோ பார் குப்பு! ஒன்றும் அவசரமில்லை. நாளைக்குக் காலையிலே திரும்பவும் வருகிறேன். அதற்குள் யோசித்து ஒரு நல்ல முடிவுக்கு வா'' என்று கூறி விட்டுச் சென்றான் பக்கத்து ஊர்க்காரன்.

அன்று இரவு முழுவதும் குப்பு உறங்கவே இல்லை.

மாடு — இந்துக்களின் தெய்வம். அதைக் கொல்வதா? சிறு கன்றாக இருந்தபோது, அது குப்புவுக்கு விளையாட்டுத் தோழனாக இருந்தது. சற்று வளர்ந்தவுடன், சவாரிக்கு முன்வந்தது. உற்றார், உறவினரற்றுக் குப்பு தனித்து விடப்பட்டபோது மாடுதான் அவனுக்கு உற்ற துணையாக இருந்தது. அரைப்பட்டினி, கால் பட்டினியாக இருந்த போது கூட வண்டியை இழுக்கத் தயங்காது. எஜமானரின் குரல் கேட்டு, அவனுடைய எண்ணத்திற்கு ஏற்றவாறு நடந்து கொள்ளும். அதைக் கொல்வதா?

கால் சப்பை நழுவின நிலையில், வலியைப் பொறுத்துக் கொண்டு, கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடத் தன்னையே பார்த்துக் கொண்டு படுத்திருந்த மாட்டைப் பார்த்தான் குப்பு.

இருவருடைய நிலையும் ஒன்றுதான். அவர்களால் உலகில் இனி யாருக்கும் எந்தவித பிரயோஜனமும் கிடையாது. வாழ்நாள் முழுவதும் உழைத்து அரை வயிறு, கால் வயிற்றுக்குச் சாப்பிட்டு நிரந்தர நோயாளி ஆகிவிட்டார்கள் இருவரும். குப்புவின் மனத்தில் ஒருபெரிய போராட்டம் நடந்துகொண்டிருந்தது.

தான் உயிர் வாழ மாட்டைக் கொல்வதா? மாட்டின் உடலில் உள்ளதும் உயிர்தான். தன்னுடைய உடலில் உள்ளதும் உயிர்தான். உயிர்கள் அனைத்தும் தெய்வத்திற்கல்லவா சொந்தம். ஓர் உயிர் வாழ, இன்னொரு உயிரைக் கொல்வதா? அதுவும் உரிமையில்லாத ஒன்றைக் கொல்ல, தனக்கு ஏது அருகதை?

குப்பு ஒரு முடிவுக்கு வந்தான். மெல்ல மாட்டை நோக்கி நடந்தான். அதன் கழுத்தைத் தன் இரு கைகளாலும் கட்டிக் கொண்டு கண்ணீர் விட்டான்.

மறுநாள் —

அதிகாலையிலேயே குப்புவைத் தேடிக் கொண்டு வெளியூர்க்காரன் வந்தான்.

''என்ன குப்பு! உடம்பு எப்படி இருக்கிறது? இந்தா நூறு ரூபாய். மாட்டை ஓட்டிப் போகட்டுமா?'' என்று கேட்டான் வந்த ஆள்.

அதைக் கேட்ட குப்பு, ''முடியாது... முடியவே முடியாது! என் மாட்டை நான் விற்கவே மாட்டேன்... போய்விடு, இங்கிருந்து போய்விடு...!'' என்று வேகமாக அலறவே, ''நீ எக்கேடாவது கெட்டுப் போ'' என்று கோபமாகக் கூறிவிட்டுச் சென்றான் வெளியூர்க்காரன்.

அன்று காலை 10 மணி இருக்கும்.

''இங்கு யாரப்பா குப்பு?'' என்று கேட்டவாறே தபால்காரர் குப்புவின் குடிசைக்கு வந்தார்.

''நான்தானுங்க'' என்று பவ்யமாகக் கூறினான் குப்பு.

''ஏன் குப்பு, முதியோர் உதவித் தொகை கேட்டு அரசாங்கத்துக்கு மனு போட்டிருந்தாயா?'' என்று கேட்டார் தபால்காரர்.

''ஆமாங்க, ஐயா! ரெண்டு மாசத்துக்கு முன்னே ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கூட என்னை விசாரித்தாருங்க'' என்றான் குப்பு.

''இந்தா, மணியார்டர் பாரத்திலே இரண்டு இடத்திலேயும் கையெழுத்துப் போடு. தாசில்தார் ஆபீசிலே இருந்து உனக்கு உதவிப் பணம் வந்திருக்கு. இனி ஒவ்வொரு மாதமும் உனக்குத் தாசில்தார் பணம் அனுப்புவார்'' என்று கூறியவாறே பணத்தைக் குப்புவிடம் கொடுத்தார் தபால்காரர்.

பணத்தை வாங்கி, கண்களில் ஒற்றிக் கொண்ட குப்பு, தன்னுடைய அருமை மாட்டின் கழுத்தைக் கட்டிக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் விட்டான்.

திக்கற்றவர்களுக்குத் தெய்வம் துணை நிற்கும் என்பது எவ்வளவு உண்மை பார்த்தீர்களா?



பயந்தாங்கொள்ளி

எஸ்.எஸ்.ராமன்

சிறுவர்கள் எல்லோரும் சேர்ந்து பல்லிமேட்டுப் பாட்டியை நச்சரித்துக் கொண்டிருந்தனர்,

''பாட்டி, பாட்டி, ஒரு கதை சொல்லுங்கோ'' என்று.

பாட்டியும் சம்மதித்துக் கதை கூற ஆரம்பித்தாள். ஒரு நிமிடத்திற்குள் அத்தனை சத்தமும் அடங்கி அங்கு நிசப்தம் நிலவியது.

''இதே பல்லிமேடு கிராமம் சில வருடங்களுக்கு முன் பயங்கர பயத்தில் ஆழ்ந்திருந்தது என்பது இப்போது இருக்கும் என்போன்ற பாட்டிமார்களுக்கும், தாத்தாக்களுக்கும் நன்ருகத் தெரியும்'' என்று ஆரம்பித்து, பாட்டி மேலும் கதையைத் தொடர்ந்தாள்.

''பல்லிமேட்டுக் கிராமத்தில் எல்லோருக்கும் தெரிந்த பயந்தாங்கொள்ளி ஒருவன் இருந்தான். அவன் பெயர் என்ன என்பது யாருக்கும் தெரியாது. ஏன், அவனுக்கே தெரியுமோ தெரியாதோ! எல்லாரும் அவனைப் 'பயந்தாங்கொள்ளி, பயந்தாங்கொள்ளி' என்றே அழைத்து வந்தனர். அவன் மனத்தில் வெகு நாளாக நாம் ஏதாவது பெரிய காரியம் செய்து, நம் பெயரைப் 'பயந்தாங்கொள்ளி' என்று கூப்பிட முடியாமல் செய்து விட வேண்டும் என்று தீர்மானித்திருந்தான். ஆனல், அவன் அதற்குப் பிறகும் பல்லியைக் கண்டால் பயம், நாயைக் கண்டால் பயம், பூனையைக் கண்டால் பயம் என்று பயப்பட்டுக் கொண்டிருந்தான். அவனைப் பயந்தாங்கொள்ளி என்று கேலி செய்த அந்த ஊர்க்காரர் அனைவருக்குமே வேறு ஒன்றின் மேல் பயம் இருந்து வந்தது, வருடக் கணக்காக. அதுதான் பேய் பயம்!

பல்லிமேட்டுக் கிராமத்தில் நிரம்ப நாட்களாகப் பேய் பயம் இருந்து வந்தது. இரவு நடுச் சாமத்துக்குப் பிறகு அந்தக் கிராமத்தின் எல்லையில் இருக்கும் ஆல மரத்தடியில் பேய் குடியிருப்பதாகப் பேசிக் கொண்டனர். அந்தப் பக்கம் யாரும் போவதில்லை. என்ருலும், சில சமயம் அங்கு பெரிய கூக்குரல் கேட்பது வழக்கம். அது இங்கு கிராமத்தில் இருப்பவர் காதில் விழுந்தால், உடனே அலறியடித்துக் கொண்டு வீட்டிற்குள் ஓடிக் கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்கொள்வதும் தினசரி வழக்கமாக இருந்து வந்தது.

பயந்தாங்கொள்ளியைக் கேலிசெய்வதற்கென்றே சில நண்பர்கள் எப்போதும் அவனுடன் சுற்றிக் கொண்டு, அவனைக் கேலி செய்து அதில் மகிழ்ந்து கொண்டிருப்பார்கள். ஒரு நாள் அவர்களின் கேலி செய்யும் எண்ணம் வெகு தூரத்துக்குப் போய் விட்டது. அவர்கள் பயந்தாங் கொள்ளியிடம் சென்று, ''டேய், பயந்தாங்கொள்ளி, வரும் அமாவாசை இரவு பன்னிரண்டு



மணிக்கு நீ நம்ம ஊரின் எல்லையில் இருக்கும் ஆலமரத்துக்குச் செல்ல வேண்டும். ஒரு கிளையில் நாங்கள் கொடுக்கும் ஒரு வெள்ளைத் துணியைக் கட்டிவிட்டுத் திரும்ப வேண்டும். அப்படிச் செய்தால் அப்புறம் உன்னை நாங்கள் 'பயந்தாங்கொள்ளி' என்று கூப்பிட மாட்டோம். பிறர் அப்படிக் கூப்பிடவும் விட மாட்டோம். என்ன?'' என்றார்கள். அவனும் எப்படியோ தைரியத்தை வரவழைத்துக் கொண்டு 'சரி' என்று சொல்லி விட்டான்.

அமாவாசையும் வந்தது. இரவு பன்னிரண்டு மணிக்கு நண்பர்கள் எல்லோரும் ஒரு இடத்தில் கூடினர். பயந்தாங்கொள்ளியிடம் வெள்ளைத்-துணியைக் கொடுத்தனர். இந்தச் சமயத்திலும் அவனை எல்லோரும் பயமுறுத்திப் பார்த்தனர். அவனைப் பரிகசித்துச் சிரித்தனர். இப்போது அவனுக்குச் சிறிது பயம் தோன்றலானது. மேலும் அவர்களைப் பார்த்தால், பயம் இன்னும் அதிகரித்துவிடும் என்று நினைத்தவன், அவர்களைப் பார்க்காமல் தன் பயணத்தை ஆரம்பித்தான். நண்பர்கள் எல்லோரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். இவன் என்ன செய்யப் போகிறான் என்ற அலட்சியத்தில் அவர்கள் தங்களுடைய இடத்திற்குத் திரும்பினர்.'

பயந்தாங்கொள்ளி வழி நெடுகப் பயந்து கொண்டுதான் சென்றான். அதுவரை ஒன்றும் ஆகவில்லை என்பதால் அவன் உள் மனத்தில் கொஞ்சம் கொஞ்சமாகப் பய உணர்வு கம்மியாகிக் கொண்டே வந்தது. ஏதாவது பறவை கத்தினால் பயம் ஏற்பட்டு உடனே திரும்பிப் போய் விடலாமா என்று தோன்றும். ஆனால், அதுவரை வந்துவிட்டுத் திரும்பிப் போனால் ஊரில் உள்ளவர்கள் இன்னும் அதிகமாகக் கேலி செய்ய ஆரம்பித்து விடுவார்களே! துணிவுடன் முன் சென்றான். அவன் தன் சாமர்த்தியத்தை வெளிப்படுத்தும் நேரமும் நெருங்கியது. அவன் ஆலமரத்தை அடைந்து

விட்டான். ஆனால் கண்ணுக்கு ஒரு கிளையும் சரியாகத் தெரியவில்லை அப்படிப்பட்ட இருட்டு!

மரத்தில் ஜாக்கிரதையாக ஏறினான். ஒரு சின்னக் கிளை தெரிந்தது. அதில் வெள்ளைத் துணியைக் கட்டினான். அப்போதுதான் அவனுக்குத் திருப்தி ஏற்பட்டது. இனிமேல் நம்மை யாரும் ''பயந்தாங்கொள்ளி'' என்று அழைக்க மாட்டார்கள் என்ற சந்தோஷத்திலும், நினைப்பிலும் இறங்குவதற்குக் கீழ்க் கிளையில் காலை வைத்தான். அப்போது அவனை யாரோ இழுப்பது போல் தெரிந்தது. அதுவரை அவனிடம் மறைந்திருந்த பயம், ஓடிப் போயிருந்த பயம் திரும்பி வந்து விட்டது! ''ஆ! பேய் பின்னாலிருந்து இழுக்கிறதே!'' என்று நினைத்தான். மறு விநாடி ''ஆ!'' என்று கத்தி விட்டு மயக்கமுற்றான்.

நண்பர்கள் எல்லோருக்கும் பயம் பிடித்துக் கொண்டது. போனவன் இன்னும் திரும்பி வரவில்லையே என்ற பயம்தான்! பேய் அவனைக் கொன்று விட்டதோ! காலை ஐந்து மணியும் ஆகிவிட்டது. ஆறு மணி, ஏழு மணி... இன்னும் பயந்தாங்கொள்ளி வரவில்லையே! ஒருவேளை பேய் அடித்து இறந்து போயிருந்தால்... பெரிய ஆபத்தாகி விடுமே! செய்தி அறிந்து ஊர் மக்கள் ஒன்று திரண்டனர்.

''இப்படியா விஷப் பரீட்சை செய்வது? பயந்தாங் கொள்ளியை, ஒன்றும் அறியாதவனை, ஏமாற்றி அனுப்பினீர்களே! அவன் உயிருக்கு ஏதாவது ஆகியிருந்தால் யார் பொறுப்பு?'' என்று கூறிப் பயந்தாங்கொள்ளியின் நண்பர்களை நையப் புடைத்தார்கள்.

ஊரே திரண்டு கிராம எல்லைக்கு வந்தது. அங்கு ஆல மரத்தடியில் கிளை மேல் சாய்ந்து கிடந்த பயந்தாங்கொள்ளியின் உடலைப் பார்த்தனர். கிளையில் வெள்ளைத் துணி கட்டியிருப்பதையும் கண்டார்கள். ''ஐயோ! பயந்தாங்கொள்ளியைப் பேய் அறைந்து கிளையிலே போட்டு விட்டுப் போய் விட்டதே!'' என்று எல்லோரும் கதறினர். சிலர் மரத்தின் மேல் ஏறி, பயந்தாங்கொள்ளியின் உடலை மெதுவாகக் கீழே இறக்க முயன்றனர். உடலைத்தொட்டதும்பயந்தாங்கொள்ளி விழித்துக் கொண்டான். அப்போதுதான் எல்லோருக்கும் தெரிந்தது, அவன் மயக்கமுற்றுக் கிடந்திருக்கிறான் என்று!

பயந்தாங்கொள்ளி எல்லோரையும் பார்த்து மலங்க மலங்க விழித்தான். பிறகு திரும்பிப் பார்த்தான். அவன் சட்டை ஒரு கிளையில் மாட்டிக் கொண்டிருப்பதைக் கண்டான். ''அடடா, இந்தக் கிளைதான் என் சட்டையைப் பிடித்து இழுத்ததா? பேய் என்றல்லவா நினைத்து விட்டேன்'' என்று கூறி, தன் சட்டையை மெதுவாகக் கிளையிலிருந்து எடுத்தான். பிறகு கீழே அவனாகவே — யார் துணையும் இல்லாமல் இறங்கி வந்தான். தன் நண்பர்களைப் பார்த்தான்; அவர்கள் தலை குனிந்து கொண்டார்கள்.

பயந்தாங் கொள்ளி மூலம் இந்த ஊரில் இருந்த பேய்ப் பயமே போய் விட்டது. பயந்தாங்கொள்ளி எல்லோரையும் பயம் இல்லாதவர்களாக ஆக்கி விட்டான். அவனை அங்கிருந்த சிலர் தோளின் மேல் தூக்கி வைத்துக்கொண்டு ஆடிப் பாடி ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

'பயந்தாங்கொள்ளி' என்ற பயம் போனவனுக்கு மிகவும் பெருமையாக இருந்தது'' என்று கதையை முடித்தாள் பாட்டி.

''பாட்டி கதை நன்றாக இருந்தது'' என்று சொன்ன சிறுவர்கள், அவரவர் இடத்திற்குச் சென்று படுத்துக் கொண்டனர்.

திருக்குறள் புதிர் – விடை

புதிர் 3 :

அடுத்தது காட்டும் பளிங்குபோல், நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம். (706)

தன்னை அடுத்த பொருளின் தன்மையைக் காட்டி விடுகிறது கண்ணாடி. அதேபோல், ஒருவனுடைய நெஞ்சிலே மிகுதியாக உள்ள குணத்தை முகம் காட்டிவிடும்.

புதிர் 4 :

வலியின் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று. (273)

ஐம்புலன்களையும் அடக்கி ஆள முடியாத ஒருவன், தவக்கோலம் பூண்டால், அது புலியின் தோலைப் போர்த்துக்கொண்டு பசு மேய்வது போல் ஆகும்.

கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் பட்டியல்—தொடர்ச்சி

உறுப்பினர் எண், பெயர், முகவரி

533. எஸ். சீனிவாசன், 29/94, சுப்பிரமணியம் வீதி, ஆர். எஸ். புரம், கோவை-2
534. கா. மீனாட்சி, 39, வேதை சாலை, திருத்துறைப்பூண்டி
535. கே. டி. வெங்கடேஷ், C/o. கே.டி. சந்தானம், பாலாஜி தெரு, எம்.டி.எச். ரோடு, காந்தி நகர், ஆவடி, சென்னை-54
536. சி. வா. உலகநாதன், 17, உலகம்மன் கோவில் தெரு, மீனாட்சிபுரம், திருநெல்வேலி சந்திப்பு.
537. கு. கணேசன், 1/2, அக்ரகாரம், பேரையூர்-623708
538. கே. கார்த்திகேய பாண்டியன், C/o கார்த்தி ஸ்டோர், முருகன் கோவில் தெரு, உசிலம்பட்டி-626532.
539. கே. திருநாவுக்கரசு, S/o. நியூ பிரேமா டீ ஸ்டால், 94, லாகடம், மயிலாடுதுறை 609001
540. ஆர். ராமச்சந்திரன், 9/45, லஜபதிராய் தெரு, ஸ்ரீநிவாசபுரம், கோவை-9
541. எம். கோகுலகிருஷ்ணன், 18, போலீஸ் காலனி வீதி எண் 3, சிங்காநல்லூர், கோவை-5
542. உ. வசந்தன், 15/5, கடலூர் ரோடு, டோல்கேட், அரியாங்குப்பம், பாண்டி-605007
543. பி. கண்ணன், S/o. பி. பாலசுப்பிரமணியம், தலைமை ஆசிரியர், தெப்பம்பட்டி-626512
544. எம். எச். சாதிக் குத்தூஸ், 3/69, ஹாஜி வீதி, நீடூர்-609203
545. எம். ரவிசந்திரன், 44-பி, பவர் ஹவுஸ் ரோடு, ஈரோடு-1
546. பி. மீனாட்சிசுந்தரம், 8, ஜி. பி. மகால், நியூ சித்தாபுதூர், கோவை-44
547. ஜி. ரகுபிரசன்னா, 31, எக்ஸ்டன்ஷன் வீதி 3, மேட்டுப்பாளையம்-641301
548. ம. வித்தியாசாகர், 5/83, சடையப்ப தேவர் வீதி, ராமனுஜபுரம், கோவை-45
549. வி. ராஜா ராவ், 5/32, எக்ஸ்டென்ஷன் வீதி, 3, மேட்டுப்பாளையம் 641301
550. ஏ. பாண்டியன், 16, காசா அருணகிரி தெரு, ராயப்பேட்டை, சென்னை-14
551. ச. ஜ. சோபனா, 1/0/2, அழகாபுரம் மெயின் ரோடு, சுவர்ணபுரி, சேலம்—4.
552. சு. அய்யண்ணன், 28, சிக்கநாயக்கர் வீதி, ஆனைமலை, பொள்ளாச்சி தாலுகா.
553. எஸ். ஜெயப்பிரகாஷ், 11—D—1, அண்ணாநகர், சிறுமுகை—641 302.
554. டி. சாவித்திரி, 50, போஸ்டாபீஸ் ரோடு, பொன்னகரம், பழனி.
555. வி. முரளி, 101, முதல் தெரு, தர்மநகர், சேலம்—5.
556. ஆ. சுந்தரம், 5, கான் தெரு, சூளைமேடு, சென்னை—94.
557. டி. சி. விஸ்வநாத், 29—ஏ, மலை அடிவாரத் தெரு, சங்ககிரிதுர்க்கம்—637 301.
558. வி. கணபதி சுப்பிரமணியன், 8—26, புது அக்ரகாரம், பூம்புகார்—609 105.
559. ச. பாக்கியலட்சுமி, 66, சாலை விநாயகர் கோயில் தெரு, சென்னை—1.
560. வி. நித்தியானந்த், பி—38, என். ஜி. ஓ. 'பி' காலனி, திருநெல்வேலி—7.
561. எஸ். வி. உமாசங்கர், 146, செட்டித் தெரு, நாகர்கோவில்.
562. கே. நரேந்திரநாத் பாபு, 10, சிதம்பரநகர், கோட்டாறு, நாகர்கோவில்—2.
563. இரா. அனந்தராமன், 11, கணபதி காலனி, சேமியர்ஸ் சாலை, சென்னை—18.
564. எஸ். கிரிஜா, 15ஏ, வடக்கு பார்க்கு தெரு, வெங்கடாபுரம், அம்பத்தூர், சென்னை-53
565. எஸ். ஆர். பரத்வாஜ், 8ஏ, ராமராவ் அக்ரகாரம், தென்னூர், திருச்சி—17.
566. ந. அமுதா, D/o. வ. நரசிம்மலு, ஆசிரியர், ப.யூ. நடுநிலைப்பள்ளி, செங்குறிச்சி—606 117
567. எஸ். சதீஷ்குமார், 1/126—சி, வடக்குத்தெரு, கீழஆம்பூர்—627 418.
568. ந. பாலமூர்த்தி, எஃப் 103—ஏ, எஸ்.பி.பி. காலனி, ஈரோடு—10.
569. டி. கார்த்திகேயன், 3, சேனைவாணியர் தெரு, கொக்கிரக்குளம், நெல்லை கலெக்டர் அலுவலகம், திருநெல்வேலி
570. ஆர். சங்கரசுப்பிரமணியன், 1/41, வடக்குத் தெரு, கீழஆம்பூர்—627 418
571. எஸ். செந்தில்குமாரி, 1, பாரதியார் தெரு, வி. மருதூர், விழுப்புரம்—605 602.
572. ந. முருகேசன், 55சி, அண்ணா தெரு, அகரம், அறந்தாங்கி—614 616.
573. ஏ. வி. ஜேம்ஸ் ஆரோக்கியராஜ், அரண்மனைத் தெரு, சொக்கம்பட்டி-627 765.
574. வி. திலகவதி, 35, சௌடம்மன் கோவில் வீதி, கோவை—1.
575. க. சங்கர்கணேஷ், பி/88, அசோக்நகர், வீட்டு வசதி வாரியம், திருப்பத்தூர் (வ.ஆ.).
576. கே. திருமால், 567, மாரியம்மன் கோவில் தெரு, கோட்டை, வாணியம்பாடி.
577. ரா. பிரபு, 339, கொல்லைத் தெரு, வாணியம்பாடி.
578. பி. கார்த்திக், 3/III மெயின் ரோடு, காந்திநகர், கரூர்—639 001.
579. எம். எஸ். மலர்செல்வி, 'லட்சுமி நிவாஸ்' மரக்கட்டை ரோடு, திருவனந்தபுரம்—695036
580. அ. சீனிவாசன், C/o. மீனாட்சி மெடிக்கல் ஸ்டோர்ஸ், மெயின் ரோடு, அலங்காநல்லூர், மதுரை மாவட்டம்.
581. சி. சங்கர், 18/எச். காமராஜ் ரோடு, பிளாக்-19, நெய்வேலி—3.
582. எச். எபனேசர் சித்ரா, 13—ஏ, பழனி மடத்தெரு, கரிமேடு, மதுரை -2.

583. எஸ். குருபரன், 22, வடக்கு வீதி, வால்குடி–621 601.
584. ரா. வெங்கடேஷ், 12, கிருஷ்ணன் கோவில் 3-ம் தெரு, மானம்புச்சாவடி, தஞ்சை-1.
585. க. ராஜேஷ்குமார், 15, வள்ளல் பச்சையப்பன் தெரு, காஞ்சிபுரம்–1.
586. ஆர். கார்த்திகேயன், 4/40, தேரோடும் தெரு, முதலியார்பேட்டை, பாண்டி–4.
587. Kamala Narayanaswamy, 22. Karia nivas, Subash Road, Mulund West Bombay-80.
588. வி. பாலாஜி, 6, சே. வி. கோவில் தெரு, சென்னை–33.
589. க. மு. விஸ்வநாதன், 37, பெருமாள் கோவில் தெரு, கண்ணமங்கலம் 632 311.
590. பு.எஸ்.மீனாட்சி, D/o. பு.என்.சீனிவாச ஐநாயுடு, இராஜாகுப்பம்கிராமம்-632601
591. கே. என். சுரேஷ், 38, பெரிய சௌராஷ்டிரா தெரு, வாலாஜாப்பேட்டை–632 513.
592. எஸ். ராதிகா, 36, அக்ரகாரம், முத்தரசநல்லூர்–620101.
593. அர்ஜுன் பரத்வாஜ், 23, நடேச அய்யர் தெரு, சென்னை–17.
594. ப. மணிவாசகன், 16ஏ, சுப்ரமணியபுரம் அக்ரகாரம், தேவகோட்டை–2.
595. ஜி. ரமேஷ், 3/26, அண்ணா தெரு, ஐயப்பன் நகர், திருச்சி–21.
596. Vandana Sankar, Manalil Annexe, Kumarapuram, Trivandrum-II.
597. கி. செந்தாமரைச்செல்வி, 10டி, பகவதி இல்லம், அண்ணாநகர், பழனி–2.
598. க. விஜயப்பிரியா, 13, வள்ளலார் இரட்டைத்தெரு, மயிலாடுதுறை.
599. என். ஜெயராமன், 16–ஏ, முனியப்பன் கோவில் தெரு–2, குகை, சேலம்–6.
600. யு. நாசர், 18, ராமசாமி தெரு, கிச்சிப்பாளையம், சேலம்–1.
601. என். பாலாஜி, 55, மேட்டு அக்ரகாரம் தெரு, சேலம்–1.
602. ஜெ. நடராஜ், II/8, சேஷசாயி காலனி, மேட்டூர் டாம்–3, சேலம்.
603. ஏ. பாபு, 167, மருதமலை மெயின் ரோடு, பி. என். புதூர், கோவை–41.
604. க. இராமானுஜம், 5/2–ஏ, பூசாரி சென்னிமலை தெரு, ஆரம்பட்டி–638 009.
605. டி. பிரபு, S/o. டி. தாமோதரன், மங்கலம்–638 663.
606. என். ராஜாராம், 4/32, ஹவுசிங் யூனிட், ரேஸ் கோர்ஸ், கோவை–18.
607. எஸ். ரெங்கநாதன், 2, வரதராஜபுரம், திருநெல்வேலி–1.
608. ச. பிரியவரதா, டைப்-III, பிளாக் 7/3, தெர்மல்நகர், தூத்துக்குடி–6.
609. ந. விஜய்சங்கர், 4, ஏ. கே. கோபால் காலனி, நெல்லிநகர், தருமபுரி–3.
610. எஸ். முரளிகிருஷ்ணன், 93, சாலை ரோடு, சேலம்–1.
611. ஜெ. கலைச்செல்வி, 3, நாகலிங்கம் தெரு, அரிசிப்பாளையம், சேலம்–9.
612. ஆர். மகாதேவன், 1/68, பெருமாள் சன்னதித் தெரு, நாரணம்மாள்புரம், சங்கர் நகர்–627 357.
613. கே. பி. சுந்தரேஸ்வரன், 33, வக்கீல் நாகராஜன் வீதி, உடுமலைப்பேட்டை.
614. ஜி. பாலச்சந்தர், 58, அம்பலவாண சுவாமி கோயில் தெரு, குகை, சேலம்–6.
615. கே. ஸ்ரீவித்யா, 26/ஏ, தெற்கு ரதவீதி, சங்ககிரிதுர்க்கம்–637 301.
616. ம. ஜெ. அந்தோணி பீட்டர், 8–வது வகுப்பு 'பி', ஜி. எச். எஸ். பள்ளி, மடத்துக்குளம்–642 113.
617. எஸ். ராமமூர்த்தி, 12ஏ, கமலாலயம் மேல்கரை, திருவாரூர்.
618. டி. மணிகண்டன், 10, சோமந்துரையார் வீதி, கணியூர்–638 203.
619. ஏ. எஸ். வேல்முருகன், 7/24, சி, சேதுமாதவ நாயுடு காலனி, செட்டித் தெரு, புவனகிரி–608 601
620. ந. ஆனந்த் பாபு, பிளாட் எண் 24, கிழக்கு 'பி' அண்ட் 'டி'காலனி, சேலம்–4.
621. வி. சுவாமிநாதன், 3, 7–வது கிழக்கு கிராஸ் தெரு, காந்திநகர்– வேலூர்–6.
622. இ. க. வெற்றிவேல், 21சி (மாடி) மசூதி தெரு, சென்னை–29.
623. ஜி. சாமிநாதன், 30, காசாங்குளம் கீழ்க்கரை, பட்டுக்கோட்டை.
624. எஸ். வெற்றிவேலன், 26, எஸ்.வி. கோவில் தெரு, சாணான்குப்பம்–635 814.
625. ஜோ. பெலிக்ஸ், C/o. கே. ஜோசப், நடுத்தெரு, மைக்கேல்பட்டி, தஞ்சை மாவட்டம்.
626. கே. இலக்ஷ்மி, ஏ–5, நியூ அனகேச நகர், செங்கற்பட்டு.
627. செ. மணிமேகலை, த/பெ. இரா. செல்வராசு, வா. வேலூர்–638 202.
628. எஸ். சுபகணேசன், 12–சி, டவுன் ஸ்டேஷன் ரோடு, திருச்சி–2.
629. க. சுரேஷ், 27, அண்ணாசாலை, அனந்தபுரம்–605 201.
630. கோ. நித்யானந்தன், 2, நடராஜர் தெரு, எஸ். ஜி. பி. காம்பவுண்ட், திண்டுக்கல்.
631. ஸ்ரீ ஹரி, 22, பெரியார் நகர், சென்னை–19.
632. பொ. குமார், 21. பண்டித ஜவஹர்லால் நேரு தெரு, வாணியம்பாடி.
633. எம். ரத்தினக்குமார், 13, மேட்டுத்தெரு, திருவாரூர்–2.
634. அ. கதிர்வேல், S/o. அண்ணாமலைத் தேவர், கீழப்பெருமழை–614 703.
635. வி. சேதுராமன், 599, கீழ 3–ம் வீதி, புதுக்கோட்டை.
636. கி. செ. வித்யா, 46, கோபாலசமுத்திரம், வடக்கு வீதி, மன்னார்குடி.
637. வினு வெங்கடராமன், 1, ராஜேந்திர பிரசாத் ரோடு, நேரு நகர், சென்னை–44.
638. ஆர். சாந்தி, 76, வெஸ்ட் டாங்க் ஸ்கொயர் தெரு, திருவள்ளூர்–602 001.
639. ஆர். வசந்ததிருமால், 22, தோப்பா சாமி கோவில் தெரு, சைதாப்பேட்டை, வேலூர்–12, (வ. ஆ.).
640. பி. இளங்கோ, 35, முத்துச் செட்டித் தெரு, திருப்பத்தூர்–635 601.

(இன்னும் வரும்)

விஞ்ஞான விந்தை! -



வண்ணப்பட விளக்கம்

அமெரிக்கரின் சாதனை!!

விஞ்ஞானிகள் பூமியில் ஆராய்ச்சி செய்வதோடு நிற்கவில்லை; விண்வெளியிலும் பல அதிசயிக்கத் தக்க ஆராய்ச்சிகளைச் செய்து வருகிறார்கள்.

வான வெளியில் செல்ல முதலில் பலூன்களைப் பயன்படுத்தினார்கள். அப்புறம் விமானங்களைப் பயன்படுத்தினார்கள். பிறகு, ராக்கெட் விசையைக் கண்டு பிடித்து வான மண்டலத்தில் ராக்கெட்டுகளை ஏவி வருகிறார்கள். இதனால் வான மண்டலத்தைப் பற்றிய புதிய புதிய செய்திகளை அறிந்து கொள்ள முடிகிறது.

சமீபத்தில் அமெரிக்கர்கள் சாலஞ்சர் (சவால் விடுபவன்) என்ற நவீன விண்வெளி ஓடத்தைப் பறக்க விட்டுப் பெரிய சாதனை புரிந்திருக்கிறார்கள்.

சாலஞ்சரில் பயணம் செய்தவர்களில் நால்வர் ஆண்கள். ஒருவர் பெண். அவர் பெயர் ஸாலி ரைடு. (ஜாலி ரைட் அல்ல!) முதல் முதலாக விண்வெளிப் பயணம் செய்த அமெரிக்கப் பெண் இவர்தான். ஏற்கெனவே இரண்டு ரஷ்யப் பெண்கள் விண்வெளிப் பயணம் செய்திருக்கிறார்கள்.

இப்போது அமெரிக்காவிடம் நான்கு விண்வெளி ஓடங்கள் இருக்கின்றன.

ஒவ்வொன்றும் ஒரு சிறிய ஜெட் விமானத்துக்குச் சமம். 37 மீட்டர் நீளமும், இறக்கையின் ஒரு முனையிலிருந்து மறு முனை வரை அளந்து பார்த்தால் 24 மீட்டர் அகலமும் இருக்கும்.

விண்வெளி ஓடம் பூமியைச் சுற்றி வரும் பாதை, பூமியிலிருந்து 298 கிலோ மீட்டர் உயரமே இருக்கும். அந்த அளவு உயரம் சென்றதும், அது தான் எடுத்துச் செல்லும் விண் கலங்களை அங்கிருந்து விண்வெளியில் தள்ளி விடும். சாலஞ்சர் ஓடம் மூன்று விண் கலங்களையும், ஏழு சிறிய பெட்டிகளையும் கொண்டு சென்றது. அப்பெட்டிகளை 'விட்டேரும் பெட்டகங்கள்' என்கிறார்கள். ஒன்றில் எறும்புக் கூட்டம், இன்னொன்றில் முள்ளங்கி விதை மற்றொன்றில் வேறு ஒரு திரவத்தில் போடப்பட்டுள்ள பாதரசம் — இப்படி அந்தப் பெட்டிகள் ஒவ்வொன்றிலும் ஒரு பொருளை வைத்திருக்கிறார்கள். விண்வெளியின் எடையற்ற சூழலில், தட்ப வெப்ப மாறுதல்களால் அவற்றில் என்னென்ன விளைவுகள் ஏற்படும் என்று பார்க்கின்றனர்.


மருத்துவம், வேளாண்மை, பொறி இயல் அறிவு வளர இத்தகைய சோதனைகளைச் செய்து வருகின்றனர்.


பூமியைச் சுற்றிலும் 300 அல்லது 320 கிலோ மீட்டர் உயரம் வரை தான் வாயு மண்டலம் இருக்கிறது. அதற்குப் பிறகு விண்வெளிதான். அங்கே காற்று இல்லை. நாம் உயிர் வாழ்வதற்கு மிகவும் தேவையான பிராண வாயுவும் கிடையாது. ஆகையால் எந்த உயிரும் அங்கே வாழ முடியாது. பிராண வாயு கொண்டுபோனால் தான் உயிருடன் இருக்க முடியும்.

பருத்த உடலை உடையவர் அங்கே சென்றால் உடலின் கனமே தெரியாது. அதிக கனமுள்ள பொருளைக்கூட மிக எளிதாகத் தூக்கிச் செல்லலாம். காரணம், பூமியில் உள்ள அளவு ஈர்ப்பு விசை அல்லது ஆகர்ஷண சக்தி அங்கே இல்லை.

விண்வெளியில் ஈர்ப்புச் சக்தி இல்லையாதலால், அங்கு எப்படி உயிரினங்களும், தாவர விதைகளும், திரவங்களும் மாறுபாடு அடைகின்றன என்பதை அறியவே விண்வெளி ஓடங்களின் மூலமாகச் சோதனை செய்து பார்க்கின்றனர். அத்துடன் மின்னல் அடிப்பதையும், இடி இடிப்பதையும், புயல் வீசுவதையும் விமானிகள் புகைப்படம் எடுத்திருக்கிறார்கள். புயல்களின் தன்மை, அவை எப்படிப் பரவுகின்றன போன்ற பலவற்றைப் பற்றியும் ஆராய்கிறார்கள்.

விஞ்ஞான விந்தை





விளக்கேற்று

ஹைற ஜக்கா ஹைற
அரைப் படி நெய்
வெள்ளைக்காரன் தலையிலே
விளக்கேத்தி வை.

கூட்டுப் பாட்டு

முருங்கைக்காய்க் கூட்டு
முதுகிலே ரெண்டு போட்டு,
வாழைக்காய்க் கூட்டு
வம்புப் பையனை விரட்டு.
கத்தரிக்காய்க் கூட்டு
கதவைச் சாத்திப் பூட்டு!

அரளிப் பாட்டு

ஆத்திலேதான் பொன்னம்மா
அடுக்கரளி, அடுக்கரளி.
அடுக்கடுக்கா பொன்னம்மா
பூத்திருக்க, பூத்திருக்க
கொத்துக் கொத்தா பொன்னம்மா
கொத்தரளி கொத்தரளி
கொண்டையிலே பொன்னம்மா,
கொலுவிருக்க, கொலுவிருக்க.

டிங்கிரி டிங்காலே

டிங்கிரி டிங்காலே — சப்பன்
தண்ணிக்குப் போனானும்
குனிஞ்சு பார்த்தானும் — கிணத்திலே
குப்புற விழுந்தானும்.



பாடல்கள்



சடுகுடு பாட்டு

எனக்குப் பயந்தவனே,
ஏழாடு மேய்ச்சவனே.
கொட்டாங்கச்சி எடுத்தா,
கூழுத் தண்ணி ஊத்துறேன்,
ஊத்துறேன், ஊத்துறேன்.


வித்தில்லாப் பழம் அது
என்ன பழம்? என்ன பழம்?
வாழைப் பழம், வாழைப் பழம்.
வாழைப் பழத்திலே
தோலைக் கடி, தோலைக் கடி,
தோலைக் கடி.

நேரமாச்சு


அத்தாச்சி — மணி
பத்தாச்சு
அண்ணனுக்குச் சோறு போட
நேரமாச்சு

அத்தானுக்கு வரவேற்பு

அத்தான் அத்தான் வாங்க
ஆசனப் பலகையிலே இருங்க.
உங்கள் கண்ணோ யானைக் கண்
உசந்த மூக்கோ கிளி மூக்கு
பேசும் நாக்கோ பிண்ணாக்கு
பெருத்த வாயோ ஒரு கால்வாய்
நல்ல வயிறோ வண்ணான் சால்
நடக்கும் காலோ ஏணிக் கால்.



கொஞ்சம் சிரியுங்கள்



டாக்டர்: தம்பி. உன் வியாதி குண மாயிடுச்சு. நீ வீட்டுக்குப் போக லாம். உன்னை டிஸ்சார்ஜ் பண்ணிட் டேன்.

பையன்: அப்படின்னு பஸ் சார்ஜ் கொடுங்க.

—எல். குமார் (1567)



''அம்மா, இந்தப் புதுப் பேஸ்ட் என்னவோ மாதிரி இருக்குதே! நல் லாவே இல்லையே!''

''ஐயையோ, அது அப்பாவின் ஷேவிங் கிரீம். அதை ஏண்டி எடுத்தாய்?''


—சிவசக்தி



திருடன்: பாப்பா, உன் செயினைக் கழட்டித் தா. உனக்கு மிட்டாய் வாங்கித் தாரேன்.

சிறுமி: ஓ, எனக்கு 1500 ரூபாய்க்கு மிட்டாய் வாங்கித் தா. அப்புறம் செயினைத் தாரேன்.

—எல். குமார் (1567)




''அப்பா, தம்பியை அவசரக் குடுக் கைன்னு அடிக்கடி சொல்லுவீங்களே, அது சரியாத்தான் இருக்கு.''

''அப்படி என்னடா அவன் செய் துட்டான்?''

''அவன் மேல் ஸ்கூலுக்குப் போயிட் டான். ஆனால், நான் அப்படி இல்லேப்பா.''

—நிசை முத்து




சேவல் 1: என்ன அண்ணே, இன்னிக்கு லேட்டாக் கூவினே?

சேவல் 2: அட இன்னிக்கு ஞாயிற்றுக் கிழமை. எல்லோருக்கும் லீவு தானே. அதனாலேதான்!

—எம். ஆர். ஸ்ரீப்ரியா (225)

இரு போலோ விளையாட்டுக்கள்

குண்டுமணி.



பச்சைப் பசேலென்ற மைதானத்தில் குதிரைகளின் மீதமர்ந்து விளையாடும் ஆட்டம் போலோ!

போலோ விளையாட்டின் சட்ட திட்டங்கள் கிட்டத்தட்ட ஹாக்கியின் சட்ட திட்டங்களைப் போலவே இருக்கும். ஒரு குழுவில் நான்கு குதிரை வீரர்கள் இருப்பார்கள். குதிரையில் அமர்ந்து நீண்ட குச்சியினால் பந்தைத் தட்டித் தட்டி எடுத்துப் போய் எதிரியின் கோலில் செலுத்துவார்கள்.

போலோ விளையாட்டுக்கான மைதானம் 300 கஜம் நீளமும் 150 கஜம் அகலமும் கொண்டது.

கம்பங்கள் மெலிதான மரத்தில் அமைந்திருக்கும். இரண்டு கம்பங்களுக்கிடையேயான இடைவெளி 24 அடி தூரம் இருக்கும். இரு கோல் கம்பங்கள் மைதானத்தின் முடிவில் அமைக்கப்பட்டிருக்கும். மூன்றே முக்கால் அங்குலம் விட்டமுள்ள பந்தை போலோ ஆட்டக்காரர்கள் பயன்படுத்துவார்கள். போலோ பந்தின் எடை ஐந்தரை அவுன்ஸ் இருக்கும்.

ஒவ்வொரு குழுவும் தம் பக்கமுள்ள கோலில் பந்து செல்ல விடாமல் தடுக்கும். இரண்டு குதிரை வீரர்கள் முன்னணி ஆட்டக்காரர்களாக ஆடுவார்கள். மூன்றாவது ஹாஃப் – பேக், நான்காவது ஃபுல் பேக் என்று வகைப்படுத்தியிருப்பார்கள்.

சக்கர் என்பது ஒரு ஆட்டத்துக்குக் குறித்துள்ள வேளையாகும். அதாவது ஏழு நிமிஷங்கள் முதலில் ஆடுவார்கள். இப்படி எட்டுச் சக்கர்கள் உண்டு. மூன்று நிமிஷ இடைவேளை குதிரைகளை மாற்றிக்கொள்ள வழங்கப்படும். நாலு சக்கருக்குப் பிறகு ஏழு நிமிடங்கள் ஓய்வு உண்டு.



போலோ விளையாட்டு பாரசீகத்தில் (Parsia) நாலாயிரம் வருஷங்களுக்கு முன்பிருந்தே ஆடப்பட்டு வருகிறது. இப்போதுள்ள நவீன போலோ விளையாட்டு 1862ம் வருஷம் பஞ்சாபில் தொடங்கப்பட்டது.

இந்தப் போலோ விளையாட்டை ஆதிவாசி குதிரை வீரர்களிடமிருந்து கற்று நவீனப்படுத்தியவர்கள் பிரிட்டிஷ் அதிகாரிகள்.

1869ம் வருஷம் போலோ விளையாட்டு இங்கிலாந்தில் அறிமுகப் படுத்தப்பட்டது. 1876ம் வருஷம் அமெரிக்காவில் ஜேம்ஸ் கார்டன் பென்னட் என்ற கோடீஸ்வரர் போலோவை வெற்றிகரமாக அறிமுகப்படுத்தினார். இதன் பிறகு போலோ சர்வதேச விளையாட்டாக உருப்பெற்று விட்டது.

எகிப்து, இந்தியா, இங்கிலாந்தில் போலோ விளையாட்டு அவுட்டோர் விளையாட்டு.

நியூயார்க் நகரத்தில் டிக்கன்ரைடில் அகாடமியில் பென்னெட் அறிமுகப் படுத்திய போலோ இண்டோர் விளையாட்டாக ஆடப்பட்டது. 1880வரை இண்டோர் விளையாட்டாக இருந்த போலோ அவுட்டோர் விளையாட்டாகவும் பிராபல்யமாயிற்று. இண்டோர் போலோவுக்கு மூன்று குதிரைவீரர்கள் தேவைப்பட்டார்கள்.

நீர் போலோ (Water Polo)

குதிரையில் அமர்ந்து போலோ ஆட்டம் ஆடுவது தவிர, நீரில் நீச்சல் வீரர்கள் ஒரு பந்தை — நீரில் மிதக்கும் பந்தை — வைத்து ஆடினர். இங்கிலாந்தில் 1870ம் வருஷம் நீர் போலோ தொடங்கப்பட்டது. அமெரிக்காவுக்கு 1890ம் வருஷம் வந்தது.

இந்த நீர் போலோவில் ஒரு கோஷ்டிக்கு ஏழு ஆட்டக்கரரர்கள் இருப்பார்கள். நீச்சல் குளத்தின் ஒரு மூலையில் அமர்ந்த கோலை ஒரு நீச்சல் வீரர் பாதுகாப்பார்.


ஏழு நிமிஷங்கள் ஓர் ஆட்டம். இப்படி இரண்டு தடவை ஆட்டம் தொடரும். முதல் ஏழு நிமிடங்களுக்குப் பிறகு மூன்று நிமிட இடைவேளை உண்டு.

நீச்சல் குளத்தின் மத்தியில் உயரத்தில் உள்ள பந்து நீச்சல் குளத்தில் விழ ஆட்டம் தொடங்கும். ஒரு குழு நீச்சல் வீரர்கள் தங்களுக்குள் 'பாஸ்' செய்து இறுதியில் கோலில் செலுத்துவார்கள். பந்தை எறியும்போது ஒரு கைதான் பயன்படுத்தப்படும்.

இந்த நீர் போலோவுக்கு நீச்சல் திறமையும், தளர்ச்சி யில்லாத உடல் கட்டும் தேவை. ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பல ரசிகர்களின் உள்ளங் கவர்ந்த விளையாட்டு இந்த Water Polo.

பிரபல ஓவியர் பிகாஸோ

பிகாஸோவின் ஓவியத்தை ரசிக்கத் தெரியாத ஒருவர் ஒரு முறை ''இதென்ன ஓவியம்! ஒரே கோரமாக இருக்கிறதே!'' என்றார்.



அதற்கு அமைதியாகப் பிகாஸோ, ''அது ஓவியமல்ல, முகம் பார்க்கும் கண்ணாடி'' என்றார்.

ஒரு நண்பர் பிகாஸோவை நோக்கி ''நீங்கள் ஏன் மாடர்ன் ஓவியமாகவே வரைகிறீர்கள்?'' என்றார்.

அதற்கு பிகாஸோ, ''அதில்தான் ஓவியம் நன்றாக உள்ளதா இல்லையா என்று கண்டு பிடிக்க முடியாது'' என்று பதிலளித்தார்.

ஒரு நாள் பிகாஸோ தான் வரைந்த ஓவியத்தின் முன் பிரஷுடன் நின்று யோசித்துக் கொண்டிருந்தார். அப்போது ஒரு நண்பர் அவரிடம், ''என்ன யோசிக்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

''இந்தப் படத்தில் இந்தப் பெண்மணியின் மூக்கில் சிறிது மாற்றம் செய்ய வேண்டும்'' என்று பிகாஸோ கூறினார்.

அதற்கு நண்பர்: இதில் என்ன யோசனை வேண்டியிருக்கிறது. மாற்றம் செய்ய வேண்டியதுதானே!

அதற்கு பிகாஸோ, ''அதற்காகத்தான் நான் வரைந்த இப்படத்தில் மூக்கு எங்கிருக்கிறது என்று தேடிக் கொண்டிருக்கிறேன்'' என்றார்.

—கு. மணிமாறன்

முழு நீளக் கதை •

இந்தியத் தாயின் இரு குழந்தைகள்



லட்சுமி ராஜரத்னம்

செல்வி மூச்சிரைக்க ஓடி வந்தாள். தோளில் புத்தகப்பை தொங்கியது. அந்த மரத்தடிக்கு வந்ததும் 'டக்'கென்று நின்றாள். அவள் கண்களில் கண்ணன் பட்டுவிட்டான். ஆனால், அவள் கூவும் முன்பு கண்ணன், ''செல்வி, வந்திட்டியா?'' என்று கூறிவிட்டான்.

செல்வி அவன் அருகில் வந்து உட்கார்ந்தாள். பார்வையற்ற கண்ணன் அவளது கரத்தைப் பிடித்துக்கொண்டான். ''உன் நடையை வச்சே கண்டுபிடிச்சுட்டேன். பார்த்தியா?'' என்று கண்ணன் பெருமைப்பட்டுக் கொண்டான்.

அடுத்த கணம் மூக்கை உறிஞ்சினான். ''இது என்ன வாசனை செல்வி? புதுசா இருக்கு?''

''இதுவா? சண்பகப் பூ, கண்ணா''.

''அது எப்படி இருக்கும்?''

பையிலிருந்து பூவை எடுத்து, அவன் கையில் கொடுத்தாள். ''ஜமுனாம்மா கொடுத்தாங்க.''

கண்ணன் கரத்தால் பூவைத் தடவினான். என்ன கலர் என்று தெரியாது. சொன்னாலும் புரிந்து கொள்ள முடியாது. பொருள்களின் அளவைக் கையால் தடவி, மூக்கால் முகர்ந்து பார்த்து அடையாளம் கண்டுகொள்வான். இதெல்லாம்கூட செல்விதான் அவனுக்குச் சொல்லிக் கொடுத்தாள்.

''இதுதான் மல்லிகைப்பூ.''

கண்ணன் ஆசையாகத் தடவிப் பார்ப்பான்.

''சின்னதா இருக்கு செல்வி.''

''இதோ இதுதான் மாம்பழம்.''

''அவனுக்கு வண்ணம் என்ற ஒன்று உண்டு என்பது தெரியாது. புதுசு புதுசாக அவனுக்கு எல்லாவற்றையும் கொண்டு காட்டி அறிமுகப் படுத்துவதில் அவளுக்கு ஆர்வம் அதிகம்.

''இந்தப் பூப்பேரு என்ன சொன்னே?''

''சண்பகப் பூ.''

''நான் ஒரு பூவை வச்சுக்கட்டா.''

''வச்சுக்க. பள்ளிக்கூடத்திலே மணி அடிச்சுட்டாங்க. இந்தா, மறந்துட்டேன் பாரு. சாக்லெட் தின்னு. மதியத்திலே ஸ்கூல் பக்கத்திலே வரயா? சத்துணவு சாப்பிடலாம்.''

கண்ணனின் பார்வையற்ற கண்களில் நீர் ததும்பியது. ''தினமும் உன் சாப்பாட்டை நீ எனக்குப்போட்டுடறே...''

தன் பாவாடைத் தலைப்பால் செல்வி அவனது கண்களைத் துடைத்தாள். ''நிறையப் போடறாங்க. கண்ணா. உனக்கு என் சாப்பாட்டிலே கொஞ்சம் கொடுக்கறேன்னு தலைமை ஆசிரியருக்கும் தெரியும்.''

இரண்டாம் மணி அடிக்கவே வேகமாக ஓடிப் போனாள் செல்வி. அவளது நடைச் சத்தம் தேயும்வரை கண்ணன் அங்கேயே உட்கார்ந்திருந்தான். சண்பக மலரின் மணமாக செல்வியின் பாசம் மணத்தது. அவளுக்குத்தான் தன் மீது எத்தனை பாசம்! பரிவு! அவனுக்குத் தராமல் எதையும் சாப்பிட மாட்டாள்.

அது சமீப காலமாக ஏற்பட்ட புறநகர்ப் பகுதி. ஆனாலும் மிகவும் பெரியது. இன்னும் அடைசலான வீடுகள் தோன்றவில்லை. பெரிய பெரிய கட்டிடங்கள்... நாகரீக மனிதர்கள்.... வசதியான வாழ்க்கை. வீடுகள் கட்டும் இடத்தில்தான் செல்வியின் அம்மா சின்னாத்தா வேலை செய்து வந்தாள். இரண்டாண்டுகள் முன்பு செல்வியின் அப்பா இறந்து விட்டார்.

அங்குதான் ஜமுனாம்மா குடி வந்தாள். கட்டி முடித்த வீட்டின் சில்லறை வேலைகளைச் சின்னாத்தா கவனித்தாள். செல்வியின் துருதுருப்பும் புத்திசாலித்தனமும் ஜமுனாம்மாவுக்குப் பிடித்துப் போயின.

''எனக்கு வீட்டு வேலைக்கு ஆள் வேணும். நீயே செய் சின்னாத்தா' என்று சொன்னாள் ஜமுனாம்மா



ஜமுனாம்மா வீட்டில் கணவனும், மனைவியுமாக இரண்டே பேர்கள். பெண் கல்யாணமாகி டெல்லியில் இருக்கிறாள். பையன் ராம் அமெரிக்காவிற்கு மேல் படிப்பிற்குப் போயிருக்கிறான். வேலைகள் அதிகம் இல்லை. அதிகாலையில் வந்து வாசல் கூட்டி, வீடு துடைத்துப் பாத்திரங்களை விளக்கி வைத்து விட்டு, சின்னாத்தா கட்டிட வேலைக்குப் போய் விடுவாள்.

குழந்தை செல்விதான் வீட்டுக்குக் காவல். செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுவாள். ஜமுனாம்மாவுடன் தோட்ட வேலைகளுக்கு உதவி செய்வாள். காப்பிப் பாத்திரங்களைச் சுத்தம் பண்ணித் தருவாள்.

''செல்வி, இந்தா தேங்காய் எண்ணெய். தலையைச் சீவு.''

ஜமுனாம்மா கொடுத்த சீப்பினால் தலையை வாரிப் பின்னிக் கொள்வாள்.

''இந்தா சோப்பு. குளிச்சிட்டுப் பாவாடையைத் தேய்ச்சு உலர்த்து.''

சுத்தமாக, நகத்தில் அழுக்குப் படாமல் வேலைகளைச் செய்துகொள்ளச் செல்வி கற்றுக் கொண்டாள். பகல் நேரங்களில் தாழ்வாரத்தில் ஐந்து கல்லை வைத்துச் செல்வி விளையாடுவதும், அப்படியே படுத்துத் தூங்குவதும் ஜமுனாம்மாவுக்குப் பிடிக்கவில்லை.

''செல்வி, பள்ளிக்கூடம் போறியா? சேர்த்து விடட்டுமா?''

செல்வியின் கண்கள் மின்னின. ஜமுனாம்மா ஸ்லேட்டும் பலப்பமும் வாங்கி வந்தாள். செல்விக்குச் சொல்லித் தர ஆரம்பித்தாள். அந்த ஆண்டு விடுமுறைக்குப் பின் பள்ளிக்கூடம் திறந்ததும் செல்வி பள்ளிக்கூடம் செல்ல ஆரம்பித்தாள்.

ஜமுனாம்மாவின் அண்ணா, தங்கையைப் பார்க்க வந்தவர், ''ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்''னு பாரதியாரின் வார்த்தையை உண்மையாக்கறியா?'' என்று கேட்டார்.

இதனால் ஜமுனாம்மாவின் உற்சாகம் அதிகமாகியது.

நீலமும், வெள்ளையுமான சீருடையில் பையைப் பிடித்தபடி நிற்கும் மகளைச் சின்னாத்தா பார்த்தாள். ஈன்ற பொழுதை விடப் பெரிதும் மகிழ்ந்தாள்.

''ஏம்மா, இதுக்குப் படிப்பு வருமாம்மா? ஏழை சனம் நாங்க. கூலி வேலை செய்தாலும் நாலு காசு வரும்'' என்றாள் சின்னாத்தா.

''போம்மா. நான் எவ்வளவு எழுதறேன். நீ அம்மாவைக் கேட்டுப் பாரு'', என்றாள் செல்வி.

''ஏழையாவது? அடிமையாவது? அப்படி எவருமே இந்தியாவில் இல்லைன்னு பாரதியார் சொல்லி இருக்கார். படிப்பு எல்லாருக்கும் அவசியம் சின்னாத்தா. இன்னிக்கு அரைக்காசு, கால்காசு கிடைக்கும்னு கூலிக்கு அனுப்பிடலாம். குழந்தையோட வருங்காலத்தை நினைச்சுப் பார். இன்னிக்கு இவ இப்படி இருக்கான்னு நினைக்காதே. நாளைக்கு இவ இந்தியாவுக்குப் பெருமை தேடித் தரவங்களிலே ஒருத்தியா இருக்கலாம். யார் கண்டது?''

ஜமுனாம்மாவின் இந்தப் பேச்சைக் கேட்டதும், சின்னாத்தாவுக்கு, மகளைக் காணும் பொழுதெல்லாம் கண்களில் ஒருவித ஒளி மின்னியது.

'அறஞ்செய விரும்பு.'

'சாதி இரண்டொழிய வேறில்லை' என்று செல்வி புத்தகத்தை வைத்துக் கொண்டு படிக்கும் பொழுது—தன்னால் முடியாத ஒன்றை மகள் செய்வதைக் கண்டு பூரித்தாள் சின்னாத்தா. புத்தகத்தில் உள்ள எழுத்துக்களை மகள் படிப்பது என்பது லேசான காரியமா, என்ன?

என்ன புரிகிறதோ என்னவோ? சிம்னி விளக்கின் அடியில் புத்தகத்தை வைத்துக் கொண்டு மகள் படிப்பதை வாயைத் திறந்துகொண்டு பார்ப்பாள். ஜமுனா அம்மாவைப் போலத் தன் மகளும் — நாகரிகமாக உடுத்தி, அழகாகப் பேசும் விதத்தைப் பற்றிக் கனவு கண்டாள் அந்த ஏழைத் தாய்.

''கண்ணா, அறஞ்செய விரும்பு'னா என்னது தெரியுமா?'' — செல்வி கேட்டாள்.

''எனக்கு எப்படித் தெரியும் செல்வி?''

''தர்மம் பண்ண ஆசைப்படுன்னு அர்த்தம். புரியறதா?''

''புரியறது.''

''என்ன புரிஞ்சுது? சொல்லு, பார்க்கலாம்.''

''அறஞ்செய விரும்புனு தர்மம் பண்ண ஆசைப்படுன்னு அர்த்தம். உனக்குக் கிடைக்கிறதை எல்லாம்–மதியத்திலே கிடைக்கிற சத்துணவைக் கூட எனக்குக் கொடுத்துடறியே, அதுதானே?''

சொல்லும்பொழுதே கண்ணனின் முகம் நன்றியால் பிரகாசித்தது.

''நீ இப்படி எல்லாம் சொல்ற தானு, நான் இனி இங்கே வரவே மாட்டேன். உன் பேச்சு 'கா' விட்டுடு வேன்'' என்று மிரட்டுவாள் செல்வி.

''இல்லே செல்வி இல்லே... தப்பு... கன்னத்திலே போட்டுக்கட்டுமா?'' என்பான் கண்ணன்.

அவள் பள்ளிக்கூடத்தில் படித்த வற்றை எல்லாம் அவனுக்குச் சொல்லிக் கொடுத்தாள்.

ஜமுனம்மா வீட்டிற்கு டீ. வி. வந்து விட்டது. செல்வி தவருமல் டீ. வி. நிகழ்ச்சிகளைப் பார்ப்பாள். கண்ணனிடம் வந்து விளக்குவாள். டீ. வி. பார்க்க வேண்டும் என்று ஜமுனம்மா வீட்டிலேயே இரவில் கூடத் தங்குவாள். அவள் அப்படித் தங்குவது ஜமுனம்மாவிற்குச் சௌகர்ய மாக இருந்தது.

மீதமாகும் உணவுப் பண்டங்களைக் காலை வரை வைத்திருக்காமல் இரவே கொடுத்து விடுவாள். பாத்திரங்களைக் கூடத் தேய்த்து வாங்கி வைத்துக் கொண்டு விடுவாள்.

ஒருநாள். டீ. வி. நிகழ்ச்சியில் ஒரு விளம்பரம் காண்பித்தார்கள். இதய நோயாளி ஒருவருக்கு அமெரிக்கா செல்லப் பண உதவி தேவை என்றும்-வேறு ஒருவருக்கு அவசரமாக ஒரு 'க்ரூப்' இரத்தம் தேவை என்றும் அறி வித்தார்கள். இந்த விளம்பரம் செல்வி யைச் சிந்திக்க வைத்தது.

அன்று விருந்தினர்கள் வந்து போனதால் வகை, வகையான உணவுகள் தயாரித்திருந்தார்கள். ஆனால், அவை செல்வியின் தொண் டைக்குள் இறங்கவில்லை. வேலைகள் முடிந்து விட்டன. வெற்றிலைத் தட்டு டன் ஜமுனம்மா வாசல் தாழ்வாரத் தில் வந்து உட்கார்ந்தாள். செல்வி யின் சிந்தனை கலையவில்லை.

''செல்வி, என்ன யோசிக்கிறே? உடம்பு நல்லா இல்லையா?''

''ஒண்ணுமில்லேம்மா.''

''நான் நம்ப மாட்டேன். வழக் கமா உன் மூஞ்சி குறுகுறுன்னு இருக் கும். டல்லடிக்கிறியே?''

''யம்மா, இந்த விளம்பரம் காட்டி னுங்களே.., அதெல்லாம் உண்மை தானுங்களா?''

''உண்மைதாண்டி. ஏன் கேட் கிறே?''

''இப்படி யாராவது உதவி செஞ்சா என் கண்ணனுக்கும் கண் கிடைக் கும். இல்லையாம்மா?''

ஜமுனம்மா செல்வியைக் கூர்ந்து பார்க்கிறாள்.

''அதுக்கெல்லாம் ரொம்ப செல வாகும் செல்வி. ரொம்பப் பொறுப் பான காரியம் அது. வசதியும், செல்வாக்கும் உள்ளவங்கதான் ஒத்துக்க முடியும்.''

''என்னாலே முடியாதாம்மா?''

ஜமுனம்மா மெல்லச் சிரித்தாள். ''எப்படி முடியும் செல்வி? முதலிலே டாக்டர்கிட்ட கூட்டிப் போகணும். பார்வை வருமான்னு தெரிஞ்சுக்க ணும். அதுக்கெல்லம் பணம் வேணும். பார்வை வரும்னு நம்பினு ஆபரேஷன் பண்ணுவார். அதுக்கு நிறையப் பணம் செலவாகும். பார்வை எப்படி, என் னன்னு அவர்தான் தீர்மானம் பண்ண முடியும். மாற்றுக் கண் கூடப்

பிச்சைக்காரி: தம்பி, ரெண்டு கண்ணும் குருடு. ஒரு பத்துப் பைசா கொடேன்

பையன்: ஒரு கண் தெரிகிற மாதிரி இருக்கே...?

பிச்சைக்காரி : அப்போ அஞ்சு பைசா போடு தம்பி.

-பட்டுக்கோட்டை ரவி





பொருத்துவார். இது பெரிய வைத்தியம்.''

''மாற்றுக் கண்ணு! அப்படின்னு?''

''இறந்தவங்களுடைய கண்ணை ஒரு சில மணி நேரங்களில் எடுத்துப் பாதுகாப்பா வச்சிடுவாங்க. கண்ணன் மாதிரி உள்ளவங்களுக்குப் பொருத்துவாங்க.''

செல்வி வியப்புடன் பார்த்தாள்.

''இதுக்குக் கண்தானம்னு பெயர். நான், என் மகன், என் கணவர் எல்லாரும் கண்களைத் தானம் பண்றதா எழுதிக் கொடுத்திருக்கிறோம்.''

''இதுக்கெல்லாம் பணம் நிறைய வேணும். இல்லையாம்மா?''

''ஆமாம்.''

கண்ணனுக்கு எப்படியாவது கண் பார்வை தர வேண்டும் என்ற உறுதி செல்வியின் நெஞ்சில் எழுந்தது.

''கண்ணு, உனக்கு இந்த உலகத்தைப் பார்க்கணும்னு ஆசையாயில்லே?''

பார்வையற்ற அவனது விழிகள் ஆசையில் நிரம்பின. ''ஆசை இருக்கு செல்வி. எனக்குக் கருப்பைத் தவிர வேறு கலரே தெரியல்லே. நீ சொல்லுவியே... மல்லிகைப் பூ வெள்ளை.... நிலா குளுகுளுன்னு மஞ்சளா தங்கக் கலர்... சூரியன் சாயங்காலம் தளதளன்னு செகப்பா இருக்கும்னு சொல்லுவியே... அதை எல்லாம் பார்க்கணும்....''

செல்வி அவனையே பார்த்தாள். பேசும்பொழுது இதழ்கள் மலர, கைகளை ஆட்டி என்னமாய்ப் பேசுகிறான்!

''அன்னிக்கு ஒரு நாய்க்குட்டியைத் தடவிப் பார்க்க வச்சியே... அது என்ன கலர் செல்வி?''

''பொமரேனியன் நாய்க்குட்டி. வெள்ளையா... சடை முகமுகன்னு இருக்கும்.''

''அப்படியா?''

வெண்மையும், சிவப்பும் எப்படி இருக்கும் என்று கேட்டுக் கேட்டு அவன் அலுத்துப் போனான். அவளால் காட்ட முடியாமல் தோற்றுப் போனாள். கருப்பைப் போல ஒரு கலர் என்று நினைத்தாலும், கருப்பைத் தவிர வேறு எதுவும் நினைக்கத் தோன்றாத ஊமை நினைவுகள்.

''உனக்குக் கண் பார்வை தர ஏற்பாடு பண்ணப் போறேன்.''

ஒருசில நிமிடங்கள் கண்ணன் பேசமுடியாமல் தவித்துப்போனான்.

''எனக்குக் கண் தெரியுமா! எப்படி? எப்படி செல்வி? கண் வந்தா நானும் உன்கூடப் பள்ளிக்கூடம் வரலாம், இல்லையா?''

''ஓ... தாராளமா... உனக்குக் கண் தெரியணும்னு முதல்லே டாக்டர் கிட்டப் போகணும்.... அதுக்குப் பணம் வேணும்....''

அவள் பேசப் பேச அவன் மனத்தில் ஏகப்பட்ட நிராசைகள் பொங்கின. டாக்டர்கிட்ட போற அளவுக்கு ஏது பணம்? செல்வி சும்மா கதை சொல்றா... என்றெல்லாம் எண்ண ஆரம்பித்தான்.

''போ... செல்வி... எனக்குக் கண் தர யார் கிட்டப் பணம்

இருக்கு? வேறே ஏதாவது பேசு'' என்றான்.

''எப்படியாவது நான் உனக்குக் கண் தர ஏற்பாடு பண்ணுவேன், கண்ணா'' என்றாள் செல்வி தீவிரமாக.

ஜமுனும்மாவிற்குச் சில சாமான்கள் தேவையாக இருந்தன. சற்றுத்தொலைவில் உள்ள பஸ் நிலையத்திற்குப் போய் பஸ் ஏறிச் செல்ல வேண்டும். பிறகு கடைத் தெருவில் சாமான்களை வாங்கி பஸ்ஸில் ஏறி — இறங்கி நடந்து வீட்டுக்கு வர வேண்டும். அவர்களுடைய சின்னக் கார் ரிப்பேராகி இருந்ததால்தான் இந்தத் தொல்லை.

அமெரிக்காவிலிருந்து மகன் வரப் போவதால் சாமான்கள் வாங்குவதை ஒத்திப் போடவும் முடியாது. அதனால் செல்வியை அழைத்துக் கொண்டு போனாள். சாமான்கள் அடங்கிய பையைச் செல்விதான் தூக்கிக் கொண்டாள். காய்கள் அடங்கிய கூடையை ஜமுனும்மா எடுத்துக் கொண்டாள்.

வீட்டிற்கு வந்ததும் செல்வியின் கையில் இரண்டு ரூபாய்த் தாளைக் கொடுத்தாள் ஜமுனும்மா. 'சின்னக்குழந்தை இவ்வளவு கனமான பையைத் தூக்கிக் கொண்டு வந்தாளே' என்ற பரிவு. ஜமுனும்மா சாமான்களை எடுத்து வைக்க உள்ளே போய் விட்டாள்.

இரண்டு ரூபாய்த் தாளைப் பலமுறை தடவிப் பார்த்தாள் செல்வி. புதுசா... மொடமொடனு சிவப்பா எத்தனை நன்றாக இருக்கிறது! இதை என்ன செய்வது? ஓ... கண்ணன் ஆபரேஷனுக்கு வைத்துக் கொண்டால்...? கண்களில் ஒற்றிக் கொண்டு புத்தக அட்டையைப் பிரித்து அதற்குள் வைத்துப் பத்திரப்படுத்தினாள்.

அன்று இரவெல்லாம் கண்ணனுக்குக் கண் வந்து தன்கூட விளையாடுவது போல — பள்ளிக்கூடம் வருவது போல — கலர்களைப் பார்த்து ரசிப்பது போல — எத்தனை எத்தனை கனவுகள்...! காலையில் எழும் பொழுதே மகிழ்வாக இருந்தது. உற்சாகமாக இருந்தது. புத்தக அட்டையைப் பிரித்து இரண்டு ரூபாய்த் தாளை ஒருதடவை பார்த்துக் கொண்டாள்.

இப்பொழுதெல்லாம் காசு சேர்ப்பதில் செல்வியின் கவனம் சென்றது. இதற்காகப் படிப்பை விட்டுவிடவில்லை. சில்லறை வேலைகளைச் செய்து காசு சேர்த்து வரத் தொடங்கினாள். பஸ் நிலையத்திலிருந்து வருபவர்கள் பையை எடுத்து வந்தால், அவர்கள் தரும் காசைப் பெற்றுக் கொள்வாள். சில சமயம், அம்மாவிடம் இதை எல்லாம் சொல்லவில்லையே என்று ஒரு வேதனை எழும்.

ஜமுனும்மாவின் மகன் ராம் வந்துவிட்டான். வீடு களை கட்டியது. எத்தனை சாமான்களைக் கொண்டு வந்தான்! துருதுருவென்று ஓடியாடும் செல்வியை ராமிற்கு மிகவும் பிடித்தது.

''செல்வி ரொம்ப நீட்டா இருக்காம்மா'' என்று புகழ்ந்தான் ராம்.

''செல்வி, இந்த அறையைக் கூட்டு. கூட்டிட்டு இந்தப் புத்தகங்களையெல்லாம் தட்டி அடுக்கு, பார்க்கலாம்.''

சோம்பேறியின் யோசனை!

"டிபன் பாக்ஸைத் தூக்கிண்டு போவதைவிட உருட்டிண்டு போவது சுலபம்டா!"

- சுதர்ஸன்



மளமளவென்று செய்தாள் செல்வி. ராம் தன் பூட்ஸுக்கு பாலிஷ் பண்ணினான்.

''நான் பண்ணித் தரேன். நான் இருக்கையில் நீங்க பண்றது அவ்வளவு நல்லா இல்லே, எனக்குப் பிடிக்கலே'' என்றாள் செல்வி.

''அமெரிக்காவிலே எல்லாத்தையும் நாங்கள்தான் செஞ்சுக்குவோம். இன்னிக்கு நீ செஞ்சா நாளைக்கு அங்கே யார் வருவாங்க?''

கண்கள் மலரச் செல்வி அவனைப் பார்த்தாள். ''அதனாலே நான் இருக்கையில் நீங்க செஞ்சுக்கறதா? எனக்குச் சொல்லிக் கொடுங்க.''



பந்துக்குப் பதில்

''கிரிக்கெட் பந்தைக் காணேம். பொரிவிளங்காய் உருண்டை ஒண்ணு தாம்மா'' -சுதர்ஸன்

பூட்ஸ் பாலிஷ் பண்ணினுள். தோய்த்த அவன் உடைகளை அயர்ன் பண்ணிக் கொண்டு வந்து வைத்தாள்.

''குட்... நல்லா செய்யறே. இந்தா காசு...''

''வேணுங்க... அம்மாதான் எங்கம்மாவுக்குச் சம்பளம் தராங்களே...''

''அது வீட்டு வேலைக்கு... இது நீ எனக்குச் செய்யற வேலைக்கு. உன் உழைப்புக்கு நான் தர கூலி. சும்மா தரல்லே...'' என்ருன் ராம்.

''வாங்கிக்க செல்வி... அவன்சொல்றதும் சரிதான்... நீ உழைக்கிறே... அவன் கூலி தரான்.'' என்ருள் ஜமுனும்மா.

—இப்படி அடிக்கடி ராம் பணம் தர அவளுக்கு நிறையவே சேர்ந்தது.

''இந்தப் பணத்தை எல்லாம் என்ன செல்வி பண்றே? ஏதாவது வாங்கித் தின்னுடறியா? ரோடு ஓரங்களிலே விற்கறதை எல்லாம் வாங்கிச் சாப்பிடக் கூடாது'' என்ருள் ஜமுனும்மா.

''சேர்த்து வச்சிருக்கேன். கிட்டத்தட்ட 100 ரூபாய் சேர்ந்திருக்கு.''

ஆச்சரியப்பட்டாள் ஜமுனும்மா. ''எங்கே வச்சிருக்கே?''

''புஸ்தகத்தோட அட்டைக்குள்ளாற வச்சிருக்கேன்.''

''சரி; காலையில் எங்கிட்டக் கொண்டா. வங்கியிலே கணக்கு ஆரம்பிச்சுத் தரேன். குடிசையிலே வச்சுத் தொலைச்சிடாதே.''

''சரி'' என்று தலையை அசைத்தாள் செல்வி.

'ஆபரேஷனுக்கு எவ்வளவு செலவாகும்? தன்னிடம் உள்ள பணம் போதுமா? இன்னும் எவ்வளவு தேவை? இதை யாரிடம் போய்க் கேட்பது? கேட்டாலும் தன்னை நம்புவார்களா?' - என்றெல்லாம் கவலைப்பட ஆரம்பித்தாள் செல்வி.

அன்று ஜமுனும்மாவின் வீடு கலகலப்பாக இருந்தது. ராமிற்குக் கல்யாணம் நிச்சயமாகி இருந்தது. ராம் மீண்டும் அமெரிக்கா திரும்புவதற்குள் கல்யாணம் நடக்க வேண்டும். வீடு அமர்க்களப்பட்டது. செல்விக்கும் வேலை சரியாக இருந்தது. உண்பதற்கு நிறையக் கிடைத்தது. அனைவருக்கும் துணிகள் வாங்கும் பொழுது ஜமுனும்மா செல்விக்கும் குறைந்த விலையிலே ஒரு பட்டுப் பாவாடை வாங்கி வந்தாள்.

ஓடிப் போய்ச் செல்வி கண்ணனிடம் கூறினுள். ''எனக்குப் பட்டுப் பாவாடை வாங்கி இருக்காங்க. உனக்கு இனிமே திங்கறதுக்கு நிறையக் கொண்டு வருவேன்'' என்ருள்.

கண்ணனுக்கு மிக்க மகிழ்ச்சியாக இருந்தது. ''கல்யாணத்திற்கு நான் வரலாமா?''

இந்தக் கேள்விக்குச் செல்வியால் பதில் சொல்ல முடியவில்லை. கண்ணனை அழைத்துச் சென்ருல், அவனைக் கவனிக்கவே நேரம் சரியாக இருக்கும். ஜமுனும்மா இடும் வேலைகளைக் கவனிக்க முடியாது. அவர்கள் ''இவனை ஏன் அழைத்துக் கொண்டு வந்தாய்?'' என்று கேட்டால்?

''கல்யாணம் வேறு எங்கேயோ நடக்கிறது, கண்ணு. என்னையே அழைச்சிட்டுப் போருங்களோ, இல்லே, வீட்டைப் பார்த்துக்க விட்டுட்டுப் போருங்களோ?'' என்ருள் செல்வி.

இந்தப் பதில் கண்ணனுக்குத் திருப்தியாக இருந்ததோ, இல்லையோ, செல்விக்குத் திருப்தியாக இருந்தது.

திருமணத்திற்குப் பதினைந்து தினங்களே இருந்தன.

''கல்யாணம் செய்துக்கிட்ட பிறகு, திரும்ப நீ அமெரிக்கா போகவேணும், ராம்'' என்று ஜமுனும்மா மகனைக் கெஞ்சினுள்.

''என்னம்மா நீ? அங்கே எனக்கு எவ்வளவு சம்பளம் தராங்க? மாசம் பத்தாயிரம் வரை சம்பளம், தெரியுமா?'' என்ருன், ராம்.

''என்னவோப்பா... நீ கிடைக்கிறதை வச்சிண்டு இங்கே இருக்கலாம். ஓர் இந்தியன் தன் திறமைகளை அங்கே போய் விலை பேசற மாதிரிதான் எனக்குப் படுது. இந்தியா ஏழை நாடாக ஆகிறதுக்கு இதுவும் ஒரு காரணம்.''

''போம்மா... நீ ஒண்ணு. அந்த வசதியிலே இருந்துட்டு இங்கே இருக்கறது முடியாது, அம்மா.''

—இதை எல்லாம் செல்வி கேட்டுக்கொண்டிருந்தாள். ''இந்தியனாகவே இரு. இந்தியப் பொருட்களையே வாங்கு'' என்று அவள் அடிக்கடி பார்த்த விளம்பர வரிகளை அவள் வாய் முணுமுணுத்தது.

'நான் பெரியவளா ஆகி, வேலைக்குப் போனால், இங்கேயே இருப்பேன். என் உழைப்பு இந்த இந்திய மண்ணுக்கே சொந்தமாக வேண்டும்'— அவளது பிஞ்சு மனம் முனகியது. ஜமுனாம்மா சொல்லிக் கொடுத்த காந்தித் தாத்தா கதைகள் எல்லாம் நினைவுக்கு வந்தன.

''மனிதர்கள் உயர்வு பெறுவது தங்கள் பண்பினாலும், செயல்களினாலும்தான் செல்வி. நாம் செய்யறது ஒவ்வொண்ணும் நம்ம நாட்டு உயர்வுக்காக இருக்கணும். நாம இந்த நாட்டுக்கு என்ன செய்தோம்னு நினைக்கணும். தேச பக்தி அனைவருக்கும் இருக்கணும்.''

ஜமுனாம்மாவின் வார்த்தைகளை அவரது மகனே கடைப்பிடிக்கவில்லையே? செல்வியின் பிஞ்சு மனம் இவ்வாறு எண்ணியது.

செல்வி ஒருநாள் காலையில் ஜமுனாம்மாவின் வீட்டிற்குள் நுழைந்தாள். புதிதாக அங்கு உட்கார்ந்திருந்த ராபர்ட் — மேரியைக் கண்டு திகைத்தாள். அதைக் கண்ட ராம் சிரித்தபடி, ''என்ன செல்வி, பார்க்கறே? என்னோட ஃப்ரண்ட்ஸ். அமெரிக்காவிலேயிருந்து வந்திருக்காங்க. ரெண்டு மாசம் இருந்து இந்தியாவைச் சுற்றிப் பார்த்துவிட்டுத் திரும்பிடுவாங்க'' என்றான்.

செல்வி மருள மருளப் பார்த்தாள். என்ன வெளுப்பு! எப்படி வழவழன்னு இருக்காங்க, வெண்ணெயைப் பூசின மாதிரி...!

''நிறமா இல்லாட்டாக்கூட உங்க கோயில் கறுப்புச்சிலை மாதிரி அழகாய் இருக்கா இந்தப்பொண்ணு'' என்றாள் மேரி ஆங்கிலத்தில் ராமிடம்.

''இவ ரொம்ப புத்திசாலி. அம்மாவோட ரைட் ஹேண்ட்! பள்ளிக்கூடத்தில் படிக்கிறா. நல்லா பேசுவா; பாடுவா'' என்றான் ராம்.

உரையாடல்கள் தன்னைப் பற்றித்தான் என்பதைப் புரிந்து கொண்ட செல்வி புரிந்தும், புரியாத நிலையில் குனிந்து கொண்டாள்.

''செல்வி, நீ அமெரிக்கா வந்துடறியா?'' என்று ராம் அவளை வம்புக்கு இழுத்தான்.

கண்களை விரித்து அவனைப் பார்த்தாள் செல்வி. இதற்குள் ராபர்ட் — மேரியைப் பார்த்த ராம், ''நீங்க ஓர் இந்தியக் குழந்தையைத் தத்து



எடுத்துக்கணும்னு சொன்னீங்களே.... செல்வியை எடுத்துக்கலாமே?'' என்றான்.

அவனுடைய கேள்விக்குப் பட்டென்று பதில் சொன்னாள் செல்வி. ''இங்கே இருக்கிற காஞ்சிபுரம், மகாபலிபுரமே நான் பார்த்ததில்லே. அப்புறமல்லவா அமெரிக்காவைப்பற்றி நினைக்கணும்?''

ராபர்ட், மேரிக்கு அவள் மீது ஒரு பிடிப்பு விழுந்தது. ''இவங்க போறப்ப அதை எல்லாம் நீயும் பார்க்கலாம். திருப்பதியிலே யிருந்து கன்யாகுமரி வரை பார்த்துட்டுப் பிறகு அமெரிக்கா போய்....''

''அமெரிக்கா போய்...?'' என்று அவன் விட்ட இடத்தைக் கேட்டாள் செல்வி.

''இவங்க குழந்தையா அங்கேயே இரேன்.''

மிடுக்குடன் பார்த்தாள் செல்வி. ''நம்ம நாட்டை விட்டு நான் ஏன் போகணும்? பாரதியார் நம்ம நாட்டைப் பற்றி எவ்வளவு சொல்லி இருக்காரு?'' என்று கேட்டாள்.

இவள் பேசுவதை எல்லாம் ஜமுனம்மா கேட்டுக் கொண்டேதான் இருந்தாள். ''குழந்தை கூட என்னடா இது? ஆசையைக் கிளப்பாதே? அதுவும் செல்வி எல்லாம் தெரிஞ்சவ. விமானத்திலே போற மாதிரி கனவு காண ஆரம்பிச்சுடுவா'' என்றாள்.


''உண்மையாத்தாம்மா சொல்றேன். ராபர்ட்டும் மேரியும் அனாதை இல்லத்திலேயிருந்து ஒரு குழந்தையை எடுத்துக்கத்தான் வந்திருக்காங்க.'' என்றான், ராம்.

''நான் போக மாட்டேன். நான் இந்தியாவிலேயேதான் இருப்பேன். நிறையப் படிப்பேன். அன்னை தெரஸா மாதிரி என்னாலே முடிஞ்சதைச் செய்வேன். டாக்டருக்குப் படிப்பேன். என் கண்ணனுக்குக் கண் தருவேன். நம்மிடத்திலே பல திறமைகள் இருந்தும், அதை வெளிநாட்டுக்கு நாம போயிடறதாலேதான் இந்தியா முன்னேற முடியறதில்லேன்னு பெரியவங்க அடிக்கடி சொல்றாங்க. நான் அமெரிக்கா வர மாட்டேன்'' என்று சொல்லி விடுவிடென்று உள்ளே ஓடி விட்டாள்.

ஜமுனம்மா பெருமை பொங்கப் பார்த்தாள். ''செல்விக்குத் தேசபக்தி ஜாஸ்தி ராம். நல்லாப் படிக்கிறா. சுதந்திர தினம், குடியரசு தினம் போன்ற நாட்களில் வீராவேசமாகப் பேசுவாள். பொது அறிவும், நாட்டுப் பற்றும் அதிகம் உள்ள குழந்தை அவள். எதிர்காலத்தில் பாரதத்தின் பெருமை கொள்ளும் வீரப் பெண் மணியாக அவள் விளங்குவாள்'' என்றாள் ஜமுனம்மா. தான் தயாரித்த பெண் என்பதிலே அவளுக்குப் பெருமை!

அன்று மாலை, செல்வி விளையாடப் போகவில்லை. பூங்காவில் போய் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து சிந்தித்தாள். ராம் கேட்டதை நினைத்துக் கோபம் பொங்கிற்று. 'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்'னு பாரதியார் சொல்லவில்லே? அம்மாவை விட்டு விட்டு எங்கேயாவது போக முடியுமா? அது மாதிரிதானே இதுவும்? பெற்ற தாயையும் விட்டு, பிறந்த நாட்டையும் விட்டுப் போவதா? சும்மா சுற்றிப் பார்க்க என்றால் போகலாம்.

காலையில் அவள் பேசியதுதான் சரியென்று மனம் கூறியது. திடீர் என்று கண்ணன் நினைவு வந்தது. பாவம்! தனக்காகக் காத்திருப்பான். கண்ணன் நினைவு வந்ததும் இடுப்பைத் தொட்டுப் பார்த்தாள். பாவாடையில் சுருட்டி வைத்திருந்த ஐந்து ரூபாய்த் தாள் பத்திரமாக இருந்தது. கண்ணனுக்காக இன்னும் எவ்வளவு பணம் சேர்க்க வேண்டுமோ? தன்னால் கண்ணனுக்குக்



பார்ப்பது என்ன?

''டேய் கோபு, டிக்ஷனரியில் என்ன பார்த்துக் கொண்டிருக்கிறாய்?''

''Meaning என்றால் என்ன அர்த்தம் என்று பார்க்கிறேன்''

—பா. ச. சு. பூபதி

கண்ணைத் தர முடியுமா? ஏக்கம் பொங்கிற்று.

ஒன்று செய்தால் என்ன? கண்ணனுக்காக இதைச் செய்தால் என்ன?

ராம் தன் அறையில் உடைகளைச் சரியாக எடுத்து வைத்துக் கொண்டிருந்தான். ராம் கல்யாணப் பையன் என்பதால் — ராமின் அத்தை மகன், ராபர்ட்டையும் மேரியையும் வெளியே ஊரைச் சுற்றிப் பார்க்க அழைத்துப் போயிருந்தான். மெல்லக் கதவில் தன் சிறு கையால் இரண்டுதட்டு தட்டி விட்டு அழைப்பிற்காகச் செல்வி காத்திருந்தாள். இதை அவளுக்குப் பழக்கியவன் ராம்தான். செல்வியின் சின்னத் தட்டல்கள் பழக்கமாகி இருந்ததால் ''வா, செல்வி'' என்று அழைத்தான் ராம்.

வந்து நின்றாள் செல்வி.

''என்னம்மா?''

''அமெரிக்காவிலேயிருந்து வந்திருக்காங்களே, அவங்ககிட்ட நிறையப் பணம் இருக்குல்ல?''

ஓஹோ... என்று சிரித்தான் அவன்.

''என்ன சந்தேகம் செல்வி? ஒரு தடவை நீ அமெரிக்கா வந்துட்டே... அப்புறம் நீ இங்கே வர மாட்டே. ஏன்? உனக்குப் பணம் வேணுமா? உன்னைக் கூட்டிட்டுப் போறதினாலே உங்கம்மாவுக்கு நிறையப் பணம் கொடுத்துட்டுப் போவாங்க.''

''அது சரி... நான் அவங்க கூட வரதுன்னு வேற ஓர் உதவி பண்ணணும்.''

''என்ன உதவி? என்ன வேணாலும் செய்வாங்க. உன்னை அவங்களுக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு.''

''கண்ணன்னு ஒரு பையன். அவன் கண் குருடு. அவனை டாக்டர்கிட்ட அழைச்சிட்டுப் போயி பார்வை தரணும். ஆபரேஷன் பண்ணி, பார்வை வராட்டாக் கூட மாற்றுக் கண் வைக்கணும்.''

ராம் திகைத்துப் போனான். ''இதை எல்லாம் யார் கிட்ட தெரிஞ்சுக்கிட்டே?''

''கண்ணனுக்குக் கண் வரணும்னு என்ன பண்ணணும்னு எல்லார்கிட்டேயும் கேட்டேன். அவனுக்காகப் பணம் கூடச் சேர்த்து வச்சிருக்கேன். நம்ம அம்மாதான் பாங்கிலே போட்டு வச்சிருக்காங்க.''

அவன் திகைத்துப் போனான். காலையில் அம்மா சொன்னது போல் இவள் லட்சியக் குழந்தைதான்! இந்தக் குணத்துடன் வளர்ந்தால் இவள் உலகப் புகழ் பெறுவாள்!

''என்ன சொல்றீங்க?'' என்றாள் செல்வி.

இந்தச் சமயத்தில்தான் ராபர்ட்டும் மேரியும் ராமைத் தேடிக் கொண்டு வந்தார்கள். மேரிக்குச் செல்வியைப் பிடித்துப் போயிருந்தது. துருதுருவென்று கண்கள் பளபளக்க, அடர்ந்த குட்டைப் பின்னல் ஊஞ்சலாட ஓடியாடும் அவளை அன்றைய பகலில் பார்த்துக் கொண்டே இருந்தாளே! வீட்டில் கல்யாணத்திற்கென்று விருந்தினர் கூட்டம் பெருகி இருந்தது. அதனால் இவர்களைக் கவனிக்க ஜமுனம்மா செல்வியை நியமித்திருந்தாள்.

''குட் கேர்ல்'' — மேரி செல்வியைத் தட்டிக் கொடுத்தாள்.

தன்னுடன் அவள் வந்தால் நல்லபடியாக வளர்க்கலாம் என்று எண்ணினாள். ராம், செல்வி சொன்னதைச் சொன்னான். ராபர்ட் — மேரி இருவரும் ''எது வேண்டுமானாலும் செய்கிறோம்'' என்று கூறினார்கள்.

செல்வியால் மகிழ்ச்சியைக் கட்டுப்படுத்த இயலவில்லை. துள்ளிக்கொண்டு ஓடினாள். ராம் அவளைப் பிடித்து ''தாங்க்யூ சொல்லு'' என்றுசொல்லிக் கொடுத்தான்.

''தாங்க்யூ'' என்ற செல்வியை மேரி மென்மையாகக் கட்டி அணைத்துக் கொண்டாள். அந்த அணைப்பில் தாய்ப்பாசம் பொங்கிற்று.

ராமின் திருமணம் சிறப்பாக நடந்தது. ராபர்ட்டும், மேரியும் செல்வியை விடவில்லை. சின்னத்தாதான் மகளைப் பிரியும் வேதனையில் இருந்தாள். ராபர்ட் கண்ணனின் கண்களைப் பெரிய கண் டாக்டரிடம் கொண்டு காட்டினார். அவர் சோதனை செய்து, ''மாற்றுக் கண் பொருத்தினால் பார்வை வந்துவிடும்'' என்றார்.

''என்ன செலவானாலும் நான் ஏத்துக்கறேன், டாக்டர். ஏற்பாடு செய்து விடுங்கள்'' என்றார் ராபர்ட்.

கண்ணனுக்கு சிகிச்சை ஆரம்பமாகியது. செல்வி கடவுளைப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாள். பெரிய சிகிச்சை முடிந்தது. கண்ணனுக்கு மாற்றுக் கண் பொருத்தப்பட்டுப் பார்வை வந்தது.

''செல்வி! செல்வி!''

முதலில் செல்வியைத்தான் மலர் விழிகளால் பார்த்தான் கண்ணன்,

''உனக்குக் கண் பார்வை வர ஏற்பாடு பண்ணியவங்களே இவங்க தான். கும்பிடு கண்ணு இவங்களை.''

கண்ணன் ராபர்ட்—மேரியை வணங்கினான். ''இவங்க செல்வியை அழைச்சிட்டு அமெரிக்கா போகப்போறாங்க'' என்றார் டாக்டர் அவனிடம்.

''நீ அமெரிக்கா போறியா செல்வி?''

செல்வி மௌனமாக நின்றாள்.

''செல்வியை இவங்க அமெரிக்காவுக்குக் கூப்பிட்டாங்க. முதல்ல செல்வி மறுத்துட்டா. பிறகு யோசனை பண்ணினா. உனக்குச் செலவு பண்ணிக் கண் கொடுத்தா அமெரிக்கா வந்துடறதாச் சொன்னா. இப்ப உனக்குக் கண் வந்துட்டது. செல்வி அமெரிக்கா போயிடுவா.''

டாக்டர் சொன்னதைக் கண்ணனால் ஜீரணிக்க முடியவில்லை. பார்வையற்ற அவனுக்குச் செல்வி ஊன்றுகோலாக இருந்தாள். பார்வை வந்ததும் ஊன்றுகோல் தேவை இல்லை என்பது போலப் பறித்துக் கொண்டாள்... கண்ணனின் புதுப் பார்வை ஒளியுடன் கண்ணீர் முத்துக்கள் சுரந்தன.

''டாக்டர், என் கண் பார்வையை எடுத்துடுங்க. எனக்குப் பார்வை வேணும். என் செல்விதான் வேணும். நான் குருடனா இருந்தால்தான் செல்வி இங்கே இருப்பாளா? அப்படின்னா நான் குருடனாகவே இருக்கேன்'' என்று கதறியபடி கண்ணன் டாக்டரின் கால்களில் விழுந்தான்.

இங்கு என்ன நடக்கிறது என்று புரியாமல் — கண்ணன் ஏன் திடீர் என்று அழுகிறான் என்பதும் புரியாமல் ராபர்ட்டும் மேரியும் திகைத்தனர்.

''என்ன நடந்தது?'' என்று கேட்டபடி டாக்டரின் கையைப் பிடித்தார் ராபர்ட்.

டாக்டர் அந்தக் குழந்தைகளின் அன்பை ராபர்ட்டிடம் விளக்கினார். செல்வி இங்கு இருக்க மீண்டும் பார்வையை எடுத்துவிடும்படி கண்ணன் கெஞ்சுவதைக் கூறினார். ராபர்ட் மேரியைப் பார்த்தான். மேரி ராபர்ட்டைப் பார்த்தார். குழந்தைகள் உயிருள்ள தாவரங்கள். உணர்ச்சி உண்டு என்பதால் ஒட்டுச் செடிகள் ஆகாது.

அவர்கள் மனம் நெகிழ்ந்து போயிருந்தது. செல்வி அழுதாள். ''உனக்குக் கண் கிடைக்கணும்னுதான் அப்படிப் பண்ணினேன். எனக்கு நம்ம நாட்டை விட்டுப் போற ஆசையே இல்லை கண்ணா...''

இதையும் ராபர்ட்டிடம் டாக்டர் சொன்னார்.

''நாற்பத்தைந்து நாட்களாகச் செல்வியை எங்க மகளாவே நினைச்சிட்டோம், டாக்டர். ஆனா அவளுக்கு விருப்பம் இல்லேன்னா அமெரிக்கா வரச் சொல்லிக் கட்டாயப்படுத்த மாட்டோம். எங்க மக இந்தியாவிலே இருக்கிறான்னு நாங்க நினைச்சு அவளை அடிக்கடி வந்து பார்ப்போம்'' என்று கண்ணீர் பொங்க ராபர்ட் கூறினார்.

மேரி ஏதோ கூறினாள் ராபர்ட்டிடம்.

''இந்தச் சின்ன வயசிலே கண்ணனுக்குக் கண் தரணும்கிற தியாகபுத்தி, லட்சிய எண்ணம் எல்லாருக்கும் வராது. செல்வியின் லட்சியம் வளர, அவளோட பெற்றோர் என்று நாங்கள் எடுத்துக் கொண்ட உரிமையில், உறவில் ஒரு நல்ல காரியம் செய்ய வேண்டும்'' என்றார் ராபர்ட்.

''என்ன செய்யப் போகிறீர்கள் சொல்லுங்கள்?'' என்றார், டாக்டர்.

''செல்வியின் பெயரால் ஒரு கண் மருத்துவமனை கட்ட ஏற்பாடு பண்ணணும். வசதியற்ற மக்களுக்குச் சிகிச்சை தரணும். இந்தச் செலவை நான் ஏத்துக்கறேன். பொறுப்பை நீங்க ஏத்துக்கணும். செல்வி — கண்ணன் படிப்பையும் நீங்க கவனிச்சுக்கணும். நாங்க அமெரிக்கா போகிறப்போ செல்வியையும், கண்ணனையும் கூடவே அழைச்சுப் போகிறோம். ஆனால், ஒரு மாதத்திலே பத்திரமாகத் திருப்பி அனுப்பிடுவோம். எங்க நாட்டையும் அவங்க பார்க்க வேண்டாமா?'' என்றான் ராபர்ட்.

அமெரிக்காவுக்குத் தனியாகச் செல்லப் போவதில்லை; அங்கேயே தங்கப் போவதில்லை என்ற மகிழ்ச்சி செல்விக்கு. கண்ணனின் கையைப் பற்றிக்கொண்டாள். டாக்டர் செல்வியைத் தட்டிக் கொடுத்தார்.

''கெட்டிக்காரப் பெண். எத்தனை பெரிய காரியத்தைச் சாதித்து விட்டாய்!'' என்றார் பெருமையுடன்.

இந்தியத் தாயின் இரு குழந்தைகளாக — பாரதியின் கனவுகளில் பூத்த நினைவு மலர்களாக — குழந்தைகள் ஓடினர்.

இளமையில் இவர்கள்

ஜனாதிபதியான ஜாக்

அமெரிக்க ஜனாதிபதி ஜான் கென்னடியை 'ஜாக்', 'ஜாக்' என்றே எல்லாரும் செல்லமாக அழைப்பார்கள். அவரும் அப்படி அழைக்கப்படுவதையே மிகவும் விரும்புவார்.

அவருடைய அம்மாவுக்கு ஒன்பது குழந்தைகள். இரண்டாவதாகப் பிறந்தவர் ஜான் கென்னடி. அவருடைய அப்பா ஜோசப் கென்னடி 35 வயதுக்குள் மிகப் பெரிய செல்வந்தரானார். மிகுந்த புகழையும் பெற்றார்.

அவர் குழந்தைகளுக்கு வேண்டிய வசதிகளை யெல்லாம் செய்து கொடுத்திருந்தார். விளையாடுவதற்கு அவர்கள் வீட்டை விட்டு வெளியில் செல்ல வேண்டாம். வீட்டைச் சுற்றிப் பெரிய புல்வெளி இருந்தது. நீந்துவதற்கு ஆறு, குளம் என்று போகத் தேவை





யில்லை. அங்கேயே நீச்சல் குளமும் இருந்தது.

இவ்வளவு வசதிகள் இருந்தாலும் கண்டிப்பு அதிகம். குழந்தைகள் அனைவரும் பிரார்த்தனை சமயத்தில் ஒன்று கூடிப் பிரார்த்தனை செய்ய வேண்டும். ஒவ்வொரு குழந்தையும் தன் வேலையைத் தானே செய்து கொள்ள வேண்டும்; பிறர் உதவியை எதிர்பார்க்கக் கூடாது. எப்போதும் உண்மையே பேச வேண்டும். வயதிலே மூத்தவர்களிடம் மரியாதையுடன் நடந்து கொள்ள வேண்டும். மீறினால் அப்பாவின் தண்டனையிலிருந்து தப்ப முடியாது!

ஒரு நாள் ஜான் கென்னடியின் தாத்தா அப்போது அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ரூஸ்வெல்ட்டைப் பார்ப்பதற்காக வாஷிங்டன் நகரில் உள்ள 'வெள்ளை மாளிகை'க்குப் புறப்பட்டார். கூடவே, பேரன் ஜான் கென்னடியையும் அழைத்துச் சென்றார். தாத்தாவும் ரூஸ்வெல்ட்டும் நெருங்கிய நண்பர்கள். தாத்தா ரூஸ்வெல்ட்டிற்குத் தம் பேரனை அறிமுகப்படுத்தினார்.

உடனே ரூஸ்வெல்ட், ஜான் கென்னடியை அருகிலே அழைத்து அணைத்துக்கொண்டு, ''உன் அப்பா ஜோசப் உன்னைப் பற்றிக் கூறியிருக்கிறார்'' என்றார்.

''என்னைப் பற்றியா! இருக்காது. என் அண்ணன் ஜோ மிகவும் கெட்டிக்காரன். அவனைப் பற்றித்தான் கூறியிருப்பார்'' என்றார் ஜான் கென்னடி.

''நீ ஏன் அப்படி நினைக்கிறாய்? ஒவ்வொருவரிடமும் ஒரு திறமை உண்டு. அதை வளர்த்துக் கொள்ள வேண்டும்.'' என்றார் ரூஸ்வெல்ட்.

ரூஸ்வெல்ட் கூறிய அறிவுரைப்படி, ஜான் கென்னடி தம்மிடமிருந்த திறமைகளை நன்கு வளர்த்துக் கொண்டார். அப்போது, தாமும் ஒரு காலத்தில் அமெரிக்க ஜனாதிபதியாகி, அதே வெள்ளை மாளிகையில் வீற்றிருப்போம் என்று நினைத்துக்கூடப் பார்த்திருக்க மாட்டார்!

கணக்குப் போட, கவிதை பிறந்தது!

கவியரசி சரோஜினி தேவியின் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் பல மொழிகள் தெரியும். அப்பா, ஐதராபாத்தில் ஒரு கல்லூரியைத் துவக்கி, அதன் முதல்வராக இருந்தார். அக்கல்லூரியில் ஆங்கிலமே பாட மொழியாக இருந்தது.

ஆனால் சரோஜினியோ ஆங்கிலப் பாடம் படிப்பது என்றால் முகத்தைச்



களிப்பார். 'படித்துத் தொலைக்கவேண்டுமே' என்று வேண்டா வெறுப்பாகப் படிப்பார்.

''இன்றிலிருந்து என்னுடன் சிறிது நேரமாவது நீ ஆங்கிலத்தில் பேசிப் பழக வேண்டும்'' என்று ஒரு நாள் அப்பா கட்டளையிட்டார். ஆனால், சரோஜினி அவருடன் ஆங்கிலத்தில் பேச மறுத்து விட்டார். இதனால் கோபம் கொண்ட அப்பா, சரோஜினியை ஓர் அறைக்குள் வைத்துக் கதவைப் பூட்டி விட்டார். அன்று முழுதும் சரோஜினி அந்த அறைக்குள்ளே இருந்தார்.

அறைக்குள் இருந்தபோது சரோஜினி ஒரு முடிவுக்கு வந்தார். 'இனி அப்பா விருப்பப்படி ஆங்கிலத்தில் பேசுவேன். பேசுவதோடல்ல; ஆங்கிலத்தில் நல்ல புலமையும் பெறுவேன்' என்று உறுதி எடுத்துக் கொண்டார். பிற்காலத்தில் அவர் கவிதை எழுதிய போதுகூட ஆங்கில மொழியில் மட்டுமே எழுதினார். வங்காளி, உருது இரண்டும் அவருக்கு நன்கு தெரிந்திருந்தும், அம்மொழிகளில் ஒரு கவிதைகூட எழுதவில்லை.

ஆங்கிலத்தில் அவர் கவிதை எழுதத் தொடங்கியதே எதிர்பாராத ஒரு சமயத்தில்தான்! ஒரு நாள் அவர் ஒரு 'அல்ஜீப்ரா' கணக்குப் போட்டுக் கொண்டிருந்தார். விடை தப்பும் தவறுமாக வந்தது. சிறிது நேரம், அப்படியே உட்கார்ந்து, ஏதோ யோசனை செய்தார் பிறகு ஒரு தாளை எடுத்தார். ஏதோ சில வரிகளை வேக வேகமாக எழுதினார். பிறகு எழுதியதை வாயை விட்டுப் படிக்கத் தொடங்கினார். 'படிக்கத் தொடங்கினார்' என்பதை விடப் 'பாடத் தொடங்கினார்' என்பதே சரி. ஆம், அவர் எழுதியது வேறொன்றுமல்ல; ஒரு கவிதைதான்! பதினோரு வயதிலேயே ஆங்கிலத்தில் கவிதை எழுதும் ஆற்றலைப் பெற்று விட்டார் சரோஜினி தேவி. 13 வது வயதில், 1300 வரிகளில் ஒரு நீண்ட கவிதையை ஆறே நாட்களில் எழுதி முடித்தார். அவரது கவிதைகளைப் படித்தவர்கள் வருங்காலத்தில் நிச்சயம் அவர் ஒரு பெருங்கவிஞராக விளங்குவார் என்று திடமாக நம்பினார்கள். அவர்களது நம்பிக்கை வீண் போகவில்லை யல்லவா?

சிறிய வயதில் பெரிய பரிசு!

35-வது வயதிலேயே நோபல் பரிசு பெற்றவர் மார்ட்டின் லூதர் கிங். இவ்வளவு குறைந்த வயதில் நோபல் பரிசு பெற்றவர் யாருமே இல்லை.

நீக்ரோவாகப் பிறந்த அவர் நீக்ரோக்களுக்கும் அமெரிக்கரைப் போலச்



சம உரிமை வேண்டும் என்று போராடினார். அதற்காக அவர் வன்முறையில் ஈடுபடவில்லை. மகாத்மா காந்தியைப் போலவே அன்பு வழியில், அகிம்சை முறையில் போராடிப் பல வெற்றிகளைப் பெற்றார்.

கிங், சிறுவராயிருந்த போது, கறுப்பர்களுக்கு என்று தனிப் பள்ளிக்கூடங்களும், வெள்ளையர்களுக்கென்று தனிப் பள்ளிக்கூடங்களும் இருந்தன. கிங் கறுப்பர் பள்ளியில் படித்து வந்தார்.

அப்போது அவருக்கு 6 வயது இருக்கும். தனக்குத் தெரிந்த ஒரு வெள்ளைக்கார நண்பனைக் காண அவன் வீட்டுக்குச் சென்றார். கிங்கைப் பார்த்த வெள்ளைக்காரப் பையனின் அம்மா, ''டேய், நீ ஏன் இங்கே வந்தாய்? நீயோ, ஒரு நீக்ரோ. கன்னங் கரேல்

என்று இருக்கிறாய். வெள்ளைக்காரருடன் நீ சேருவதா, போ போ'' என்று கூறித் துரத்தி விட்டாள்.

8 வயதிலே கிங், தம் அப்பாவுடன் செருப்பு வாங்க ஒரு கடைக்குச் சென்றார். அந்தக் கடையில் இரு வரிசைகளில் நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. முன் வரிசையில் கிங்கும் அவரது அப்பாவும் உட்கார்ந்தார்கள். உடனே அங்கு வேலை செய்த வெள்ளைக்காரச் சிறுவன் அவர்களைப்பார்த்து, ''என்ன இது, முன் வரிசையில் உட்கார்ந்து விட்டீர்கள்! எழுந்து போய்ப்பின் வரிசையில் உட்காருங்கள். முன் வரிசையில் வெள்ளைக்காரர்கள் தான் உட்காரலாம்'' என்றான்.

''உன் கடைச் செருப்பு எங்களுக்கு வேண்டாம்'' என்று கோபமாகக் கூறி விட்டு மகனுடன் வெளியேறிவிட்டார் கிங்கின் அப்பா.

'மனிதருக்கு மனிதர் வேறுபாடா? இந்த இழி நிலையைப் போக்க வேண்டும்' என்று கிங்கின் பிஞ்சு மனம் அப்போதே உறுதி எடுத்துக் கொண்டது. அதே போல் நிற வேற்றுமையை ஒழிக்கவும், உலக அமைதி ஏற்படவும் 39வது வயது வரை — அதாவது வெள்ளையன் ஒருவனால் அவர் சுட்டுக் கொல்லப்படும் வரை -- அரும் பாடு பட்டார்.

விநோதச் செய்திகள்



□ நாம் நமது மொழியைத் தாய்மொழி என்கிறோம் அல்லவா? நார்வே மக்களும் கிரேக்கர்களும் அவர்கள் பேசும் மொழியைத் தாய்மொழி என்பதில்லை. மாமியார் மொழி என்கின்றனர்.

□ ஆதிகாலத்திலிருந்து இன்றுவரை பயன்படுத்தப் பட்டு வரும் நாணயங்களிலே மிகவும் பெரியது சாலமன் தீவு நாணயம்தான். இந்த நாணயத்தைத் தூக்கிச் செல்ல மூன்று பேர் தேவையாம்!

□ ரஷ்யாவில் 300 வருடங்களுக்குத் தோலினால் ஆன நாணயம்தான் புழக்கத்தில் இருந்ததாம்.

□ நியூ டெல்லியின் மக்கள் தொகை 1400 என்றால் நம்புவீர்களா? ஆனால் இது உண்மை. அமெரிக்காவில் லாஸ் ஏஞ்சல்ஸ் அருகில் உள்ள ஒரு சிறிய கிராமத்துக்கு நியூ டெல்லி என்று பெயர் வைத்திருக்கிறார்கள்!


□ அல்பேனியா நண்பர்கள் ஒருவரையொருவர் சந்திக்கும் போது நெற்றியோடு நெற்றியை மோதி வணக்கம் தெரிவிப்பார்கள்!

□ உலகிலே நீளமான மின்சார இரயில் பாதை ரஷ்யாவில் இருக்கிறது. மாஸ்கோவுக்கும் இர்குட்க என்ற இடத்துக்கும் இடையில் உள்ள மின்சார இரயில் பாதைதான் அது. அதன் நீளம் 3240 மைல்!

□ ஒலிம்பிக் விளையாட்டுக்களில் இதுவரை இடம் பெறாத பிரபல விளையாட்டு ஒன்று உண்டு. அதுதான் கிரிக்கெட்!

□ ரோமானியர்கள்தான் முதன் முதலில் உயில் எழுதி வைக்கும் வழக்கத்தைத் துவக்கியவர்கள்.

—ப்ரியா பாலு



குப்புசாமி அப்புசாமி

அழ.வள்ளியப்பா

அப்புசாமி:

குப்பு சாமி குப்பு சாமி,
குப்பை மேட்டிலே
செப்புக் குடத்தை ஒளித்து வைத்தான்,
திருடன் ஒருவனே...

குப்புசாமி:

அப்ப டியா! உடனே நானும்
அங்கே செல்கிறேன்.
செப்புக் குடத்தை எடுத்துக் கொண்டு
திரும்பி வருகிறேன்.

அப்புசாமி:

குப்பை மேட்டை உன்னால், தம்பி
கிளற முடியுமா?
சுப்பு, சீனு, சோமு சேர்ந்தும்
தோண்ட முடியுமா?

குப்புசாமி:

குப்பை மேட்டை எங்கள் வீட்டுக்
கோழி கிளறுமே!
செப்புக் குடத்தை எடுப்ப தொன்றும்
சிரமம் இல்லையே!

அப்புசாமி:

செப்புக் குடமா உன்றன் கையில்
சிக்கும் என்கிறாய்?
செப்புக் காசும் கிடைத்தி டாமல்
திரும்பப் போகிறாய்!

குப்புசாமி:

நிறையத் தங்க நகைகள் குடத்தில்
இருக்கும் அல்லவா?
வெறுங் கையோடே நானும் ஏனோ
திரும்பி வருகிறேன்!

அப்புசாமி:

இப்போ நீயும் ஆசைப் பட்டால்
என்ன பயனடா?
குப்பை மேடு இருக்கும் இடத்தைக்
கூறி னானா தான்?

குப்புசாமி:

அப்பு சாமி சார், எனக்கே
அதையும் கூறுங்கள்.
எப்ப டியும் செப்புக் குடத்தை
எடுத்து வருகிறேன்.

அப்புசாமி:

அடடே, எங்கோ என்றோ நடந்த
கதையைக் கூறவே,
ஆரம் பித்தேன்; அதற்குள் ஏனோ
ஆலாப் பறக்கிறாய்!





மாட்டிக் கொண்ட மந்திரவாதி

''ஐயா! காது கேட்காத ஒரு பையன் வேலைக்குவேணுமின்னுசொன்னீங்களே, இதோ இவனுக்குச் சுத்தமாகக் காது கேக்காது. நல்ல பையன்'' என்று ஒரு பையனை அழைத்து வந்து மந்திரவாதி மார்ட்டின் முன்னால் நிறுத்தினான் ஓர் ஆள்.

''டேய், உன் பேரென்ன?'' என்று இரைந்து கேட்டான் மந்திரவாதி.

''என் பேரு இ...இ... இடுக்கி.''

''சரி, உனக்கு மாதம் 20 ரூபாய் சம்பளம். இங்கே நடக்கிறது எதையும் வெளியே சொல்லப்படாது. சொன்னால் உன் உயிருக்கே ஆபத்து!''

கதை: நம்பி   சித்திரம்: ம.செ.





மந்திரவாதி தினமும் இரவு பத்து மணிக்கு மேல் ஓர் அறையில் உட்கார்ந்து, எதிரே ஒரு மந்திரக் கோலை வைத்துச் சில மந்திரங்களைச் சொல்லுவான். பிறகு மந்திரக் கோலைக் கையில் எடுத்துக்கொண்டு அது சரியாக வேலை செய்கிறதா என்று பார்ப்பான்.

அன்று இரவு அவன் அப்படிச் செய்யும்போது இடுக்கி பார்த்துக்கொண்டேயிருந்தான். மந்திரவாதி வளர்க்கும் நாய் இடது பக்கமும், கிளி வலது பக்கமும் நின்று கொண்டிருந்தன.



மந்திரத்தைக் கூறி முடித்ததும், மந்திரக் கோலை எடுத்து நாயைப் பார்த்த படி, 'ஓம், ரீம், கிரீம்' என்றான் மந்திரவாதி. உடனே நாய் பன்றியாக மாறி விட்டது! மறு நிமிடமே, மந்திரக்கோலைக் காட்டி 'கிரீம், ரீம், ஓம்' என்றான். அது திரும்பவும் நாயாகி விட்டது!



மறுநாள் இரவு இப்படித்தான் கிளியை ஒரு மானாக மாற்றினான். சிறிது நேரத்தில் திரும்பவும் அதைப் பழைய கிளியாக மாற்றி விட்டான். இப்படி மிருகங்களையும் பறவைகளையும் மாற்று வதற்கு மட்டுமே அவன் கற்று வைத்திருந்தான். வேறு வித்தை தெரியாது.



இப்போது, அவன் மனிதர்களை மிருகங்களாகவோ, பறவைகளாகவோ மாற்றுவதற்கான மந்திரங்களைக் கற்றுக்கொண்டு வந்திருக்கிறான். அன்று இரவு மந்திரங்களைக் கூறிவிட்டு, மந்திரக் கோலைக் கையில் எடுத்தான், இடுக்கியைப் பார்த்துக் கொண்டே



''ஓம், ரீம், கிரீம்'' என்றான். மறுவிநாடி இடுக்கி நின்ற இடத்தில் ஒரு பன்றி நின்றது! ''ஆ! வெற்றி! வெற்றி!'' என்று மந்திரவாதி குதித்தான். பிறகு இடுக்கியை முன் போலச் சிறுவனாக மாற்றினான். இடுக்கிக்கு இனி அங்கு இருப்பது ஆபத்து என்று புரிந்தது.




இடுக்கியின் உண்மைப் பெயர் உலகநாதன். ''காது கேளாதவன் போலவே நீ நடி'' என்று அவனைச் சேர்த்து விட்ட ஆள் சொன்னதாலே, அவன் அப்படி நடித்துவந்தான். அவன் மிகவும் கெட்டிக்காரனுதலால் மந்திரங்களை யெல்லாம் கேட்டுக் கேட்டு மனப்பாடம் செய்து விட்டான்!



ஒரு நாள் இடுக்கியை அழைத்துக் கொண்டு ஒரு பணக்காரரிடம் போய், ''எனக்கு உடனே பத்தாயிரம் ரூபாய் தேவை. தர முடியுமா, முடியாதா?'' என்றான்.

''தரமுடியாது. போடா தடிஎருமை' என்றார் பணக்காரர். உடனே, அவரை எருமையாக மாற்றி விட்டான் மந்திரவாதி!




இன்னொரு நாள், ஒரு வீட்டு வாசலில் நின்ற பெண்ணிடம், ''உன் பெயரென்ன?'' என்று கேட்டான்.

''சொல்ல முடியாது. பார்க்கிறதைப் பார், கழுகு மாதிரி...'' என்றாள் அவள்.

மறு நிமிடமே அவளை ஒரு கழுகாக மாற்றி விட்டான்!




அன்று நடு இரவிலே இடுக்கி அறைக்குள் புகுந்து மந்திரக் கோலை எடுத்தான். குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்த மந்திரவாதிக்கு நேரே மந்திரக் கோலைப் பிடித்து, 'ஓம், ரீம், கிரீம்' என்றான். மறு விநாடி....



மந்திரவாதி இருந்த இடத்திலே ஒரு மைனா இருந்தது. இடுக்கி உடனே அதைப் பிடித்து அருகில் இருந்த கிளிக் கூண்டிலே அடைத்து நன்றாகப் பூட்டி விட்டான்.

மறு நாள், மைனா இருந்த கூண்டுடன் புறப்பட்டுச் சென்றான். எங்கே?



போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று, இன்ஸ்பெக்டரிடம் நடந்ததைச் சொன்னான். அவரால் நம்ப முடியவில்லை.

கைதிகளை அடைக்கும் கம்பிபோட்ட அறையைத் திறக்கச் சொன்னான், இடுக்கி. அதற்குள் மைனாவை விரட்டி மந்திரம் ஓதினான். அடுத்த விநாடி..



மைனாவைக் காணோம்! மந்திரவாதி அங்கே நின்றான்! உடனே அவனைக் கைது செய்தார்கள். எருமையாக இருந்த பணக்காரரையும், கழுகாக இருந்த பெண்மணியையும் அழைத்து வந்தார்கள். எருமை அவனை முட்டியது, கழுகு கொத்தியது. மந்திரவாதி அலறினான்.



இடுக்கி என்ற உலகநாதன் பணக்காரரையும், பெண்மணியையும் முன் போல் மாற்றினான். மறு நிமிடமே, அந்த மந்திரக் கோலை உடைத்து எறிந்தான்.

உலகநாதனுக்குப் பரிசுகளும், பாராட்டுக்களும் கிடைத்தன. மாட்டிக்கொண்ட மந்திரவாதிக்குக் கிடைத்தது 7 ஆண்டு கடுங்காவல்!



இப்பொழுது எதற்கு?

- பூரம் -

நான் ரகுவைப் பார்க்கப் போன போது, அவன் கன்னத்தில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான்....

''கப்பல்தானே கவிழ்ந்து விட்டது? போனால் போகிறது. அது சகஜம் தான்!'' என்றேன்.

''கிண்டல் கிடக்கட்டும் அப்பனே! இந்தக் கதையில் வருகிற திருட்டு இருக்கிறதே...'' — இப்படி அவன் ஆரம்பித்துவிட்டால், ஓயவே மாட்டான், நான் மூர்ச்சை யடைகிறவரை...

அவனுக்குத் துப்பறியும் கதைகளில் அவ்வளவு பைத்தியம்! அவன் தந்தை போலீஸ் இன்ஸ்பெக்டராக இருப்பது வேறு இன்னும் ஆபத்தாகப் போய்விட்டது! 'தந்தை இன்ஸ்பெக்டராக இருந்தால், பிள்ளை ஸி.ஐ.டி.யாக வாவது இருக்க வேண்டாமா?' இப்படி அடிக்கடி கேள்வி கேட்பான். மேல் நாடுகளில் திருட்டுக்களை எப்படிக் கண்டு பிடிக்கிறார்கள் என்றெல்லாம் ஆவலோடு படிப்பான்.

''அதெல்லாம் இப்போதே தெரிந்து கொள்ளவேண்டும்... நாளைக்குப் படிப்பு முடிந்தவுடன் சி. ஐ. டி. ஆகிவிடுவேனே!'' என்று காலரைத் தூக்கி விட்டுக் கொள்வான்.

''மேல் நாட்டுத் திருடன் கடல் கடந்து இங்கே வரவும் மாட்டான்; நம் வீட்டில் திருடவும் மாட்டான்'' என்பேன்.

''உன்னைப் போலச் சுத்தச் சோம்பேறிகள் இருந்தால், துப்பறியும் கலை உருப்பட்டாற் போலத்தான்!''—அவன் பதிலில் அனல் பறக்கும்.

''நான் உன் வழிக்கு வரவில்லை. பின் ஏன் என் பிராணனை வாங்குகிறாய்? துப்பறியும் சிங்கமாக நீ ஆகாவிட்டாலும் நீ துப்பறியும் ஆட்டுக் குட்டியாக வாவது ஆவாயாக! என் வாழ்த்துக்கள்!'' இப்படி நான் அடிக்கடி சொல்வதுண்டு.

ஒவ்வொரு சமயம் அவன் மாடியில் ஜன்னலருகே உட்கார்ந்து யோசனை பண்ணிக் கொண்டிருப்பான். தெருவில் போகிறவர், வருகிறவர்களைக் கண் கொட்டாமல் கூர்ந்து கவனித்துக் கொண்டிருப்பான். திடீரென்று சிந்தனையில் மூழ்கி, ''நீ என்ன நினைக்கிறாய்?'' என்று ஒரு தடவை இரண்டு தடவை கேட்பான். உடனே நான் மனத்துக்குள், 'சரி, இன்று நாம் தொலைந்தோம்' என்று தலையில் கையை வைத்துக்கொள்வேன்.

''ஒரு பணக்காரர் வீட்டில் இரண்டு சமையல்காரர்கள், மூன்று வேலைக்காரர்கள், ஒரு வேலைக்காரி... மாலை வேளையில் வைர மோதிரம் திருட்டுப் போய்விட்டது. கார் டிரைவர் தான் முதலில் எஜமானர் மோதிரத்தைக் கழற்றி வைப்பதைப் பார்த்தான்....'' இந்த மாதிரிக் கதைகளில் திருடன், யார் யாராக இருக்க முடியும் என்று சொல்லிக் கடைசியில், ''நீ என்ன நினைக்கிறாய்?'' என்கிற கேள்வியை என் முன்னால் தூக்கிப் போடுவான்.

நான் நினைக்க ஆரம்பிப்பதற்குள் அவனே சொல்லி விளக்குவான். ''ஸி.ஐ.டி. என்றால் எதையும் கூர்ந்து ஆராய வேண்டும். சிறு விவரம்கூட விடாமல் விசாரிக்க வேண்டும். விசாரணையில் குறுக்குக் கேள்விகள் கேட்டு, அவர்களுடைய முக மாறுதல்களைக் கவனிக்க வேண்டும். மிகவும் முன் யோசனையோடு காரியங்கள் செய்ய வேண்டும்...'' இப்படி ஒவ்வொன்

றையும் ஆயிரம் உதாரணங்களோடு...... சொல்வான்.

துப்பறியும் கலையில் அவனுக்கிருந்த ஆர்வம் கொஞ்சம் கொஞ்சமாகப் பைத்தியமாகவே மாறிக் கொண்டு வந்தது. பள்ளிக்கூடத்தில்கூட அவன் மார்க்குகள் குறைந்துவிட்டன. முன்பு நானும் அவனும் வகுப்பில் முதல் இரண்டு மாணவர்களாக இருந்தோம். இப்பொழுது அவன் இருபதாவது மாணவனாக இருக்கிறான்.

ஆபத்து மிக்க அணுகுண்டு

அணுகுண்டு மிகவும் ஆபத்தானது என்பது நமக்குத் தெரியும். ஆனால், இரண்டாவது உலகப் போரில், அது எப்படிப்பட்ட பெரும் அழிவுகளை உண்டாக்கியது என்பது தெரியுமா?

மேற்கு ஜப்பானில் ஹிரோஷிமா என்ற ஒரு நகரம். அழகான அந்த நகரத்தில் மாட மாளிகைகளும் ஏராளமான தொழிற்கூடங்களும் இருந்தன.

இரண்டாம் உலகப் போரில் அமெரிக்கர் முதல் முதலாக அந்த நகரத்தில் அணுகுண்டு வீசினார்கள். சிறிது நேரத்தில் அந்த நகரமே தகர்ந்து தரை மட்டமாகி விட்டது. அப்படியானால் அங்கிருந்த மக்கள் ...?

ஆயிரமா? இரண்டாயிரமா? 83,000 பேர்? ஒரே சமயத்தில் இறந்து போனார்கள்.

மிஞ்சியவர்களில் கை கால் ஒடிந்தவர்கள், கண் தெரியாமல் போனவர்கள், காது கேளாமல் அவதிப்பட்டவர்கள்—இப்படிப் பலர்.

அடியோடு அழிந்த அந்த ஹிரோஷிமா நகரத்தை ஜப்பானியர் தங்களின் கடின உழைப்பாலும், விடா முயற்சியாலும் மீண்டும் ஒரு கண்கவரும் நகரமாக்கி விட்டனர்!. சிறந்த தொழில் நகரமாக்கி விட்டனர்!



நிறையத் துப்பறியும் கதைப் புத்தகங்கள்தான் வாங்குவான். எப்பொழுது பார்த்தாலும் அதே படிப்புத்தான்! துப்பறிவதற்காக வேண்டிய உபகரணங்கள் எல்லாம் வாங்கிக் கொண்டான். முதலில் ஒரு கறுப்புக் கண்ணாடி வாங்கி மாட்டிக் கொண்டான்.

''ஏண்டா, ரகு? இப்பொழுது திருடன் முகமூடி போட்டுக்கொண்டு உன் பக்கத்தில் நின்றால் திருடன் யார் என்று கண்டு பிடிப்பது கஷ்டமாகி விடும்!'' என்றேன்.

''என்ன உளறுகிறாய்?''

''ஆமாம், முகமூடித் திருடனையும் உன்னையும் நிறுத்தி வைத்தால் நிச்சயம் உன்னைத்தான் திருடன் என்று சொல்வார்கள்...''

''போடா, லூஸ்!'' என்றான் அவன். பிறகு சிரித்துக் கொண்டு, ''முகத்தில் முக்கால்வாசி மறைக்கும் கறுப்புக் கண்ணாடி எதற்குத் தெரியுமா? பிறருக்குத் தெரியாமல் பக்கவாட்டில் பார்க்க முடியுமாம்... முக பாவனைகளைக் கவனிக்கலாம்... இதெல்லாம் முக்கியமாயிற்றே!'' என்றான்.

ஒரு போட்டோ 'காமெரா' வாங்கிப் புகைப்படம் எடுக்கக் கற்றுக் கொண்டான். ஜன்னலில் உட்கார்ந்தபடியே தெருவில் வேகமாகப் போகிற கார்கள், லாரிகள், மோட்டார் சைக்கிள்கள் எல்லாவற்றையும் போட்டோ எடுத்தான்.

அப்பாவைத் தினமும் நச்சரித்து ஒரு 'பைனகுலர்' வாங்கினான். கண்ணுக்குத் தெரிகிற கட்டடங்கள் எல்லாவற்றையும் உற்று உற்றுப் பார்த்தான். தெருவில் கிருதா மீசை, தாடி வைத்துக்கொண்டு எவனாவது போனால் கொஞ்சம் பின்னாலேயே தொடர்ந்து போவான்.

''இந்தக் காலத்தில் கிருதா மீசை இல்லாத ஆசாமிகளே கிடையாது ரகு! நீ எல்லாரையும் சந்தேகப் படுகிறாய்'' என்று அவனைப் பிடித்து இழுத்துக் கொண்டு வருவதற்குள் போதும்போதுமென்றாகி விடும்!

''அதோ தெருவில் போகிறான் பார்! அவன் ஏன் அந்தத் தென்னை மரத்தையே பார்த்துக் கொண்டு போக வேண்டும்? உண்மையில் அவன் தென்னை மரத்தைப் பார்க்கவில்லை. வேறு எதையோ பார்க்கிறான். நீ என்ன நினைக்கிறாய்?'' என்றான் ஒரு நாள்.

''அவன் எதைப் பார்த்தால் நமக்கென்ன? நீ பாடத்தைக் கவனி. பரீட்சை வருகிறது...''

''நீயும் உன் பரீட்சையும் உன் மூஞ்சியும்....''

''ஆமாம். நீயும் உன் துப்பும்.... தென்னை மரமும்...'' என்று சுடச்சுடப் பதில் கொடுத்தேன்.

''என்னைக் கேலி செய்யத்தான் உனக்குத் தெரியும். என்னிடம் ஒரு 'கேஸ்' இப்பொழுதுதான் வந்திருக்கிறது. இதில் நான் வெற்றியடைந்தால், அப்புறம் தெரியும் இதன் மகிமை...

''சரி, அந்தக் கேஸைப் பற்றி எனக்குத் தெரிய வேண்டியதில்லை. சொல்ல ஆரம்பிக்க வேண்டாம்'' என்று எரிந்து விழுந்தேன்.

பள்ளிக்கூடத்திலும் இந்தத் தொல்லை தான் இவனோடு. பேனாவை யாராவது தொலைத்துவிட்டால், வலுவில் இவனாகவே போய் விசாரிப்பான்.

''கடைசியாக எப்பொழுது எழுதினாய்? எழுதிய நோட்டு எங்கே? பேனாவின் நிறம் என்ன?'' — இப்படி ஒரு நாள் பேனாவைத் தொலைத்தவனின் பிராணனை வாங்கி விட்டான். பேனா கிடைத்தபாடில்லை. கடைசியில் பேனாவைத் தொலைத்தவன் அவன் காலில் விழுந்தான்...

''அப்பா ரகு, பேனா போனால் போய்விட்டுப் போகிறது. என்னை நீ இப்படிக் கொத்திக் கொத்தி எடுக்க வேண்டாம்...'' என்று அலறினான்.

நானாக இருந்தால் நாக்கைப் பிடுங்கிக் கொண்டிருப்பேன். ரகுவுக்குத்தான் சுரணையே கிடையாதே! மடையன்!

என்னிடம் வந்து, ''நீ என்ன நினைக்கிறாய்?'' என்று கேட்டான்.

''நான் நிஜமாக நினைப்பதைச் சொல்லட்டுமா?..நிஜமாகச் சொன்னால் வருத்தப்படமாட்டாயே?''

''சொல்லேன்...''

''கொஞ்சம்கூட நன்றாக இல்லை உப்புச் சப்பில்லாத இந்தத் துப்பு.''

''நான்சென்ஸ்!....'' —அவன் கேட்கவில்லை.

ஒரு நாள் அவனுடைய அப்பாவும் அம்மாவும் ஊருக்குப் போக நேர்ந்தது. ரகு மட்டும் வீட்டில் இருக்க வேண்டியதாகி விட்டது. அன்று மாலை நான் அவனைப் பார்க்கும்போதுகூட அவன் ஏதோ ஒரு கதைதான் படித்துக்-கொண்டிருந்தான். துப்பறியும் கதை! நான் வீட்டுக்குக் கிளம்பும் நேரத்தில் ''நான் மட்டும் தனியாக இருக்கிறேன்... நீ சாப்பிட்டுவிட்டு வந்துவிடேன். இன்றிரவு இங்கே தங்கிவிடலாம்'' என்றான்.

''ஏனப்பா, பயமாக இருக்கிறதா?''

''ஓ! ஓ! பயம் இல்லை. தனியாக இருப்பதற்கு என்னவோ போல்...''

''பேச்சுத் துணைக்கு... அவ்வளவு தானே? ராத்திரி என்னைத் தூங்க விடுவாயா?....''

''நீ கட்டாயம் வா!...'' என்றான்.

நானும் போனேன். அவன் அறையில் மேஜை மேல் ஒரு துப்பாக்கி இருந்தது.

''இது என்னப்பா பயங்கரம்?''



''இது பிஸ்டல்! 'டபால்' என்று சுடலாம். திருடன் அலறுவான்.... ஆனால், இது நிஜத் துப்பாக்கி இல்லை!''

''இது எதற்கு?''

''எதற்கும் கையில் வைத்துக்கொள்வது நல்லது. திருடன் வந்தால்?''

பிறகு ஒரு தடியை எடுத்துத் தலை மாட்டில் வைத்துக் கொண்டான். நான்கு முழம் கயிறு. ஒரு சவுக்கு... ஒரு சின்னக் கத்தி!....

''ஏன் ரகு! வருகிற திருடனுக்கு ஆயுதம் சேகரித்துக் கொடுக்கிறாயா?''


மூன்று கேள்விகள்

(1) மயிலுக்கும், யானைக்கும் உள்ள 'கைகள்' எவை?

(2) பொற்கொல்லர் பயன்படுத்தும் 'மணம்' உள்ள கருவி எது?

(3) 'கனம்' உள்ள ராகம் எது?

விடைகள்: (1) தோகை, தும்பிக்கை (2) சாமணம் (3) மோகனம்



—ஆர். எஸ். சுப்பிரமணியன்

''நாம் எப்போதும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.! இதோ பார்! இந்தப் பொத்தானை அழுத்தினால், தோட்டத்து விளக்குகள் எரியும். துப்பாக்கியால் இப்படி ஜன்னல் வழியாகச் சுடுவேன். திருடன் அலற மாட்டானா?... நீ என்ன நினைக்கிறாய்?''

''சரி, சரி. என்னைப் படிக்க விடு!'' என்று படிக்க ஆரம்பித்தேன்.

''கேளப்பா, திருடர்கள் பலவகை உண்டு!....''

''சரி, அதையெல்லாம் ஒரு தாளில் எழுதிக் கொடு. சாவகாசமாகப் படிக்கிறேன்....''

''கேள், எல்லாத் திருடனும் தன் தொழிலில் ஏதாவது ஒரு தவறு செய்யாமல் இருப்பதில்லை...''

'சரி, இனி நாம் பாடம் படித்தாற் போலத்தான்!' என்று நினைத்துக் கொண்டேன். அவன் என்னவோ சொல்லிக்கொண்டே போனான்.... நான் கொட்டாவி விட ஆரம்பித்தேன்.

''ரகு, தூக்கம் வருகிறது. நான் படுக்கட்டுமா?''

''சரி, தூங்கு!'' என்றான் ரகு.

அப்புறம் அவன் வெகு நேரம் தூங்கவில்லை. நான் கண்ணை மூடிக்கொண்டு தூங்கத் தொடங்கினேன். ஆனாலும் அவன் என்னை நிம்மதியாகத் தூங்கவா விட்டான்? அவன் தூங்கியதாகத் தெரியவில்லை. பீரோவைத் திறப்பதும் மூடுவதுமாக இருந்தான்.

நடு இரவில் திடீரென்று என்னை எழுப்பினான்.

''டேய், எழுந்திரு, சீக்கிரம்!''

''என்ன ஆயிற்று?''

''சத்தம் போடாதே. நல்ல சந்தர்ப்பம் வந்திருக்கிறது...''

''என்னது? சந்தர்ப்பமா? எதற்கு?''

''நம் வீட்டுத் தோட்டத்தில் திருடன் புகுந்திருக்கிறான்...''

''சரி, இருக்கட்டுமே! அவனையும் கூப்பிடு! அவனுக்கு ஒரு தலையணை கொடுப்போம். பாவம், அவனும் தூங்கட்டுமே!''

''உன் கிண்டல் கிடக்கட்டும். அவன் தோட்டத்தில் ஒளிந்து கொண்டிருக்கிறான்!''

''ஏன் வெட்கப்படுகிறானா?''

''நான்சென்ஸ்!... இங்கே சத்தம் போடாமல் வந்து பார்!''

நான் போய் ஜன்னல் வழியே பார்த்தேன்... தோட்டத்து இருளுக்குப் பின்னால் புதர் சலசலத்தது. இருளில் இலைகள் அசைவது தெரிந்தது. சருகுகள் சலசலத்தன... நிஜமாகவே திருடன்தானா?... இருட்டில் ஒன்றும் கண்ணுக்குப் புலப்படவில்லை.

''இந்தத் திருடனை நான் எப்படியும் பிடித்தே ஆக வேண்டும்... ஆனால்...'' என்று இழுத்தான் ரகு.

''ஆனால் என்ன?''

''திருடன் கையில் என்ன வைத்திருக்கிறானோ?''

''என்ன, கத்தி அல்லது துப்பாக்கி.. வேறு என்ன?''

"கத்தி இருந்தால் கவலை இல்லை. ஆனால்...."

"ஏனப்பா நடுங்குகிறாய்?"

"துப்பாக்கி நம்மிடம் இல்லையே..."

நான் கூர்ந்து பார்த்தேன். இருளில் யாரோ நகருவது தெரிந்தது.

"ரகு! பேசாமல் உடனே போலீஸுக்குப் போன் பண்ணி விடலாம்."

"கூடாது. நான்தான் போலீஸ்... அவன் மெதுவாக உள்ளே நுழையட்டும்..." — இப்படிச் சொன்னானே தவிர, ரகுவின் உடல் முழுதும் நடுங்க ஆரம்பித்துவிட்டது.

"என்ன ரகு? ஏன் நடுங்குகிறாய்?"

"அதோ பார்!"

அவன் இன்னொரு மூலையைக் காண்பித்தான். அங்கேயும் புதர் அசைந்து கொண்டிருந்தது. நிஜமாகவே யாரோ தான் ஒளிந்திருக்கிறார்கள். சந்தேகமில்லை.

"என்ன செய்யப் போகிறாய்?" என்றேன் நான்.

ரகுவின் முகம் வெளுத்தது. உடல் நடுங்கிற்று.

"திருடர் கூட்டம்!"

"நீதான் சிங்கக் குட்டியாயிற்றே! ஏன் நடுங்குகிறாய்? நடுங்குவானேன்? அவர்கள் திருடிக்கொண்டு போவதானால் போகட்டுமே!... நீதான் இருக்கிறாயே, துப்புத் துலக்குவதற்கு?"

"ஆமாம்... ஆனால் எனக்கு ஒரே.." என்று வாய் குழறி 'உய்!' என்று கத்திவிட்டு, என் கழுத்தைக் கட்டிக் கொண்டான். நாய் மாதிரி உடம்பு இரைத்தது. குதிரை மாதிரி வியர்த்துக் கொட்டிற்று.

இருளில் அசைகின்ற உருவங்களைப் பார்த்தேன். 'வெடுக்'கென்று அவன் துப்பாக்கியைப் பிடுங்கித் தோட்டத்து இருளில் 'டமீல்! டமீல்!' என்று சுட்டேன். அதே சமயம் ஸ்விட்சைத் தட்டினேன் தோட்டத்தில் விளக்குகள் எரிந்தன! அந்த உருவங்கள் விழுந்தடித்துக் கொண்டு ஓடின!

நான் குபீரென்று சிரித்தேன்.

"அப்பா, ரகு! அவர்கள் திருடர்களுமல்ல, பகைவர்களுமல்ல! நம் வீட்டுக்கு வந்த நண்பர்கள்! பாவம், கண்ணைத் திறந்து பார்.. அந்தப் பெருச்சாளிகள் ஓடுகிற ஓட்டத்தை!"

"என்னது? பெருச்சாளிகள்தானா?"


"உன் துப்பறியும் திறமையில் இடிதான் விழவேண்டும். உன் நடுக்கத்தில் அடுத்த இடி விழ வேண்டும்..."

"எனக்குப் பயந்தான்....!"

"துப்பறிபவனுக்குத் தைரியம் நிறைய வேண்டுமப்பா. உன்னைப்போல் தொடை நடுங்கிகள் அதற்குத் தகுதி இல்லை. இனிமேல் இந்தப் புத்தகங்களை வாசித்து மனத்தைக் கெடுத்துக் கொள்ளாதே. தூங்கப்பா!..."

"என் திறமை உனக்குத் தெரியாது?"

"போதும்! போதும்! உன் திறமைகள்... இந்த மர்மங்கள், பயங்கரங்கள் எல்லாம் எதற்குடா? அநாவசியக் குழப்பம்தான் வரும்! அநாவசியமாய் உன் சிந்தனை சக்தி கெட்டுப் போகும்! துப்பறிகிற விவகாரம் எல்லாம் நமக்கு எதற்கு? அதெல்லாம் இப்பொழுது எதற்கு?... நீ சி.ஐ.டி. ஆவதற்குப் படித்துப் பாஸ் பண்ணிய பிறகு பார்த்துக் கொள்ளலாமே!"



கடிகாரம் சம்பாதிக்கிறது!

"எங்கள் வீட்டிலே எல்லாருமே சம்பாதிக்கிறோம்,கடிகாரம் உள்பட"

"என்ன, கடிகாரமுமா சம்பாதிக்குது!"


"ஆமாம், அது ஒரு நாளைக்கு 17 நிமிஷம் சம்பாதிக்குதே!"

—சிவசக்தி

ரகு நிமிர்ந்து என்னைப் பார்த்தான்.

"ஆமாண்டா, நீ சொல்வதும் சரிதான்! நமக்கு இப்பொழுது இந்த அநாவசியம் எதற்கு?... இனிமேல்... இந்த மர்ம நாவல் பயங்கரங்களை விட்டுத் தொலைக்கலாம் என்று நினைக்கிறேன்.... ஆமாம், நீ என்ன நினைக்கிறாய்?"

"விளக்கை அணைத்துவிட்டுத் தூங்கலாம் என்று நினைக்கிறேன். வேறு ஒன்றுமில்லை!...." என்று திருப்தியுடன் போர்வையைப் போர்த்திக் கொண்டேன் நான்!



உலகப் புகழ் பெற்ற சிறுவர் கதை-5

தண்ணீர்க் குழந்தைகள்

எச். கிருஷ்ணமூர்த்தி

இங்கிலாந்தின் வடக்குப் பகுதியில் ஒரு பெரிய ஊர். அங்கு டாம் என்னும் பத்து வயதுச் சிறுவன் இருந்தான். புகை போக்கிகளைச் சுத்தம் செய்வது அவனுடைய வேலை. அவனுக்கு நிறைய வேலை கிடைத்தது. ஆனாலும் பணமெல்லாம் அவனுடைய எஜமானர் கிரைம்ஸ் வாங்கிக் கொண்டார். புகை போக்கியின் உள்ளே ஏறும் போது டாமுக்குக் கை, கால்களில் அடிபடும். கண்ணில் புகை விழும். போதாக் குறைக்கு எஜமானரின் அடி, உதை, திட்டு. அவன் அரை வயிற்றுக்கு மேல் சாப்பிட்டதில்லை. வீட்டில் தண்ணீர் இல்லாததால் அவன் குளித்ததுமில்லை. இத்தனை கஷ்டங்களுக்கு இடையிலும் டாம் சிரித்துக் கொண்டிருந்தான். விளையாடிக் கொண்டிருந்தான். வேதனை பொறுக்கா விட்டால், சில சமயம் அழுவான்.

ஜான் ஆர்த்தோவர் பிரபுவின் மாளிகை அந்த ஊரில் மிகப் பெரியது. அதில் நிறையப் புகை போக்கிகள் இருந்தன. அவற்றைச் சுத்தம் செய்ய கிரைம்சுக்கு அழைப்பு வந்தது. டாமும் போனான். வழியில் கிரைம்ஸ் டாமை அடித்துக் கொண்டே போனார். ஒரு மூதாட்டி டாமுக்காகப் பரிந்து பேசினாள். ஆனால், கிரைம்ஸ் அவளை லட்சியம் செய்யவில்லை.

எஜமானர் சொன்னபடி டாம் மாளிகையில் இருந்த பல புகை போக்கிகளைச் சுத்தம் செய்தான். களைத்துப்போனான். புகை போக்கி பல கிளைகளாகப் பிரிந்து சென்றது. கீழே இறங்க வழி தெரியவில்லை. தவறான புகை போக்கியின் வழியாக இறங்கினான்.

டாம் ஒரு சுத்தமான அறையை அடைந்தான். அறை வெள்ளை வெளேரென்று இருந்தது. கட்டிலில் ஓர் அழகான சிறுமி படுத்திருந்தாள். 'தினமும் குளித்தால் எல்லோரும் இப்படி அழகாக இருப்பார்களோ!' என்று டாம் எண்ணினான். அருகில் ஒரு கரிய உருவம் தெரிந்தது. அது வேறு யாருடைய உருவமும் அல்ல. அவனுடைய உருவமேதான்! அங்கிருந்த கண்ணாடிதான் அவனுடைய உருவத்தைக் காட்டியது. டாமுக்கு அவமானமாக இருந்தது. தன்மீது கோபமாக வந்தது. புகை போக்கியின் வழியாக மேலே ஏற முயன்றான். அந்தச் சப்தத்தைக் கேட்டுச் சிறுமி எழுந்தாள். டாம் பயந்து கத்தினான். ஒரு வேலைக்காரி ஓடிவந்தாள். திருடன் என்று எண்ணி டாமைப் பிடித்தாள். டாம் தன்னை விடுவித்துக் கொண்டு ஜன்னலுக்கு வெளியே குதித்தான். காட்டை நோக்கி ஓடினான்.

வேலைக்காரர்கள் பலர் டாமைத் துரத்தினர். பாதையின் குறுக்கே ஓர் உயரமான சுவர் இருந்தது. டாம் வேகமாக ஏறினான். மறு பக்கம் அடைந்தான். ஒரு புதரில் மறைந்து கொண்டான். அவனைக் காணாமல் வேலைக்காரர்கள் திரும்பிச் சென்றனர்.

டாம் வெகு தூரம் நடந்து ஒரு குன்றை அடைந்தான். அவனுக்கு ஒரே பசி, தாகம். எதிரே ஒரு பள்ளத்தாக்குத் தெரிந்தது. அதில் ஓர்

ஓடையும் ஓடைக்கு அருகில் ஒரு வீடும் தெரிந்தன. இடையே செங்குத்தான பாறை. அந்தப் பாறை வழியாகக் கீழே இறங்கினான். அந்த வீட்டை நோக்கி நடந்தான்.

அது ஒரு சிறிய பள்ளிக்கூடம். டாம் உள்ளே நுழைந்தான். தண்ணீர் கேட்டான். ஆசிரியர் அவனுக்கு ரொட்டியும் பாலும் கொடுத்தார். பசி நீங்கியதும் டாம் தன்னுடைய கதையைச் சொன்னான். அயர்ந்து படுத்தான். உடம்பு சூடாக இருந்ததால் தூக்கம் வரவில்லை. 'குளிக்க வேண்டும்' என்று டாம் நினைத்தான்.

ஃ ஃ ஃ

அடுத்த நிமிடம் அவன் பள்ளிக்கூடத்து அறையில் இருக்க வில்லை. ஓடைக் கரையில் இருந்தான்! துணிகளைக் களைந்து நீரில் இறங்கினான்.

ஃ ஃ ஃ

தேவதைகளின் அரசி டாம் மீது இரக்கப்பட்டு அவனுக்காகப் பல ஏற்பாடுகளைச் செய்திருந்தாள். அவள் தண்ணீர்த் தேவதைகளைக் கூப்பிட்டு, ''ஒரு புதிய தம்பியை உங்களிடம் அனுப்புகிறேன். நீங்கள் அவன் கண்ணில் படக் கூடாது. ஆனால், அவனுக்கு எவ்வித ஆபத்தும் வராமல் காப்பாற்ற வேண்டும்'' என்று சொல்லியிருந்தாள்.

ஃ ஃ ஃ

டாம் தண்ணீரில் இறங்கினான். உடனே தூங்கி விட்டான். மறைந்திருந்த தேவதைகள் அவனுக்கு இனிய கனவுகளை அளித்தன. அவனை வெகு தூரம் தாலாட்டி எடுத்துச் சென்றன. ஆசிரியர் டாமைத் தேடிப் பார்த்தார். காணவில்லை.

ஃ ஃ ஃ

''டாம் எதையும் திருடவில்லை. பயத்தினால் ஓடிவிட்டான்'' என்ற செய்தி பிரபுவின் மாளிகை முழுதும் பரவியது. பிரபுவின் காதுகளுக்கும் எட்டியது. அவர் டாமுக்காகப் பரிதாபப் பட்டார். அவனைத் தேட ஆட்களை அனுப்பினார். அவர்களில் சிலர் அந்தச் சிறிய பள்ளிக்கூடத்திற்குப் போய்த் தேடினர். டாமின் உடைகளை ஓடைக் கரையில் கண்டனர். அவன் நீரில் மூழ்கி இறந்திருக்க வேண்டும் என்று தீர்மானித்தனர்.

ஃ ஃ ஃ

டாம் தண்ணீரிலேயே உறக்கம் நீங்கிக் கண் விழித்தான். அவன் உடம்பு



மகன்: அப்பா, பரீட்சைக்குப் போகிறேன். விடை கொடுங்கள்.

அப்பா: (கோபமாக) விடையெல்லாம் தரமுடியாது. ஆசிரியரிடம் மாட்டிக் கொள்ளவா விடை கேட்கிறாய்?

-ஆர். சரவணன்



சின்னதாகக் குறுகியிருந்தது. மீனைப் போலச் செதில்கள் முளைத்திருந்தன. தேவதைகள் அவனை ஒரு தண்ணீர்க் குழந்தையாக மாற்றி யிருந்தன. எல்லாம் அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

ஃ ஃ ஃ

பிரபுவின் ஆட்கள் ஓடை நீரில் ஒரு கரிய பொருளைக் கண்டெடுத்தனர். அதுதான் டாமின் கூடு என்று அவர்களுக்குத் தெரியாது. அவனுடைய அழுக்கையும் கூட்டையும் தேவதைகள் நீக்கியிருந்தன. ஒரு புதிய சுத்தமான டாம் சின்னஞ் சிறிய உருவில் ஓடையில் நீந்திக் கொண்டிருந்தான்.

டாமின் மறைவுக்காகப் பிரபுவும் அவருடைய அருமைச் சிறு மகளான எல்லியும் மிகவும் வருத்தப்பட்டனர். டாமின் பெற்றோரைத் தேடினர். கிடைக்கவில்லை. அந்தச் சிறுமி அவனை மறக்கவில்லை. அவன் ஞாபகார்த்தமாகக் கல்லறையில் ஒரு கல்லை நட ஏற்பாடு செய்தாள்.

டாம் தன் பழைய வாழ்க்கையை மறந்தான். புதிய உலகத்தில் சந்தோஷமாகத் திரிந்து கொண்டிருந்தான். நீருக்கு அடியில் ஓர் அதிசய உலகம் மூழ்கி யிருந்தது. அதை வியப்போடு ஆராய்ந்தான். பல்வேறு நீர்ச் செடிகளையும், மரங்களையும், காடுகளையும் கண்டான். வித விதமான மலர்கள் மலர்ந்திருந்தன. ஒரு பூவைப் பறிக்கப் போனான். உடனே அது சுருங்கி ஜெல்லியாக மாறியது. மேலும் நீர்க் குரங்கு, நீர் அணில் முதலிய பல விநோதப் பிராணிகளையும் பார்த்தான்.

நீரில் சின்னஞ் சிறு பூச்சிகள் நிறைய இருந்தன. அவன் நண்டுகளைப் பிடித்துத் தொந்தரவு செய்தான். சில பூச்சிகளின் வாயில் கற்களைப் போட்டான். அவனைக் கண்டதுமே பூச்சிகள் ஓடி ஒளிந்து கொண்டன. அவனோடு விளையாடுவதற்குத் தோழர்கள் கிடைக்கவில்லை.

ஒரு நாள் ஒரு தும்பியைப் பிடித்துத் துன்புறுத்தினான். தும்பி தப்பித்துக் கொண்டு பறந்தது. ''இனிமேல் தொந்தரவு செய்ய மாட்டேன். என்னோடு விளையாட வா'' என்று கெஞ்சினான். தும்பி திரும்பியது. இருவரும் நண்பர்களானார்கள். அன்று முதல் அவன் மற்றப் பிராணிகளிடத்திலும் நட்பாக இருந்தான்.

ஃ ஃ ஃ

ஒரு நாள் வானம் இருண்டது. இடி, மின்னல், மழை. ஓடையில் வெள்ளம் உயர்ந்து கொண்டே போயிற்று. செடி கொடிகளையும், புழு பூச்சிகளையும் புது வெள்ளம் அடித்துச் சென்றது. வெள்ளத்தின் வேகத்தை டாமினால் தாங்க முடியவில்லை. அவன் ஒரு பாறைப் பிளவில் ஒளிந்து கொண்டான்.

ஓடையின் படுகை அமைதி இழந்தது. அமர்க்களப்பட்டது. பதுங்கியிருந்த விலாங்கு மீன்கள் எல்லாம் வெளிப்பட்டு, ''கடலுக்குப்போவோம், கடலுக்குப் போவோம்!'' என்று கத்திக் கொண்டே ஓடின. ஒரு நீர்க் கீரி தன் குடும்பத்தோடு விரைந்துகொண்டிருந்தது. அது டாமைப் பார்த்து, ''தம்பி, கடலைப் பார்க்க வேண்டுமென்றால் இதுதான் சமயம்! ஓடு, ஓடு!'' என்று கூறியது. ''எல்லோரும் கடலுக்குப் போகிறார்கள். நானும் போவேன்!'' என்றுசொல்லிக்கொண்டே டாமும் ஓடை நீரோடு மிதந்து போனான்.

மறுநாள் ஒரு ஆற்றை அடைந்தான். ஆறு அகலமாக இருந்தது. அதுதான் கடல் என்று நினைத்தான். பெரிய வஞ்சன மீன்கள் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தன. ஒரு மீனை அணுகி விசாரித்தான். ''கடலுக்கு இன்னும் வெகு தூரம் போக வேண்டும். அங்கே

தண்ணீர்க் குழந்தைகள் ஏராளம். உனக்கு நிறையத் தோழர்கள் கிடைப்பார்கள்'' என்று அந்த மீன் சொன்னது. டாம் சந்தோஷமாகக் கடலை நோக்கிப் போனான். தேவதைகள் மறைவாக இருந்து அவனுக்குத் தொடர்ந்து உதவிகள் செய்தன.

வழியில் அநேக படகுகளையும் கப்பல்களையும் பாலங்களையும் புகை போக்கி உள்ள நகரங்களையும் கடந்து சென்றான். டாம் ஒரு வழியாகக் கடலை அடைந்தான். வித விதமான கடல் பிராணிகளைக் கடந்து சென்றான். ஒரு நீர் நாயைப் பார்த்து, ''தண்ணீர்க் குழந்தைகள் எங்கே?'' என்று விசாரித்தான்.

''உன்னுடைய சகோதர சகோதரிகளைத் தேடிக் கொண்டு போகிறாயா? பயப்படாமல் போ. இன்னும் கொஞ்ச



தூரம் போனால் அவர்களைப் பார்க்கலாம்'' என்றது நீர் நாய்.

டாம் கடற் கரை ஓரமாகவே வெகு தூரம் நீந்தினான். தண்ணீர்க் குழந்தைகளைக் காணாமல் மனம் சோர்ந்தான்.

ஃ ஃ ஃ

ஆர்த்தோவர் பிரபுவின் மனைவி தன் குழந்தைகளுடன் கடற் கரைக்குப் போனாள். அவளுடைய மற்றக் குழந்தைகளுடன் சிறுமி எல்லியும் இருந்தாள். எல்லியின் ஆசிரியரும் உடன் போயிருந்தார். அவர் நீர்வாழ் பிராணிகளைப் பற்றி எல்லிக்குச் சொல்லிக் கொண்டிருந்தார்.

''ஐயா! இந்தப் பாடங்கள் எல்லாம் எனக்குப் பிடிக்கவில்லை. இப்போது என்னோடு விளையாடத் தண்ணீர்க் குழந்தைகள் வேண்டும். அவை எங்கே கிடைக்கும்? அவற்றைப் பற்றி ஏதாவது சொல்லுங்கள்.'' என்றாள் எல்லி.

''தண்ணீர்க் குழந்தைகளா? அப்படி ஒன்றும் கிடையாதே!'' என்று சொல்லிக்கொண்டே, கையிலிருந்த வலையை வீசி ஒரு சின்ன உருவத்தைப் பிடித்தார்.

வலையில் டாம் சிக்கினான். ''ஐயையோ! இதற்குக் கை இருக்கிறதே! கண் இருக்கிறதே! இது என்ன விசித்திரம்!'' என்று ஆசிரியர் கூவினார்.

''இதுதான் தண்ணீர்க் குழந்தை! இதுதான் தண்ணீர்க் குழந்தை!'' என்று உற்சாகமாகக் கத்தினாள் எல்லி.

ஆசிரியரால் நம்பவும் முடியவில்லை; நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. அவர் டாம் வாயில் விரலை வைத்தார். அவன் கடித்தான். அவர் கையை உதறினார். டாம் வலையிலிருந்து நீரில் விழுந்து தப்பித்துக் கொண்டான்.

எல்லி கால் தடுக்கி நீரில் விழுந்தாள். நல்ல காயம். வீட்டுக்குச் சென்று மருத்துவம் செய்தனர். அவள் ஒரு வாரத்திற்குக் கண்ணைத் திறக்கவே இல்லை. ஆனால் ''தண்ணீர்க் குழந்தை வேண்டும்'' என்று அடிக்கடி புலம்பினாள். மற்றவர்களுக்கு அது புரியவில்லை. ஆசிரியருக்கு மட்டும் புரிந்தது. இருந்தாலும் அவர் அதை நம்பாததால், ஒன்றும் பேசவில்லை.

ஓர் இரவில் தேவதைகள் எல்லிக்கு இறக்கைகளைக் கொடுத்தன. அவைகளோடு அவளும் ஜன்னல் வழியாகப் பறந்து போனாள்.

ஃ ஃ ஃ

ஆசிரியரின் கையிலிருந்து கீழே விழுந்த டாம் ஒரு பாறையைச் சுற்றி நீந்தினன். எதிர்பாராத விதமாக ஒரு தண்ணீர்க் குழந்தையைச் சந்தித்தான். ''புதுக் குழந்தை!'' என்று கத்திக்கொண்டே இரண்டு கைகளையும் நீட்டி ஓடினன். அதுவும் இரு கரங்களையும் விரித்து வந்தது. இருவரும் அன்புடன் தழுவிக் கொண்டனர்.

''நான் வெகு நாட்களாகத் தேடிக் கொண்டிருக்கிறேனே, நீங்கள் எல்லோரும் எங்கே போனீர்கள்?'' டாம் கேட்டான்.

''நாங்கள் இங்கேயேதான் இருக்கிறோம். நீ சரியாகப் பார்த்திருக்கமாட்டாய்'' என்று தண்ணீர்க் குழந்தை பதிலளித்தது.

''உங்களைக் கிளிஞ்சல் அல்லது வேறு ஏதோ கடல் பிராணி என்று நினைத்து விட்டேன். தவறு என்னுடையது தான்'' என்றான் டாம்.

தண்ணீர்க் குழந்தை நீர்ச் செடிகளை நட்டு, கற்களை அடுக்கி ஒரு தோட்டம் அமைத்தது டாம் உதவி செய்தான். அப்போது ஏராளமான தண்ணீர்க் குழந்தைகள் ஆடிக் கொண்டும், பாடிக் கொண்டும் வந்தன. அவை எழுப்பிய சப்தம் கடல் அலைகள் ஒலிப்பதைப் போல இருந்தது. அவை டாமை ஆசையோடு தழுவிக் கொண்டன. சுற்றி வந்து ஆடின. நிறைய நண்பர்கள் கிடைத்ததில் டாம் சந்தோஷமும் பெருமையும் அடைந்தான்.

அவை டாமை ஒரு தேவதைத் தீவுக்கு அழைத்துச் சென்றன. அங்கு நிறையக் குகைகள் இருந்தன. குகைகளின் வாசலில் அலங்கார நீர்க் கொடிகள். தரையில் நுண்ணிய வெண் மணல். சுத்தம் செய்ய வண்ண வண்ணச் சட்டை போட்ட நண்டுகள். காவல் காக்க நீர்ப் பாம்புகள்.

டாமுக்குத் தண்ணீர்க் குழந்தைகள் பலர் தோழர்கள் ஆயினர். இருந்தாலும் அவன் நீர்ப் பிராணிகளைத் துன்புறுத்துவதை விடவில்லை. ''பச்சைக் கண்ணுடித் தேவதை வருவாள், ஜாக்கிரதை!'' என்று தோழர்கள் அவனை எச்சரித்தனர். டாம் கேட்கவில்லை.

ஒரு வெள்ளிக் கிழமை பச்சைக் கண்ணுடித் தேவதை வந்தாள். போர்வை கறுப்பு, குல்லாய் கறுப்பு. கண்ணுடி பச்சை. மூக்கு வளைவு. கையில் பிரம்பு. முகம் கடுமை. தோற்றம் விகாரம். ஒவ்வொரு தண்ணீர்க் குழந்தையாகப் பார்த்துக் கொண்டு வந்தாள். கடலில் விளையும் பழங்களையும், இனிப்புக்களையும் பனிக் கட்டியையும் அவர்களுக்குப் பரிசாக அளித்தாள். டாமின் முறை வந்தது. வாயைத் திறந்தான். கடினமான ஒன்றை வாயில் போட்டாள். டாம் எடுத்துப் பார்த்தான். ஒரு கூழாங் கல்!

''நீ ஒரு கெட்டதேவதை!'' என்று சொல்லி டாம் அழுதான்.

''நீ ரொம்பக் கெட்ட பிள்ளை. கடல் பிராணிகளின் வாயில் கூழாங் கற்களைப் போட்டு ஏமாற்றினய், இல்லையா?'' என்று தேவதை கேட்டாள்,



சமாளிப்பிசம்

நாடகம் நடந்து கொண்டு இருந்தது. அது ஒரு பள்ளியில் நடத்தப்படும், அதன் ஆசிரியர்களே நடிக்கும் நாடகம். அந்நாடகத்தில் கிருஷ்ண பகவானைப் நடித்துக்கொண்டிருந்தவர் ஓர் ஆங்கில ஆசிரியர். நாடகத்தில் தருமராக நடித்தவர், ''கிருஷ்ணு, துரியோதனனிடம் தூது சென்றாயே, நல்ல முடிவா?'' என்று கேட்க வேண்டும்; அவ்வாறே அவரும் கேட்டார்.

அதற்கு கிருஷ்ணனைப் நடித்தவர், ''இல்லை'' என்று தொடங்க வேண்டும். ஆனால் அவரோ, பழக்க தோஷத்தால், ''நோ!'' என ஆரம்பித்தார்.

உடனே நடிகர் உட்பட இரசிகர்கள் சிரித்தார்கள். ''ஹோ'' என்று ஆரவாரம் செய்தார்கள்.

ஆனல், அந்த நடிகரோ, ''தருமா, எனக்குப் பல மொழியினர் பக்தராயிருக்கின்றனர். ஓர் ஆங்கிலேயன், தன் மகனுக்குத் திருமணம் செய்ய இந்தக் காலம் நல்ல காலமா எனக் கேட்கிருன். அவனுக்குத் தான் ''நோ'' என அவன் மொழியிலே பதில் அளிக்கிறேன்'' என்றதும், அந்தச் சபையே அதிரும்படி இரசிகர்களின் கரகோஷம் எழுந்தது.

—ஜி. கே. வசிஷ்ட்

''உனக்கு யார் சொன்னார்கள்?'' டாம் திருப்பிக் கேட்டான்.

''என்னிடமிருந்து எதையும் மறைக்க முடியாது. எனக்கு எல்லாம் தெரியும். தவறு செய்டவர்களைத் திருத்துவது தான் எனக்கு வேலை. சரி, டாமைத் தவிர பாக்கிக் குழந்தைகள் எல்லாம் இப்போது போகலாம்!'' என்றாள்.

''டாம்! ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் நான் இங்கு வருவேன். குழந்தைகளைக் கடுமையாக நடத்து பவர்களை அழைத்து அவர்களையும் அதே மாதிரி நடத்துவேன். நீ இப்போது வேடிக்கை பார்க்கலாம்'' என்று தேவதை கூறினாள்.

குழந்தைகளுக்குஅளவுக்குமேல் அதிக மாக மருந்து கொடுத்த மருத்துவர் களை முதலில் கூப்பிட்டாள். அவர் களுக்கும் அது போலக் கசப்பு மருந்து களைக் கொடுத்து விழுங்கச் செய்தாள்.

குழந்தைகளுக்கு இறுக்கமான ஆடை களையும் காலணிகளையும்— அணிவித்த அம்மாக்களை அழைத்தாள். அவர்கள் பாதங்களிலும் இறுக்கமான காலணி களைப் போட்டு நடனம் ஆடச் செய் தாள்.

கவனக் குறைவாக வேலை செய்யும் ஆயாக்களை அழைத்தாள். அவர்கள் உடம்பில் ஊசிகளைக் குத்தினாள்.

இரக்கம் இல்லாத பள்ளி ஆசிரி யர்களை வரவழைத்தாள். அவர்களு டைய காதைத் திருகினாள். தலையில் குட்டினாள். பிரம்பால் அடித்தாள்.

டாமுக்கு ஒரு சந்தேகம் வந்தது. ''சிறுவர்களைக் கொடுமைப் படுத்தும் கெட்ட எஜமானர்களை நீங்கள் தண் டிப்பதில்லையா?'' என்று கேட்டான்.

''எனக்கு ஒரு அழகான தங்கை இருக்கிறாள். உலகத்தில் உள்ள நல்ல மனிதர்கள் மூலம் அவள் செயல்படு கிறாள். நீ சொன்ன கெட்ட எஜ மானர்களைத் திருத்த அவள் நட வடிக்கை எடுப்பாள்.'' என்றாள்.

''அவளை நான் பார்க்க முடியுமா?'' டாம் கேட்டான்.



''ஞாயிற்றுக் கிழமைகளில் அவள் இங்கு வருவாள். நல்ல பிள்ளையாக இரு. அவள் உனக்குப் பரிசுகள் தரு வாள்'' என்று சொல்லித் தேவதை மறைந்தாள்.

டாம் பிராணிகளைத் துன்புறுத்து வதை விட்டு விட்டான். நல்லவனாக மாறினான்.

ஞாயிற்றுக்கிழமை வந்தது. தேவதை தோன்றினாள். அன்பும் அழகும் நிறைந்து ஆனந்தமாகக் காணப் பட்டாள். தண்ணீர்க் குழந்தைகள் அவளைச் சூழ்ந்து கொண்டன.

''நீ யார்?'' என்று டாம் கேட்டான்.

''ஓ, நீதான் புதுக் குழந்தையா? நான் உனக்கு அம்மா!'' என்று சொல்லி அன்போடு அணைத்தாள். டாம் அவள் மடியிலேயே உறங்கினான்.


டாம் சந்தோஷமாக இருந்தான். அந்த இனிய தேவதை அவனுக்கு எல்லா வசதிகளையும் செய்தாள். நிறை யத் தின்பண்டங்களை அளித்தாள்.

அவனுக்குக் கடல் குச்சி மிட்டாய் என்றால் கொள்ளை ஆசை. அவற்றை மேலும் மேலும் விரும்பிச் சாப்பிட் டான். தேவதை அதை எங்கே வைக் கிறாள் என்று தேடினான். ஒரு பெரிய முத்துச் சிப்பியில் வைத்து மூடி, பாறை யின் பிளவில் அவள் வைத்திருந்தாள். இரவில் மற்ற குழந்தைகள் தூங்கிய பின் அந்த முத்துச் சிப்பி இருக்கும் இடத்திற்கு ரகசியமாகப் போனான்.

''எங்கே உன் அருமைப் பெண்ணை நெடு நேரமா காணோமே!''

''நீங்கதானே அவளுக்கு ரோஹி ணின்னு பேர் வச்சீங்க, அதான் சதா சுத்திக்கிட்டேயிருக்காள்''.

-பெருமழை தமிழ்ச் செல்வன்



சிப்பியைத் திறந்தான். அவனுக்குப் பிடித்த இனிப்புகள் ஏராளமாக இருந்தன. டாமுக்குச் சந்தோஷம் ஒரு பக்கம்; பயம் ஒரு பக்கம்.

ஒரு இனிப்பை எடுத்து வாயில் போட் டுக்கொண்டான். சுவையாக இருந் தது. அந்தச் சிப்பியில் இருந்த எல்லா மிட்டாய்களையும் ஒவ்வொன்றாக எடுத் துத் தின்று தீர்த்தான். அவனுக்கு வயிற்றை வலித்தது. தேவதை சிரித்துக் கொண்டே அவனைப் பார்த்துக் கொண் டிருந்தாள். ஒன்றும் சொல்லவில்லை. ஆனால், டாம் அவளைப் பார்க்கவே இல்லை.

மறுநாள் மற்ற குழந்தைகளோடு டாமும் தேவதையிடம் போனான். அவள் டாமை ஒன்றும் கேட்கவில்லை. ஆகவே, தான் இனிப்புகளைத் திருடிய விஷயம் அவளுக்குத் தெரியாது என்று நினைத்தான். தேவதை எல்லோருக்கும் இனிப்புகளை வழங்கினாள். டாமும் தன் பங்கை வாங்கி வாயில் போட்டுக் கொண்டான்.

இனிப்பு கசந்தது! தலை சுற்றியது. வாந்தி வந்தது. அவன் நோயால் படுத்தான். உடம்பெல்லாம் முள்ளு முள்ளாக வேர்க்குரு முளைத்தது. ஆகை யால் தேவதை அவனை ஆசையோடு அணைக்கவில்லை. நண்பர்கள் அவனுடன் விளையாட வரவில்லை.

அடுத்த ஞாயிற்றுக் கிழமை தேவதை வழக்கம் போலக் குழந்தைகளுக்கு இனிப்புக் கொடுத்தாள். எல்லோரும் ஆவலாக வாங்கிச் சாப்பிட்டனர். டாமுக்கு உடம்பின் வேதனையும், உள்ளத்தின் வேதனையும் பொறுக்க முடியவில்லை. இனிப்பை வாங்கினான். அதைக் கண்டாலே எரிச்சல் வந்தது. அதை வீசி எறிந்து, 'ஓ'வென அழு தான். தேவதையிடம் உண்மையைச் சொல்லித் தன் திருட்டை ஒப்புக் கொண்டான்.

அவள் கோபிக்கவில்லை. ''நீ உண் மையைச் சொன்னதால், உன்னை மன் னித்து விட்டேன்'' என்றாள்.

''வேர்க்குரு குணமாகி எனக்கு உடம்பு சரியாக வேண்டும்'' என்றான் டாம்.

''நீ பள்ளிக்கூடம் போனால்தான் உடம்பு சரியாகும். ஆசிரியர் உனக்கு உதவி செய்வார்'' என்றாள் தேவதை.

தேவதை ஓர் அழகான சிறுமியை அழைத்து வந்தாள். திங்கள் முதல் சனி வரை சிறுமி அவனுக்குப் பல பிரார்த்தனைகளைக் கற்பித்தாள். ஞாயிற்

றுக் கிழமை அவள் வரவில்லை. டாம் விரைவில் குணம் அடைந்தான்.

''இப்பொழுதுதான் உன்னைத் தெரிகிறது. எங்கள் வீட்டில் புகைபோக்கிகளைத் துடைக்க வந்தவன் நீதானே?'' என்று சிறுமி கேட்டாள். டாமுக்கும் சிறுமியை அடையாளம் தெரிந்தது. எல்லியும், டாமும் தங்கள் கதைகளைப் பரிமாறிக் கொண்டனர். பிறகு பாடம் தொடர்ந்தது.

ஃ ஃ ஃ

ஏழு ஆண்டுகள் கழிந்தன. வழக்கம் போல டாமின் பாடங்கள் தொடர்ந்தன. ஒரு நாள் எல்லியிடம் ''ஞாயிற்றுக்கிழமைகளில் நீ எங்கே போகிறாய்?'' என்று கேட்டான்.

'' 'அழகிய தீவு'க்குப் போகிறேன்'' என்றாள்.

''நானும் உன்னோடு வரலாமா?''— டாம் கேட்டான்.

''தேவதை அனுமதித்தால் வரலாம்'' என்றாள் எல்லி. டாம் தேவதையிடம் அனுமதி கேட்டான்.

''தான் போக விரும்பாத இடத்திற்கு முதலில் ஒருவன் போக வேண்டும். விருப்பம் இல்லாத காரியத்தைச் செய்ய வேண்டும். மனத்திற்குப் பிடிக்காத ஒருவருக்கு உதவ வேண்டும். பிறகுதான் அந்த 'அழகிய தீவு'க்குப் போகலாம்'' என்றாள் தேவதை.

பழைய எஜமானரான கிரைம்சை டாமுக்குப் பிடிக்கவில்லை. அவரைப் பார்த்தால் பழைய வேலையை மறுபடியும் தனக்குக் கொடுப்பாரோ எனப் பயந்தான்.

''அவர் அப்படிச் செய்ய மாட்டார்'' என்று எல்லி நிச்சயமாகச் சொன்னாள்.

''நீ இப்போது வளர்ந்து விட்டாய். உலகத்தைச் சுற்றிப் பார்க்க வேண்டும்'' என்று தேவதை அன்போடு சொன்னாள். டாம் பயணத்திற்குத் தயாரானான்.

''டாம்! நீ கிரைம்சைப் பார்க்க-வேண்டுமானால் வட எல்லைக்குப் போக வேண்டும். அங்கே ஒரு வெள்ளிச் சுவரும், ஒரு வெள்ளைக் கதவும் இருக்கும். அவற்றைக் கடந்தால் அமைதிக் கடல் வரும். அதில் பிரபஞ்ச அன்னை கொலுவிருப்பாள். அவளைக் கேட்டால், கிரைம்ஸ் இருக்கும் இடத்தைத் தெரிவிப்பாள்'' என்று தேவதை கூறினாள்.

வெள்ளிச் சுவருக்கு வழி கேட்டுக்கொண்டே டாம் நீந்தினான். எதிரில் வந்த பிராணிகளிடம் விசாரித்தான். அவைகளுக்குத்தெரியவில்லை. தொடர்ந்தான். சிறிது தூரம் போனதும், கடற் பறவைகள் கூட்டமாக வந்தன. அவற்றைக் கேட்டான்.

''எங்களோடு வந்தால் வழி காட்டுவோம்'' என்றன. டாம் பறவைகளின் பின்னால் நீந்தினான். களைப்பு மேலிட்டது. ஒரு பறவை இரக்கப்பட்டு அவனைத் தன் முதுகில் ஏற்றிக் கொண்டது. அவர்கள் ஒரு பனிக் கட்டியில் இறங்கினர்.

சுற்றிலும் பெரிய பெரிய பனிக் கட்டிகள் மிதந்தன. மெல்லிய பனித் திரை மூடியிருந்தது. பின்னால் வெள்ளிச் சுவர் மின்னியது.

''வெள்ளைக் கதவு எங்கே?'' என்று கேட்டான்.

''பனிக்கட்டிகளுக்கு அடியில் போக வேண்டும்'' என்று சொல்லிப்பறவைகள் அவனை வாழ்த்தி விடை பெற்றன.

டாம் பனிக் கட்டிகளுக்கு அடியில் குதித்தான். நல்ல இருட்டு. ஏழு நாட்கள் நீந்தினான். அமைதிக் கடலை அடைந்தான்.



என்ன ரொட்டி?

ஆரிய சமாஜை உருவாக்கிய சுவாமி தயானந்தர், தீண்டாமையை வெறுக்கும் தீவிரவாதி. ஒரு தடவை சவரத் தொழிலாளியொருவர் ரொட்டியொன்றை சுவாமிஜியிடம் கொடுத்தார். சுவாமி அதை வாங்கிச் சாப்பிட்டார். இதைக் கண்டு பக்கத்திலிருந்தவர், ''நீங்கள் சவரத் தொழிலாளியின் ரொட்டியையா சாப்பிடுகிறீர்கள்?'' என வினவினர். அதற்கு சுவாமி, 'இல்லவே இல்லை. கோதுமை மாவாலான ரொட்டியை அல்லவா சாப்பிடுகிறேன்!' என்று பதில் கூறிவிட்டார்.


ரீடர்ஸ் டைஜஸ்ட் —செப்டம்பர் 77-லிருந்து

—ஜி. முருகவேள்

பெரிய நீர் நிலை. குளிர்ந்த நீர். மிதக்கும் பனிக் கட்டிகள். அமைதியான காற்று. தொடு வானில் நாலா புறமும் பனிச் சிகரங்கள். நீரில் ஏராளமான திமிங்கிலங்கள். ஒரு திமிங்கலத்திடம் பிரபஞ்ச அன்னையைப் பற்றி விசாரித்தான். ''கடலின் மையத்தில் பார்!'' என்றது. பார்த்தான். பெரிய பனிக் கட்டி தெரிந்தது. அருகில் சென்றான்.

அந்தப் பனிக்கட்டி ஒரு பளிங்குத் தேவதையாக மாறியது. அவள் ஒரு

★★★★★★★★★★★★★★★★★



பிறந்த நாளில்

"வரப்போகிற என் பிறந்த நாளிலே பள்ளிக்கூடம், கோர்ட், தொழிற்சாலை, கடைகள் எல்லாம் லீவு விடப் போறாங்க''

''போடா உன் பிறந்த நாளுக்கு யார் லீவு விடுவாங்க?

''நிச்சயம் விடுவாங்க. அன்னிக்கு ஞாயிற்றுக்கிழமைடா!''

—வேட்டைநல்லூர் சொ. ராஜா

★★★★★★★★★★★★★★★★★

பளிங்குச் சிம்மாசனத்தில் வீற்றிருந்தாள். பழைய பிராணிகளுக்குப் புதிய வடிவம் அளிக்கும் பணியில் சுறுசுறுப்பாக இருந்தாள். அவளுடைய சிம்மாசனத்தின் கால்களிலிருந்து புதிய புதிய பிராணிகள் வெளிப்பட்டு நீந்திச் சென்றன.

டாம் பிரபஞ்ச அன்னையை அணுகித் தன் கதையைச் சொன்னான். வட எல்லைக்கு வழி கேட்டான். அன்னை ஒரு நீர் நாயை அனுப்பி அதைப் பின் தொடருமாறு பணித்தாள்.

டாம் நாயைத் தொடர்ந்தான். வழியில் புதிய நாடுகளையும் விநோத நிகழ்ச்சிகளையும் கண்டான்.

அறிவைக் கெடுக்கும் புத்தகங்களை எல்லாம் திரட்டி ஒரு தீவில் மலை போலக் குவித்திருந்தனர். மக்கள் அவற்றைக் குழந்தைகளுக்கு விற்று நல்ல லாபம் சம்பாதித்தனராம்!

குழந்தைகள் சாப்பிட்டால் உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் விஷப் பழங்களை யெல்லாம் பறித்து இன்னொரு தீவில் குவித்திருந்தனர். குழந்தைகள் கண்ணில் படாதவாறு தேவதைகள் அவைகளைக் குகைகளில் மறைத்து வைத்திருந்தனர்.

அடுத்த தீவு விசித்திரமாக இருந்தது. மாடுகளை ஏர் இழுத்தது. சுத்தியை ஆணி அடித்தது. சிறுவர்களைப் பறவைக் கூடுகள் தூக்கிச் சென்றன. எல்லாம் தலை கீழாக இருந்தன.

நாயும் டாமும் பல நாடுகளைக் கடந்தனர். கடைசியில் ஒரு பழைய மாளிகையைச் சுட்டிக் காட்டி நாய் விடை பெற்றது.

மாளிகையிலிருந்து சிலர் ஓடி வந்தனர். டாமை விசாரித்தனர். டாம் உற்றுப் பார்த்தான். அவைகளுக்குக் காலும் இல்லை, கையும் இல்லை. அவை மனிதர்களே இல்லை. அவை காவல்காரனின் கைத்தடிகள்.

''உனக்கு என்ன வேண்டும்?'' என்று டாமை ஒரு குறுந்தடி கேட்டது

''கிரைம்சைப் பார்க்க வேண்டும்'' என்றான். பிறகு,

''நீங்கள் ஏன் தனியாக இருக்கிறீர்கள்? காவல்காரர்கள் உங்களை உபயோகிப்பதில்லையா?'' என்று கேட்டான்.

''உங்கள் ஊரில் உள்ளவற்றைப்போல நாங்கள் வெறும் குறுந்தடிகள் அல்ல. எங்கள் வேலைகளை யெல்லாம் நாங்களே செய்கிறோம்'' என்றது குறுந்தடி.

அது டாமை ஒரு சிறைச் சாலைக்கு அழைத்துச் சென்றது. ஒரு பழைய துப்பாக்கி அங்கு காவல்காரனாக இருந்தது.

''கிரைம்ஸைப் பார்க்க வேண்டும்'' என்றான் டாம்.

''கிரைம்ஸா? புகை போக்கி எண் 345ல் இருக்கிறார்'' என்றது துப்பாக்கி.

345 ஆம் எண்ணுக்குக் குறுந்தடி டாமை அழைத்துச் சென்றது. கழுத்தும், தலையும் மட்டும் வெளியே தெரியும்படி அந்தப் புகை போக்கியில்

கிரைம்ஸை அடைத்து வைத்திருந்தனர். கிரைம்ஸின் நிலைமைக்கு டாம் இரங்கினான். அவரை விடுவிக்க எல்லா உதவிகளையும் செய்ய முன்வந்தான்.

''இங்கு எல்லோரும் தனக்குத் தானே உதவி செய்து கொள்ள வேண்டும். பிறர் கையை எதிர்பார்க்கக் கூடாது'' என்று குறுந்தடி கூறியது.

''இங்கு வரவேண்டும் என்று நான் கேட்டேனா? இந்தப் புகை போக்கியைச் சுத்தம் செய்கிறேன் என்று சொன்னேனா? என்னைச் சிறையில் அடையுங்கள் என்று கூறினேனா? ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?'' என்று கிரைம்ஸ் கோபமாகக் கேட்டார்.

''நீ டாமைக் கொடுமைப் படுத்திய போது, அவனா அப்படிக் கொடுமைப் படுத்தச் சொன்னான்? நீயாகத்தானே அப்படிச் செய்தாய்?'' என்று கணீரென ஒரு குரல் ஒலித்தது. பச்சைக் கண்ணாடித் தேவதை திடீரென அங்கு தோன்றினாள். குறுந்தடியும், டாமும் அவளை வணங்கினர். கிரைம்ஸ் தம் தவற்றை உணர்ந்தார். கண்ணீர் சிந்தினார்.

கிரைம்ஸின் கண்ணீர் அவருடைய முகத்தில் இருந்த புகையைக் கரைத்தது. உடையிலும் உள்ளத்திலும் இருந்த அழுக்குகளையும் கரைத்தது. புகை போக்கியும் சிறிது சிறிதாகக் கரைந்து போயிற்று. கிரைம்ஸ் சந்தோஷமாக வெளியே வந்தார்.

''இப்போது நீ போகலாம். மறுபடியும் என் பேச்சைக் கேட்காவிட்டால் இதை விட மோசமான இடத்திற்குப் போவாய்'' என்று கிரைம்ஸை எச்சரித்தாள்.

''நான் உங்களைப் பார்த்ததும் இல்லை. உங்கள் பேச்சை மீறியதும் இல்லையே!'' என்றார் கிரைம்ஸ் ஆச்சரியத்தோடு.

''அன்றைக்கு நீங்கள் ஆர்த்தோவர் மாளிகைக்குப் போகும்போது எதிரில் மூதாட்டியாக வந்தேன். எனக்கு வெள்ளிக் கிழமை ஒரு வடிவம், ஞாயிற்றுக் கிழமை ஒரு வடிவம். வட எல்லையில் நான்தான் பிரபஞ்ச அன்னை. இப்படிப் பல இடங்களிலும் பல உருவங்களிலும் என்னைக் காணலாம். நான் கெட்டவர்களுக்குத் தண்டனை கொடுப்பேன். நல்லவர்களுக்குப் பாராட்டு வழங்குவேன்'' என்றாள் தேவதை.

கிரைம்ஸைச்சுட்டிக்காட்டி, ''இவரை விடுவியுங்கள்'' என்று குறுந்தடிகளுக்கு உத்தரவிட்டாள்.

ஃ ஃ ஃ

தேவதை டாமின் கண்களைக் கட்டி, அவனை ''அழகிய தீவுக்கு'' அழைத்துப் போனாள். அங்கே எல்லி இருந்தாள். அவளைப் பார்த்து, ''டாம் சோதனையில் வென்றுவிட்டான். அவன் தனக்குப் பிடிக்காத மனிதருக்கும் உதவி செய்தான். ஆகவே இனி அவனை உன் வீட்டுக்கு அழைத்துப் போகலாம். இருவரும் சந்தோஷமாக இருங்கள்'' என்று வாழ்த்தி அனுப்பினாள்.

Charles Kingsley ஆங்கிலத்தில் எழுதிய The Water Babies என்ற கதை மேலே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது.



வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டி

அழகன்: டேய் எழிலா, நம்ம ஊர்க்கருமி கந்தசாமி வாயைக்கட்டி வயிற்றைக்கட்டிச் சேர்த்துவைத்திருந்தாரே, அவ்வளவு பணத்தையும்...


எழிலன்: அவ்வளவு பணத்தையும்... என்னடா ஆச்சு?

அழகன்: யாரோ எடுத்துக் கொண்டு அவர் வாயையும், வயிற்றையும் கட்டிப் போட்டுவிட்டுப் போய்விட்டார்களாம்.

—மு. கா. தமிழ்ச்செல்வன்

விந்தை உலகம்

'க்ளோசி இபிஸ்' என்னும் பெயருடைய பறவை இனம் ஒன்று அமெரிக்காவில் உள்ளது. இப்பறவையின் சிறகுகள் பொன்னிறமாகவும் உலோகம் போன்று கடினமாகவும் - பளபளப்-பாகவும் இருக்கிறது. அதனால் இப்பறவை 'தங்க நிறத் தேவதை' என்று செல்லமாக அழைக்கப்படுகிறது.






ஆஸ்திரேலியாவில் உள்ள நகரம் 'ஸ்டயினின்' இந்த நகரத்தின் மேய-ராக இருந்தவரின் தாடிதான் உலகிலேயே நீளமான தாடி. தாடியின் நீளம் 8 அடி 9 அங்குலம். இவருடைய இந்த தாடியை இன்றும் ஆஸ்திரேலியாவில் உள்ள 'புத்ரு' நகரக் காட்சி சாலையில் காணலாம்.

கடல் நண்டுகளை நாம் சாதாரணமாகத்தான் நினைக்கிறோம். ஆனால் கடல் நண்டுகள் தன் எடையைப் போல் முப்பது மடங்கு எடையைத் தூக்கும் ஆற்றல் உண்டு என்கிறார்கள் உயிரின ஆராய்ச்சியாளர்கள்.




ஆப்பிரிக்காவில் 'கிம்பாபோ' என்று சிறு பழங்குடி இனத்த-வர்கள் இருக்கிறார்கள். இவர்களில் ஆண்களும் - பெண்களும் தங்கள் தலை-முடியை - தலையில் சிறு தொப்பி இருப்பது போல வெட்டி கொள்கிறார்கள்.



செந்தமிழ்ச்செல்வன்

கேள்வி நேரம் ?!



கேள்வி கேட்பவர்:

திலகவதி

பங்குகொள்வோர்:

ரங்கநாதன்
கவிதா
ராமச்சந்திரன்
அமுதா

(கவிமணி மன்றக் குழந்தைகள், முத்துராமலிங்கபுரம், இராமநாதபுரம் மாவட்டம்.)

வேடிக்கை பார்க்கும் குழந்தை:

புனிதா

திலகவதி: மதுரை மாவட்டக் கலெக்டரின் அலுவலகம் மதுரையில் இருக்கிறது. இராமநாதபுர மாவட்டக் கலெக்டரின் அலுவலகம் எங்கே இருக்கிறது?

அமுதா: இராமநாதபுரத்தில்.

ராமச்சந்திரன்: இல்லை, இல்லை. அதுவும் மதுரையில்தான் இருக்கிறது.

திலக: ராமச்சந்திரன் சொன்னது தான் சரி.... சில பறவைகளால் பறக்க முடியாது. ஆனாலும், வேகமாக ஓடும். பறக்க முடியாமலும், வேகமாக ஓட முடியாமலும் உள்ளது ஒரு பறவை. அதன் பெயர் தெரியுமா?

கவிதா: நெருப்புக் கோழி.

திலக: இல்லை. நல்ல குளிர்ப் பிரதேசத்தில் அது வசிக்கிறது. சென்ற இதழ் கோகுலத்தில் கூட அதைப் பற்றி வந்திருக்கிறதே...

ரங்கநாதன்: தெரியும், தெரியும். அதன் பெயர் பெங்குவின்.

திலக: கரெக்ட். இப்போது நம் தேசத்தின் தலைநகராக டில்லி இருக்கிறது. இதற்கு முன்பு வேறொரு நகரம், நம் தேசத் தலைநகராக இருந்தது. அது எந்த நகரம்?

அமுதா: கல்கத்தா.

திலக: அடே! அமுதா சரியாகச் சொல்லி விட்டாளே! சரி... கிரேட் பிரிட்டன் என்கிறார்களே, அப்படியென்றால் என்ன என்று தெரியுமா?

கவிதா: இங்கிலாந்தைத்தான் கிரேட் பிரிட்டன் என்கிறோம்.

திலக: கவிதா, நீ சொன்னதில் மூன்றில் ஒரு பங்கு சரி. அதாவது இங்கிலாந்து கிரேட் பிரிட்டனில் ஒரு பகுதி. மற்றும் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. அவை என்ன? என்ன?

ராமச்சந்திரன்: ஸ்காட்லாந்து... இன்னொன்று...ம்...ம்... வேல்ஸ்.

திலக: ரொம்பக் கரெக்ட். இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, வேல்ஸ் என்ற மூன்று பகுதிகளும் சேர்ந்ததுதான் கிரேட் பிரிட்டன்... தினமும் காலையில் எழுந்ததும் நாம் காப்பி சாப்பிடுகிறோம். இந்தக் காப்பி மிக அதிகமாக விளையக்கூடிய நாடு எது?

கவிதா: பிரேசில் நாடு.

திலக: ஆம், தென் அமெரிக்காவில் உள்ள பிரேசில் நாட்டில்தான் அதிகமாகக் காப்பி விளைகிறது... நேரு மாமாவை ஆங்கிலேயர்கள் எத்தனை தடவை சிறையில் அடைத்தார்கள், தெரியுமா?

ரங்கநாதன்: ஒன்பது தடவைகள்.

திலக: சரியான விடை. நம் தேச விடுதலைக்காக நேரு மாமா சுமார் 13 ஆண்டுகள் சிறையில் இருந்தார். ஒரு முறை அவர் நீண்ட காலம்—அதாவது 1045 நாட்கள் சேர்ந்தாற்போல் சிறைவாசம் செய்தார்!

கவிதா: அடேயப்பா! கிட்டத்தட்ட மூணு வருஷம்.

திலக: ஆமாம். 3 வருஷத்துக்கு 50 நாட்கள்தான் குறைவு.... 'நாலடியார்' என்கிறார்களே, அப்படி என்றால் என்ன?

அமுதா: அது ஒரு புத்தகம். நாலு நாலு அடிகளில் பாட்டு இருக்கும்.

திலக: அமுதா ஓரளவு சரியாகச் சொன்னாள். நான் இன்னும் சற்று தெளிவாகச் சொல்லுகிறேன். நான்கு அடிகளைக் கொண்ட வெண்பாக்களால் ஆன நூல் நாலடியார். அதில் 400 பாடல்கள் இருக்கின்றன. 'நாலடி' என்று பெயர் வைத்திருக்கலாம். ஆனாலும், அந்த நூலுக்குச் சிறப்புக் கொடுப்பதற்காக 'ஆர்' என்று கடைசியில் சேர்த்து 'நாலடியார்' என்கின்றனர்... 'சாந்தி நிகேதனம்' என்ற பெயரைக் கேள்விப் பட்டிருப்பீர்கள். மேற்கு வங்காளத்தில் இருக்கிறது. அதை ஏற்படுத்தியவர் யார்?

ராமச்சந்திரன்: ரவீந்திரநாத தாகூர்.

திலக: இல்லை. அமுதா, கவிதா, ரங்கநாதா, உங்களுக்குத் தெரியுமா?

மூவரும்: (மௌனம்)

திலக: சரி, நானே சொல்கிறேன். ரவீந்திர நாத தாகூரின் அப்பா தேவேந்திரநாத தாகூர்தான் அதை ஏற்படுத்தினார். அவர் அதை ஓர் ஆசிரமமாகத்தான் அமைத்தார். 1901-ல், அதாவது 38 ஆண்டுகளுக்குப் பிறகு, ரவீந்திரநாத தாகூர் அங்கு ஒரு கல்வி நிலையம் அமைத்தார். அது இன்று உலகப் புகழ் பெற்று விளங்குகிறது... மோகினி ஆட்டம் பார்த்திருக்கிறீர்களா? அது எந்த நாட்டு நடனம்?

கவிதா: பார்த்ததில்லை. கேள்விப் பட்டிருக்கிறோம். அது கேரளநாட்டு நடனம்.

திலக: சரியாகச் சொன்னாய். மோகினி ஆட்டம், கதகளி இரண்டும் கேரள நாட்டு நடனங்கள்... தேக்கு மரத்தால் வீடு கட்ட வேண்டும் என்று பலரும் விரும்புகிறார்களே, காரணம் தெரியுமா?

ரங்கநாதன்: தேக்கு மரம் ரொம்ப நாள் உறுதியாக இருக்கும். செல் அரிக்காது; உளுத்துப் போகாது.

திலக: உண்மைதான். சில கோயில்களில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு செய்த வாகனங்கள், போட்ட கதவுகள், உத்தரங்களெல்லாம் இன்னமும் நல்ல நிலையில் இருக்கின்றன. சரி, வெட்டுக் கிளிக்கு எத்தனை கால்கள்? சட்டென்று சொல்ல முடியுமா?

ராமச்சந்திரன்: ஆறு கால்கள்.

திலக: ரொம்பக் கரெக்ட். ஆனால் அந்த ஆறு கால்களும் மூன்று விதமாக இருக்கும். அதன் உடலின் முன் பாகத்தில் உள்ள இரண்டு கால்களும் சிறியவை. நடுப் பாகத்தில் உள்ள இரண்டும் சற்று நீளமானவை. உடலின் பின் பக்கத்தில் உள்ள இரண்டும் நீளமாகவும் பெரிதாகவும் இருக்கும்.... ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு விளையாட்டு மூலமே, எல்லாவற்றையும் கற்றுக் கொடுக்க வேண்டும் என்ற கல்வி முறையை முதலில் வகுத்தவர் ஒரு பெண் மணி. அவர் பெயர் என்ன? அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

அமுதா: மாண்டிசோரி அம்மையார். இங்கிலாந்தைச் சேர்ந்தவர்.

திலக: முதல் விடை சரிதான். இரண்டாவது விடை தவறு.

கவிதா: இங்கிலாந்து இல்லை; இத்தாலி.

திலக: கரெக்ட். இத்தாலி நாட்டைச் சேர்ந்த மாண்டிசோரி அம்மையார்-தான் அந்தக் கல்வி முறையை வகுத்தவர். அதனால்தான் அப்படிக் கற்றுக் கொடுக்கப்படும் பள்ளிகளை 'மாண்டிசோரி பள்ளி' என்கிறார்கள். பழனிக்குப் போயிருப்பீர்களே, அங்கு மலை ஏற எத்தனை படிகளைக் கடக்க வேண்டும்?

அமுதா: பழனிக்குப் போயிருக்கிறேன். ஆனால், படிகளை எண்ணிப் பார்க்கவில்லை.

கவிதா: 500 படிகள்.

ரங்கநாதன்: இல்லை. 600 படிகள்.


திலக: என்ன, ராமச்சந்திரா, உன் விடை என்ன? எழுநூறு?

ராமச்: தெரியவில்லை. நீங்களே கூறி விடுங்கள்.

திலக: 748 படிகள். படி வழியாக ஏற முடியாதவர்களுக்காக ஓர் ஏற்பாடு செய்திருக்கிறார்களே, அது என்ன?

ரங்கநாதன்: மின்சாரத் தொட்டில்.

திலக: ஆம், விஞ்ச் (Winch) என்று அதை ஆங்கிலத்தில் சொல்கிறார்கள்.



இதோ இருக்கிறதே, இது ஒரு தேசத்தின் கொடி. எந்த நாட்டுக் கொடி என்று கூற முடியுமா?

கவிதா: பாக்கிஸ்தான் கொடி.

திலக: இல்லை. பாக்கிஸ்தான் கொடியிலே பிறைச் சந்திரனும் ஒரு நட்சத்திரமும் இருக்கும். ஆனால்,இதிலே நடுவிலே ஒரு பெரிய நட்சத்திரமும் அதைச் சுற்றி ஐந்து சிறிய நட்சத்திரங்களும் இருக்கின்றனவே!

அமுதா: இலங்கை தேசக் கொடியாக இருக்கும்.

திலக: அதுவும் இல்லை. இலங்கைக் கொடியில் சிங்கம் இருக்கும்.

ரங்கநாதன்: பர்மா தேசக் கொடி.

திலக: ரங்கநாதன் சரியாகச் சொல்லி விட்டான். நான் இப்போது ஒரு பாட்டிலே நாலு வரிகளைச் சொல்லப் போகிறேன்.:

சின்னச் சின்ன எறும்பே,
சிங்காரச் சிற்றெறும்பே,
உன்னைப் போல நானுமே
உழைத்திடவே வேணுமே.

இதைப் பாடியவர் யார்?

கவிதா: கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை.

அமுதா: எனக்குத் தெரியும். சரியான விடை. 'முத்துக் குவியல்'னு ஒரு புத்தகம். அதிலே பல கவிஞர்களுடைய குழந்தைப் பாடல்களையெல்லாம் போன மாதம் தான் படித்தேன். அதிலே இந்தப் பாட்டும் இருக்கிறது. இதை எழுதியவர் நமச்சிவாய முதலியார்.

திலக: சரியாகச் சொன்னாய். கா. நமச்சிவாய முதலியார் பெரிய தமிழறிஞர். பல புத்தகங்களை எழுதியிருக்கிறார். தமிழ்ப் புலவர்களுக்கு மிகவும் ஆதரவு தந்தவர். முதல் வகுப்பிலிருந்து ஒன்பதாம் வகுப்பு வரை தமிழ்ப் பாடப் புத்தகங்களை எழுதினார். அந்தப் பாடப் புத்தகங்களில் உள்ள ஒரு பாட்டுத்தான் 'சின்னச் சின்ன எறும்பே 'என்ற பாட்டு. சரி, நமது தமிழக அறநிலையத் துறை அமைச்சர் பெயர் தெரியுமா?

நால்வரும்: தெரியும். ஆர். எம். வீரப்பன்.

திலக: அடடே, எல்லாரும் சேர்ந்து சரியாகச் சொல்லி விட்டீர்களே! சமீபத்தில் நடந்த உலகக் கோப்பை கிரிக்கெட் பந்தயத்தில் நம் இந்தியாவுக்கு வெற்றி கிடைத்தது உங்களுக்கெல்லாம் தெரியும். நம் கிரிக்கெட் அணியின் காப்டன் பெயர் என்ன?

ராமச்சந்திரன்: கபில்தேவ்.

திலக: கரெக்ட். கடைசியாக ஒரு கேள்வி. எனக்குத் தெரிந்த ஒருவர் வீட்டுக்கு ஒருநாள் சென்றிருந்தேன். அந்த வீட்டுத் தாத்தா அங்கிருந்த ஒரு புலித்தோலைக்காட்டி,''என்முன்னோர்களில் ஒருவர் வேட்டையாடுவதில் மிகவும் கெட்டிக்காரராக இருந்தார். அவர் 600 வருஷங்களுக்கு முன்பு துப்பாக்கியால் சுட்டுக் கொன்ற புலியின் தோல்தான் இது!'' என்றார். என்னால் அவர் சொன்னதை நம்ப முடியவில்லை. அதற்கு என்ன காரணம் என்று உங்களுக்குத் தெரியுமா?

கவிதா: எனக்குத் தெரியும். அந்தப் புலித் தோலில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்த ஓட்டை இருந்திருக்காது.

அமுதா: 600 வருஷத்துக்கு முன்னாலே நம் நாட்டுக்காரர்களுக்குத் துப்பாக்கியால் சுடவா தெரிந்திருக்கும்?

திலக: அதெல்லாம் காரணம் இல்லை. நானே சொல்லி விடுகிறேன். வேட்டைத் துப்பாக்கியைக் கண்டு பிடித்ததே 1520ஆம் ஆண்டிலேதான்.

ராமச்சந்திரன்: அப்படியானால் இன்னும் 500 ஆண்டுகள் கூட ஆகவில்லையே! அவர் எப்படி 600 ஆண்டுகளுக்கு முன்பு துப்பாக்கியால் சுட்டிருக்க முடியும்?


மற்றவர்கள்: ஆமாம், எப்படி முடியும்? (சிரிக்கிறார்கள்).


வெற்றிவேல் வீரவேல்
கதை: சுகிசிவம் 7 படம்: விநு
சூரபதுமன் தேவர்களைக் கொடுமைப் படுத்தினான். தேவர்களுக்கு ஏன் இத்தனை துன்பம்? சிவபெருமானை நீக்கினர். அவமானம் செய்ய தட்சன் செய்த யாகத்தில் தேவர்கள் சுயநலத்துடன் பங்கேற்றனர். சிவநிந்தனை செய்த பாவத்தை இன்று அனுபவிக்கின்றனர். இந்த உண்மையைக் கேளத் தேவகுரு, முருகன் முன்பு விளக்கினார்.
பெருமானே! துன்பம் தாளாத தேவர்கள் அமிர்தம் உண்டகாரணத்தால் சாகவும் முடியவில்லை
ஒரு காலத்தில் அமிர்தம் இன்பமாக இருந்தது. அதுவே இன்று துன்பமாகி விட்டது.
தேவர்கள் குறை தீர சிவபெருமானை வேண்டித் தங்களைத் தலைவராகப் பெற்றோம். இனி சூரனைக் கொல்ல படை எடுக்க வேண்டியதுதான். பிரபோ!
ம்... தூது அனுப்ப வேண்டுமே! சொல்லியும் கேட்கவில்லை என்றால் தானே தண்டனை! யாரை அனுப்புவது? பிரம்மனை...!
ஐயோ! நானா? தூது போனால் சிறையில் அடைபடாமல் யார் திரும்பி வருவார்கள், அவர்களை அனுப்பிவிடுங்கள் சுவாமி.
வீரபாகு! நீ புறப்படு.
என்ன பாக்கியம்!
தேவர்களுக்கு இழைக்கும் கொடுமையை நிறுத்தச் சொல். சிறையிலிருக்கும் தேவர்களை விடச்சொல்- விருப்பம் இல்லையேல் ஆவியை விடச்சொல்.
உத்தரவு சுவாமி!


வீரபாகுத் தேவர் கடலைக் கடந்து வீரமகேந்திரம் சென்றார். சூரபதுமனது நகரின் வளம் கண்டு, அவன் தர்மத்தின் வழி நில்லாமையால் அவனோடிதுவும் அழியுமே எனக் கலங்கினார்.
அழகே வடிவாயிருந்தும் உயிர் இல்லாத பெண் போல், வளம் மிக்க நகரத்தில் அறம் இல்லையே!
சூரபதுமன் அரண்மனையில்...
அமருவதற்கு ஆசனம் இல்லை. அவனை வாழவைத்த கடவுளின் தூதனை வந்திருக்கும் நாம் நிற்பது இறைவனுக்குப் பெருமையல்லவே. என்ன செய்வது? முருகா! முருகா!
முருகன் கருணையால் ஆயிரம் கோடி சூரியப் பிரகாசமான நவரத்ன சிம்மாசனம் தோன்றியது.
யாரடா நீ? தேவர் மூவரும் எனக்கு அஞ்சுவர். என் முன் வித்தை காட்டுகிறாயா? எங்கள் ஊர்ப் பெண்கள்... பெண்கள் என்ன, குழந்தைகள்... குழந்தைகள் ஏன்.. கருவில் வளரும் உயிரே இந்த வேடிக்கை செய்யும்.
உனக்கு வாழ்வளித்த சிவபெருமானின் குமரன் முருகக்கடவுளின் தூதன்.
சின்னப் பயலுக்குத் தூதுவன் வேறு?
நாவை அடக்கு. தேவர்களைச் சிறை விடு.. இது முருகன் கட்டளை.
காற்றும் நெருப்பாறும் அவசரப்பட்ட அரசனும்.. பெற்றவள் வளர்க்காமல் யார் யாரோ வளர்த்த சின்னவன்..
மூடனே! முருகன் சின்னவன் இல்லை. சிவன். புரிந்து கொள்.


ஹா! பெரிய கடவுள். தேவர்களை விடமாட்டேன். என்ன பதில்?
புதிதா? தாரகனை உன் தம்பியைக் கொன்ற வேல் அவன் கரத்தில் உள்ளது.. அதுவே பதில்.
சூரபதுமனின் வரபலம் தெரியுமா உனக்கு?
சூரபதுமா! வரபலமா? உன் ஆயிரத் தெட்டு அண்டங்களும், நூற்றெட்டு யுக வாழ்வும் வேல் முன்னர் எம்மாத்திரம்?
பல் கூட முளைக்காத சொல் கூட பிறக்காத சிறுவனாவது..? கொல்வதாவது!
செய்ய வேண்டியதையும் செய்யாமல் செய்யக் கூடாததையும் செய்கிறாயே! தேவர்களை விடுதலை செய். இது நீ செய்ய வேண்டியது. முங்களை வைகிறும். இது நீ செய்யக் கூடாதது.
பிடியுங்கள் அவனை.
நெருங்காதீர்கள்! சூரபதுமா உன் இதயம் அழியப் போகிறது! காப்பாற்றிக் கொள்.


வீரபாகுத்தேவர் அங்கிருந்து பாய்ந்தார். பிடிக்க வந்தவர்களைக் கொன்றார்.
செந்தூர் வந்து முருகனை வணங்கினார்.
செய்தி என்ன?
உயர்ந்தவர்க்கு அழிவு வருமுன்னாலே அறிவு வரும். சிலருக்கு அழிவு வருவது தெரிந்தவுடன் அறிவு வரும். சிலருக்கோ அழிவு வந்தாலும் அறிவு வருவதில்லை.. சூரன் மூன்றாவது வகை.
விளக்கமாகச் சொல். அறவுரைகள் என்னாயிற்று?
அறம் அவனைத் திருத்தாது. ஆயுதம் திருத்தும். வெற்றி வேலுக்கு - வீர வேலுக்கு ஒரு விருந்து காத்திருக்கிறது.
ம்.. படை புறப்படட்டும்.
சுவாமி!.. ஒரு சிக்கல்.. கடலை எப்படிக் கடப்பது?
தொடரும்



ஐயனார் குதிரை

அடி தாங்காது சின்னி அழுதான். நாட்டாண்மைக்காரர் மனம் இரங்கவில்லை.

''ஊர் உலகமே தண்ணிக்குத் தவிப்பாய்த் தவித்துக் கொண்டு ஒரு மழை பெய்யாதா என்று ஏங்கிக் கொண்டிருக்கிறது. ஊரே கூடிக் கொடும்பாவி கட்டி இழுத்திருக்கோம். பிரார்த்தனைக் குளத்தில் இறங்கிக் கொஞ்சம்கூட இரக்கம் இல்லாது, 'ஐயனாரப்பா, மழையைக் கொடுக்காதே'ன்னு வேண்டிக்கிட்டாயாமே? உன்னைத் துண்டு துண்டா வெட்டிப் போட்டாக்கூடப் பரவாயில்லை. நீ ஒரு சமூக விரோதி. போடா, உன்னைப் பார்த்தால்கூடப் பாவம்'' என்று கோபாவேசமாகக் கத்திவிட்டு உள்ளே போனார் நாட்டாண்மைக்காரர்.

அடிபட்ட முதுகைத் தடவிக் கொண்டு மெதுவாக வெளியே வந்த சின்னி, வண்டியில் ஏறிச் சாய்ந்து கொண்டான். பழக்கப்பட்ட மாடு விரைந்தது.

பிள்ளையார் கோவிலைத் தாண்டும் போது பழக்கத்தின் காரணமாக வண்டி நின்றது. சின்னி கீழே இறங்கிப் பணிவாகச் சாமியை வேண்டிக்கொண்டு விபூதிக்காகக் குருக்களிடம் கையை ஏந்தினான்.

சின்னியை வெறுப்புடன் நோக்கிய குருக்கள், ''மழையைக் கொடுக்காதேன்னு சாமியை வேண்டிக்கிற உனக்கு என் கையால் விபூதி பிரசாதம் கொடுக்கிறது கூடப் பாவம். இந்தா, நீயே எடுத்துக்க'' என்று தட்டை வைத்துவிட்டு நகர்ந்து கொண்டார். சின்னி கண்களில் பொங்கிய நீரைத் துடைத்துக் கொண்டு நகர்ந்தான்.

சின்னியின் தந்தை பொன்னன், நாட்டாண்மைக்காரரிடம் வண்டியோட்டியாக இருந்தவர். நாட்டாண்மைக்காரர் வீட்டுப் பிள்ளைகளைப் பள்ளிக்கு அழைத்துக் கொண்டு போய்க் கூட்டிவரும் பணி அவருடையது. அவருடைய வண்டியில் பள்ளி சென்று படித்த நாட்டாண்மைக்காரர் வீட்டுப் பிள்ளைகளில் பலர் பெரிய படிப்புப் படித்துவிட்டு இன்று மிகப் பெரிய பதவிகளில் இருக்கிறார்கள். பொன்னனுக்கு அதைப் பற்றி மிகவும் பெருமை.

இரு ஆண்டுகளுக்கு முன்பு நாட்டாண்மைக்காரரின் பெரிய மகன், டெல்லியிலிருந்து தன் குடும்பத்துடன் ஊருக்கு வந்திருந்தார். அவர் கூடப் பொன்னனின் வண்டியில் சென்று படித்தவர்தான். ஒரு நாள், தன் குடும்பத்துடன் பக்கத்து ஊரில் இருந்த டூரிங் சினிமாவுக்குக் கிளம்பினார். பொன்னன்தான் வண்டி யோட்டினார்.

இரவு திரும்பும்போது நல்ல மழை. பலத்த காற்று வேறு. மரங்கள் வேரோடு சாய்ந்தன. பொன்னன் அதிகக் கவனமாக வண்டியை ஓட்டினார். சாலையோரத்தில் பலம் இல்லாது நின்று கொண்டிருந்த பட்ட மரம் ஒன்று தடால் என்று வேருடன் சாய்ந்தது. நல்ல காலம். வண்டி சிறிது நகர்ந்த பின் அது விழுந்தது. வண்டி கொஞ்சம் பின் தங்கியிருந்தால் யாருமே தப்பியிருக்க முடியாது. இறைவனின் கருணையை எண்ணி நன்றிப் பெருக்கால் தன்னை மறந்த பொன்னன், ''ஐயனாரப்பா, எங்களையெல்லாம் காப்பாற்றிய உனக்கு மண் குதிரை செய்து வைக்கிறேம்'' என்று வேண்டிக்கொண்டார்.

வீட்டுக்கு வந்ததும் நாட்டாண்மைக் காரரிடம் நடந்ததை விளக்கி, தான் நேர்ந்து கொண்டதையும் கூறினான்.

என்ன காரணமோ தெரியவில்லை, அன்று நாட்டாண்மைக்காரரின் மனம் சரியில்லை. பொன்னன் கூறியதற்கு இடக்காகவே பதில் கூறினார்.


''பொன்னா, ஐயனார்சாமி என் மகனையும் அவன் குடும்பத்தையும் மட்டுமா காப்பாற்றி யிருக்கிறார்? உன்னையும், உன் மாட்டையும் வண்டியையும் கூடத்தான் காப்பாற்றி யிருக்கிறார். அதனால் நேர்த்திக் கடனில் உனக்கும் பங்கு உண்டு. நேர்ந்து கொண்டது நீதான். அதனால் நியாயப்படி எனக்கு இதில் பொறுப்பு இல்லை. ஆனாலும் ஐயனாருக்குக் கட்டுப்பட்டு இதில் பாதிச் செலவை நான் ஏற்கிறேன். மீதி உன்னுடைய பங்கு'' என்று கூறினார்.

''ஐயா, ஒரு குதிரை வைக்க ஐந்நூறு ரூபாய் ஆகுமே? அதில் பாதிச் செலவு என்றால் இருநூற்றி ஐம்பது ஆச்சே? சாப்பாட்டுக்கே திண்டாடும் நான் இவ்வளவு பெரிய தொகைக்கு எங்கே போவேன்?'' என்று திகைப்புடன் கேட்டார் பொன்னன்.

''இந்த எண்ணம் நேர்ந்துக்கும்-போது இருந்திருக்க வேண்டும். நீ எப்போது இருநூற்றி ஐம்பது ரூபாய் கொண்டு வந்து கொடுக்கிறாயோ, அப்பவே நான் என் பங்கு ரூபாயைக் கொடுத்து விடுகிறேன். நீ நேர்ந்து கொண்டபடி ஐயனாருக்கு மண் குதிரை செய்து வைத்து விடலாம்'' என்று உறுதியாக, முடிவாகக் கூறினார் நாட்டாண்மைக்காரர்.

இந்த விபத்தைச் சாக்காக வைத்து நாட்டாண்மைக்காரரின் மகன் பட்டணத்திலிருந்து புதுக் கார் ஒன்றை வரவழைத்துத் தந்தைக்குப் பரிசாக அளித்தான். அதன் காரணமாக அடுத்த நாளே பொன்னனுக்குச் சீட்டு கிழிந்தது.

நேர்த்திக் கடனைச் செய்யத் தேவைப் படும் பணத்திற்கு என்ன செய்யப் போகிறோமோ என்ற கவலையோடு, அன்றாட சாப்பாட்டுக்கு என்ன செய்யப் போகிறோமோ என்ற கவலையும் சேர்ந்து கொண்டு பொன்னனை வாட்டியது. ஆனாலும் உழைப்பாளியான அவர் சோர்ந்து விடவில்லை. பஸ் நிறுத்தம், வண்டிப் பேட்டை, சந்தைப் பேட்டை, திருவிழாக் கூட்டம் என்று



சவாரி கிடைக்கக் கூடிய இடங்கள் எல்லாவற்றிலும் சுற்றியலைந்து வருமானத்தைத் தேடினார். எவ்வளவு உழைத்தாலும் வந்த வருமானம் குடும்பத்தை நடத்துவதற்கே இழுபறியாக இருந்தது. ஆனாலும், அந்த நிலையில் கூட வந்த வருமானத்தில் ரூபாய்க்குப் பத்துப் பைசா ஐயனாருக்கு நேர்த்திக் கடனைக் கழிக்க என்று தனியாக ஒதுக்கி வைத்தார். இரண்டு ஆண்டுகள் ஓடிவிட்டன. என்ன முயன்றும் பொன்னனால் இருநூறு ரூபாய்க்கு மேல் ஐயனாருக்காகச் சேமிக்க முடியவில்லை. 'நேர்த்திக் கடனைக் கழிக்க முடியாமல் இப்படி ஐயனாரைக் காக்க வைத்துக் கொண்டே இருக்கிறோமே' என்ற கவலையாலும், அளவுக்கு மீறிய உழைப்பாலும் பொன்னனின் உடல் நலம் குன்றியது. அதுவே, அவர் உயிரைப் பறிக்கக் காரணமாகவும் இருந்தது.

மரணப் படுக்கையில் இருந்த பொன்னன் தம் மகனை அழைத்தார். ''சின்னி, இனி நான் அதிக நாள் இருக்க மாட்டேன். நீ நல்ல பையன். வண்டியும் மாடும் உனக்கும் உன் அம்மாவுக்கும் சோறு போடும். நீ பள்ளியில் படித்துக் கொண்டே காலையிலும் மாலையிலும் வண்டி யோட்டிச் சம்பாதிக்கலாம். இறப்பதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. ஐயனாருக்கு நேர்ந்துகொண்ட நேர்த்திக் கடனைக் கழிக்காமல் போகிறோமே என்றுதான் நான் தவிக்கிறேன். நீ என்ன செய்வாயோ எனக்குத் தெரியாது. நல்ல வழியிலே உழைத்து எப்படியாவது இன்னும் ஐம்பது ரூபாய் சேர்த்து இருநூற்றைம்பது ரூபாயை நாட்டாண்மைக்காரரிடம் கொண்டு போய்க் கொடுத்து, ஐயனாருக்குக் குதிரை வைக்க வேண்டும். அப்பொழுது தான் என் மனம் நிம்மதியடையும்'' என்று கூறினார்.

''அப்பா, உங்க நேர்த்திக் கடனை நான் கண்டிப்பாகச் செய்து வைப்பேன். அதற்கான பணத்தையும் நான் உழைத்தே சேர்ப்பேன்.'' என்று உறுதியளித்தான் சின்னி.

தந்தைக்கு அளித்த உறுதிமொழியை நிறைவேற்றி வைப்பது சின்னிக்கு எளிதாக இருக்கவில்லை. பள்ளிப் படிப்பைத் தொடர்ந்த காரணத்தால் காலையிலும் மாலையிலும் மட்டும்தான் அவனால் வண்டி ஓட்ட முடிந்தது. கிடைத்த சொற்ப வருமானம் குடும்பத்தை-நடத்தவே போதவில்லை. தந்தைக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாமல் தள்ளிக் கொண்டே போகிறோமே என்று சின்னி மனம் குமைந்தான். அவன் படும்பாட்டை உணர்ந்து கொண்ட பொன்னனின் நல்ல நண்பர்கள் பலர் அந்த ஐம்பது ரூபாயைத் தாங்களே பகிர்ந்து கொடுக்க முன் வந்தனர்.

''அது அப்பாவுக்குப் பெருமையளிக்காது. அந்த ஐம்பது ரூபாயை நானே உழைத்துச் சேர்க்க வேண்டும் என்பது தான் அப்பாவின் விருப்பம். அப்படிச் செய்வதாகத்தான் நானும் வாக்குறுதி கொடுத்திருக்கிறேன்'' என்று மறுத்-தான் சின்னி.

கோடை விடுமுறை வந்தது. பருவ மழை தவறியதன் காரணமாக ஊரில் கடுமையான தண்ணீர்ப் பஞ்சம் தலைவிரித்தாடியது. நீர் நிலைகளெல்லாம் வறண்டு விட்டன. மக்கள் ஒவ்வொருவரையும் ஏதோ ஒரு விதத்தில் பாதித்த தண்ணீர்ப் பஞ்சம் சின்னியைப் பொறுத்தவரை அவனுக்கு வருமானத்திற்கு ஒரு புதிய வழியைத் தேடித் தந்தது.

நான்கு கிலோ மீட்டர் தொலைவில் இருந்த தேனாற்றங் கரையில் ஊற்றுப் போட்டால் தண்ணீர் கிடைத்தது. அதிகாலையிலேயே சின்னி, அம்மாவையும் அழைத்துக் கொண்டு கிளம்பி விடுவான். ஆற்று மணலில் ஊற்றுப் போடுவான். அவன் அம்மா பெரிய அண்டாக்களிலும் தவலைகளிலும் நீரை நிரப்பி வைப்பாள். சின்னி அவற்றை வண்டியில் வைத்து எடுத்து வந்து பஸ் நிறுத்தத்தில் இருந்த ஹோட்டலில் கொடுப்பான். ஒரு தவலைக்கு ஒரு

பாட்! பாட்!

பேரன்: பாட்! பாட்!

பாட்டி: ஏண்டா, என்னை ஏன் இப்படி 'பாட், பாட்' டுன்னு கூப்பிடுறாய்?

பேரன்: நீங்கதானே பாட்டி பெரியவங்களை 'டி' போட்டுக் கூப்பிடக்கூடாதுன்னு சொன்னீங்க?

—எஸ், குமார்



ரூபாய் கொடுப்பார்கள். எத்தனை தவலை வேண்டுமானாலும் அவர்கள் வாங்கிக்கொள்ளத் தயாராக இருந்தார்கள். ஆனால், நீர் மிகவும் மெதுவாகத்தான் சுரந்தது. அதனால் நாள் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் மட்டுமே சம்பாதிக்க முடிந்தது. ஆனால் மற்ற சவாரிகள் எதையும் ஏற்க முடியவில்லை. மற்ற செலவுகளெல்லாம் போக நாளொன்றுக்கு அவனால் இரண்டு-மூன்று ரூபாய் சேர்க்க முடிந்தது.

அதுவரை சின்னி முப்பது ரூபாய் சேர்த்து விட்டான். இன்னும் இருபது ரூபாய் மட்டுமே அவனுக்குத் தேவை. இதே நிலை நீடித்தால் இன்னும் பத்து நாட்களுக்குள் அவனுக்கு அந்தத் தொகை கிடைத்து விடும். அதை நாட்டாண்மைக்காரரிடம் கொடுத்துத் தந்தைக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி விடுவான்.

அந்த நிலையில்தான் ஊர் மக்கள் மழையை வேண்டிப் பிரார்த்தனை செய்யத் தொடங்கியிருந்தார்கள். நாட்டாண்மைக்காரர் தலைமையில் ஆலயங்களில் கூட்டுப் பிரார்த்தனை நடந்தது. ஊர் மன்றத்தில் பாரதக் கதையும், தெருக் கூத்தும் நடத்தினார்கள். கொடும்பாவி கட்டி இழுத்தார்கள்.

ஊர் மக்கள் எல்லாம் ஒன்று கூடி மழைக்காகப் பிரார்த்தனை செய்யும் போது சின்னி மட்டும் தனிமையில், ''ஐயனாரப்பா, இன்னும் சில நாட்களுக்கு மழை வராமல் இருக்க வேண்டும். அருள் புரிவாயா?'' என்று ஐயனாரின் சக்தி மிகுந்த குளத்தில் இறங்கி நின்று பிரார்த்தனை செய்து கொண்டான். தன்னலத்திற்காகப் பொது நலத்தைப் பாதிக்கக்கூடியதொரு பிரார்த்தனையைச் செய்கிறோமே என்று சின்னி மனம் கூசினான். அன்றைக்கு அவன் கண்களை மூடியபடி மெல்லிய குரலில் பிரார்த்தனை செய்து கொண்டதைக் கேட்டு விட்டார்கள், அருகிலே நின்ற சிலர்! உடனே அவர்கள் நாட்டாண்மைக்காரரிடம் ஓடிச் சென்று நடந்ததைக் கூறினர். நாட்டாண்மைக்காரர் ஆத்திரம் தாங்காது அவனை வரவழைத்து உரிமையோடு அவனைக் கை நீட்டி அடித்தார்.

பத்து நாட்கள் ஓடின. வானம் கறுத்து மேகக் கூட்டம் நிறைந்தாலும் மழை பெய்யவில்லை. சின்னி ஐம்பது ரூபாய் சேர்த்து விட்டான்! தந்தை வைத்துவிட்டுப் போயிருந்த இருநூறு ரூபாயை அந்தத் தொகையுடன் சேர்த்துக்கொண்டு அவன் நாட்டாண்மைக்காரரிடம் ஓடினான். அப்போது எதிர்பாராமல் வானம் இருண்டது. சடசட வென்று மழை பெய்தது. சின்னி நாட்டாண்மைக்காரரிடம் நடந்ததை ஒன்று விடாமல் கூறினான்.

''சின்னி, தவறு என்னுடையது தான். என் குடும்பம் காப்பாற்றப் பட்ட நன்றிப் பெருக்கினால்தான் உன் தந்தை நேர்ந்து கொண்டார். அதைச் செய்து வைத்திருக்க வேண்டிய பொறுப்பு என்னுடையதுதான். ஆனாலும், ஒரு வண்டிக்காரன் என் குடும்பத்திற்காக நேர்ந்து கொள்வதா என்ற மமதையில், அவனைத் தண்டிக்க வேண்டும் என்பதற்காக அப்படித் தட்டிக் கழித்தேன். உன் தந்தை உத்தமன். அவனுக்கு ஏற்ற மகன் நீ. உத்தமனான ஒருவனது நேர்த்திக் கடனைக் கழிக்க உத்தமனான அவனது மகனுக்கு உதவ வேண்டும் என்பதற்காகவே ஐயனார் உன் வேண்டுகோளை ஏற்று இன்று வரை மழையை நிறுத்திவைத்திருந்திருக்கிறார். இதோ பார், இப்போது மழை கொட்டு கொட்டென்று கொட்டுகிறது. என் தவற்றை நான் உணர்ந்து கொண்டேன். குதிரை வைக்க இன்றே ஏற்பாடு செய்து விடுகிறேன். என்னை மன்னித்து விடு சின்னி'' என்று மனம் கசிய வேண்டிக் கொண்டார் நாட்டாண்மைக்காரர். பிறகு, ''சின்னி... ஒரு வேண்டுகோள்...'' என்று நிறுத்தினார்.

''ஐயா, கட்டளை என்று கூறுங்கள்'' என்று பதறிய சின்னி, அவர் என்ன கூறப் போகிறார் என்பதைக் கேட்கப் பணிவாக வாய் பொத்தி நின்றான்.

''சின்னி, உன்போன்ற நல் மனம் கொண்டவர்களது பிரார்த்தனைக்கு ஐயனார் கண்டிப்பாகச் செவி சாய்ப்பார். இனி, வறட்சியே ஏற்படக் கூடாது. பருவ மழை பொழிய வேண்டும் என்று ஐயனாரை வேண்டிக் கொள்வாயா?'' என்று கண்கள் பனிக்கக் கேட்டார்.

''நிச்சயமாக ஐயா. நான் முன்பு ஐயனாரிடம் வேண்டிக் கொண்டபோது கூட, 'ஐயனாரப்பா, விரைவில் எனக்குப் பணம் சேர அருள் புரிய வேண்டும். அதுவரை மழை பெய்யாதிருந்தால் நல்லது. பணம் சேர்ந்ததும் மழை கொட்டு கொட்டு என்று கொட்ட-வேண்டும்' என்றுதான் பிரார்த்தித்தேன். எனக்குப் பணம் சேர அருள் புரிந்த ஐயனார், உடனே மழை பொழியவும் வழி செய்து விட்டார். இனி, பருவ மழை பொய்க்காது'' என்றான். அப்போது இருவரும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

சொல் விளையாட்டு!

M.R.ராஜன்

மான் விளையாட்டு

'மான்' என்று முடியும் சில சொற்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அந்தச் சொற்களைக் கண்டு பிடிக்க வசதியாக, ஒவ்வொன்றுக்கும் அருகிலே ஒரு குறிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. எங்கே, சொற்களைக் கண்டு பிடியுங்கள், பார்க்கலாம்.

(1) — — மான்
(உறவுக்கார மான்)

(2) — மான்
(கடையில் கிடைக்கும் மான்)

(3) — — — மான்
(கடல் கடந்த மான்)

(4) — — — மான்
(கெட்டிக்கார மான்)

பல் விளையாட்டு

இதோ கீழே உள்ள 'பல்'களையும் கண்டுபிடிக்க முடிகிறதா பாருங்கள்:

(1) நீரில் மிதக்கும் பல்.
(2) முன்னேற்றத்தைக் கெடுக்கும் பல்
(3) அடுப்பில் கிடக்கும் பல்
(4) உபசாரத்தைக் குறிக்கும் பல்
(5) நீரில் வளரும் பல்.

எந்த ஒரு சொல்?

கீழே சில சொற்கள் முற்றுப்பெறாத நிலையில் இருக்கின்றன. இந்தச் சொற்களுடன் பொதுவாக ஒரு சொல்லைச் சேர்த்தீர்களானால், இவை பொருள் தரும் சொற்களாகி விடும்! இவை அனைத்துக்கும் பொதுவான அந்த ஒரு 'சொல்' எது என்பதைக் கண்டுபிடியுங்கள்.

கடி—;	சிங—:	பல—;
அதி—;	வி—;	ரீங்—;
உப—;	விவ—;	சுவீ—;
பரி—;	அகங்—;	ஆ—;
அலங்—;	அப—;	

விடைகள்:

மான்: (1) அம்மான் (2) சாமான் (3) அந்தமான் (4) புத்திமான்.

பல்: (1) கப்பல் (2) சோம்பல் (3) சாம்பல் (4) விருந்தோம்பல் (5) நீராம்பல்.

சொல்: காரம்



கண்ணன்: ஏண்டா முரளி, உன் தம்பி ரமேஷ் சதா படியைத் தூக்கிக் கொண்டு அலையறான்?

முரளி: எப்பவும் பேச்சை அளந்து பேசணும்னு அப்பா சொன்னாரே, அதனால்தான் போல இருக்கு!

- லலிதா செல்லப்பா



சிங்கம், பூனை, எலி

-பரந்தாமன்-

காட்டில் ஒரு சிங்கம் தனக்கு நிகர் இல்லாத ராஜாவாக வாழ்ந்து வந்தது. அந்தக் காட்டில் உள்ள மற்ற மிருகங்கள் எதுவுமே அதை நெருங்கத் துணியாது. கண்டால் வெகு தூரத்திலேயே நடுநடுங்கிப் போய் ஒளிந்து கொள்ளும். அந்தச் சிங்கத்தின் அலறலில் மானும் மற்ற மிருகங்களும் பதறிப்போய் நாலா பக்கமும் சிதறி ஓடும். அந்த நேரத்தில் தனக்கு விருப்பமான ஒன்றைச் சிங்கம் அடித்துக் கொன்று, தனது குகைக்கு இழுத்துப் போய்ச் சாப்பிட்டுவிட்டுத் தூங்கும்.

அவ்வளவு நிம்மதியாக வாழ்ந்த சிங்கத்திற்கு உள்ளூர ஒரு பெரும் மனக் கவலை இருந்தது. அதை வெளிப்படையாக மனம் விட்டு யாரிடமும் சொல்லவும் முடியவில்லை. சொன்னால், தனது மதிப்புக் குறைந்து விடுமோ என்ற பயம். யானை போன்ற பெரிய பெரிய மிருகங்களை யெல்லாம் அச்சப்படுத்தும் அந்த ராஜ சிங்கம், ஒரு சுண்டெலிக்குப் பயப்படுகிறது என்று சொன்னால் ஆச்சரியமாயில்லை!

அந்தச் சிங்கத்தின் குகைக்குள் உள்ள பொந்துக்குள்ளிருந்து ஒரு சுண்டெலி வெளியே வந்து சிங்கத்தின் உணவுகளை ருசி பார்ப்பதும், அங்கும் இங்கும் ஓடி ஆடித் திரிவதும், சிங்கம் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கும்போது அதன் மீது ஏறிக் குதித்து விளையாடித் தூக்கத்தைக் கெடுப்பதும் இப்படியெல்லாம் தொல்லை கொடுத்தது. அவ்வளவு பெரிய சிங்கத்தால் அதை அடக்க முடியவில்லை. பிடிக்க முயலும்போது அது வளைக்குள் ஓடித் தப்பிவிடும். சிங்கத்திற்கு மகா கோபம்! வெட்கமாகவும் இருந்தது. எப்படியும் அதை நசுக்கி விட வேண்டும் என்று பலமுறை முயன்றது. பலன் சுண்டெலியிடம் தோல்விதான்! உள்ளூர அரித்துக் கொண்டிருந்த 'ரகசியத்தை' வெளியில் அதால் சொல்ல முடியவில்லை.

வெளியே சென்று விட்டுக் குகைக்குள் வரும்போது இரண்டு மூன்று நாட்களாகவே இஷ்டம் போல் துள்ளித் திரியும் சுண்டெலியைக் காணவில்லை. அதற்கான காரணமும் தெரியவில்லை. 'சரி, எப்படியாவது தொல்லை ஒழிந்தது. நிம்மதி' என்று மகிழ்வுடன் எண்ணியபோது, அங்கே ஒரு மூலையில் ஒரு பூனை நடு நடுங்கிக் குந்தியிருப்பதைப் பார்த்தது. புத்திசாலியான அந்த 'ராஜ சிங்கம்' புரிந்து கொண்டு விட்டது. ''இந்தப் பூனை இங்கு வந்து கொண்டிருப்பதால்தான் அந்தச் சுண்டெலி இங்கு வரவில்லை. நமக்குப் பயப்படாத எலி, இந்த அற்பப் பிராணியான பூனைக்குப் பயப்படுகிறதே! இந்தப் பூனை இங்கேயே இருந்தால்? அந்தச் சுண்டெலி இந்தப் பக்கம் தலை காட்டாதே! ஆகவே, இந்தப் பூனையைச் சிநேகிதம் பண்ணி இங்கேயே வைத்துக் கொள்வோம்' என்று 'ராஜ தந்திரம்' பண்ணியது.

பூனையை அருகில் அழைத்துத் தைரியப்படுத்தி, ''நான் உன்னைப் போன்ற ஒருவனைத்தான் நண்பனாகக் கொள்ள நினைத்தேன். எனக்குத் தன்னந் தனி

வாழ்க்கை அலுத்து விட்டது. நீ எப்போதும் என்னுடனேயே இருக்கலாம். உண்ணலாம்; பழகலாம்'' என்றெல்லாம் ஆசை காட்டிப் பூனையைத் தந்திரமாக அங்கேயே இருக்கச் செய்தது. சுண்டெலி பற்றிய மனக் கவலையை அகற்றிக் கொண்டது.

அற்ப ஜந்துவான தன்னை, மிருகராஜனான சிங்கம் ஏன் மதிக்கிறது, எதற்காக மதிக்கிறது என்ற மர்மத்தைப் புரிந்து கொள்ள முடியாத அந்த அசட்டுப் பூனை, 'நாமும் சிங்கத்தைப் போன்ற மதிப்புடையவன் தான். இதுவரை அது நமக்கே தெரியாமல் போயிற்று. இல்லையானால், அவ்வளவு பெரிய சிங்கம், வலிய வந்து விரும்பி நம்முடன் சிநேகம் செய்து கொள்ளுமா!' என்றெல்லாம் தப்பாக எண்ணித் தற்பெருமை கொண்டது.

சிங்கம், பூனை போய்விடக் கூடாதே என்பதற்காக அதை மதிப்பாக நடத்தித் தனக்குச் சமமாக இருத்தி உண்ண வைத்து அதன் உடல் நலனை அடிக்கடி விசாரித்தறிந்து, பக்குவமாக நடந்து கொண்டது. எல்லாம் சுயநலம் காரணமாகத்தான். சுண்டெலியின் தொல்லையிலிருந்து நிம்மதி கிடைத்துத் தூங்க முடிவது ஒரு பெரிய காரியம் அல்லவா! ஆனால், மற்றக் காட்டில் உள்ள மிருகங்களுக்கு, அவ்வளவு பெரிய ராஜசிங்கம் ஒரு பூனையை அந்தரங்க நண்பனாக வைத்துக் கொண்டிருப்பது பற்றி ஆச்சரியமாக இருந்தது. சிங்கத்தைத் தவிர வேறு யாருக்குமே அந்த உள்மர்மம் தெரிய முடியாதல்லவா! பூனையோ சிங்க ராஜனின் சிநேகத்தை வைத்துக் கொண்டு தலைகால் புரியாமல், யாரையும் மதிக்காமல் அட்டகாசமாக நடந்து கொண்டிருந்தது.

ஒரு நாள் பூனை, சிங்கக் குகைக்குள் வரும்போது அங்கே கிடந்த எலும்புத் துண்டைக் கடித்துச் சுவைத்துக் கொண்டிருந்தது சுண்டெலி. பூனை மெதுவாக உள்ளே வந்ததை அது கவனிக்கவில்லை. எலி மீது பூனை ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து பிடித்துக் கடித்துக் குதறியது.

சுண்டெலி குற்றுயிராகக் கிடந்தது. பூனை அதை மீண்டும் மீண்டும் கடித்துக் குதறியபடி இருந்தது.

அந்த நேரத்தில் உள்ளே வந்த சிங்கம், அந்தக் காட்சியைக் கண்டது. பூனையோ ஒரு பெரும் தீரச் செயலைச் செய்த இறுமாப்போடு சிங்கத்தை நிமிர்ந்து பார்த்தது. சிங்கத்துக்கு உள்ளூர மகிழ்ச்சி. நிரந்தரமான நிம்மதி ஏற்பட்டது என்று. 'சுண்டெலியைக் கண்டு நடுநடுங்கிக் கொண்டிருந்தோம். அதிலிருந்துவிடுபட அற்பமான பூனையை மதிக்கும் நிலை ஏற்பட்டது. இப்போது இரண்டு தொல்லைகளுமே ஒழிந்தன.' என்ற மகிழ்ச்சி அடைந்தது

சுண்டெலியைக் கொன்ற வீரச் செயலைச் சிங்கம் மிகவும் பாராட்டும் என்று எதிர்பார்த்தது பூனை. ஆனால் சிங்கம் அதைப் பாராட்டவில்லை. மிகவும் அலட்சியப்படுத்தியது. அதைக் கண்ட பூனைக்கு மிகப் பெரும் சோகம் ஏற்பட்டு விட்டது. வழக்கமாக உடன் சாப்பிடக் கூப்பிடும் சிங்கம், கூப்பிடாததைக் கண்டு அவமானமும் ஏற்பட்டது. பூனையின் சோக நிலையைக் கண்டு சிங்கம் கவலைப்படவில்லை. பூனை, மதிப்பிழந்த நிலையில், நொந்து போய்த் [illegible]லே அந்தச் சிங்கக் குகையை விட்டு வெளியேறிவிட்டது. சிங்கம் அதைப்பற்றியெல்லாம் கொஞ்சமும் அலட்டிக் கொள்ளவில்லை. தன்வரையும் நிரந்தரமான ஒரு நிம்மதி ஏற்பட்டதில் அது, மற்ற எதைப் பற்றியும் கவலைப்படவில்லை!

★★★★★★★★★★★★★★★★★


கல்யாணமே வேண்டாம்!

ராமு: நான் பெரியவனானாலும் கல்யாணமே செய்துக்க மாட்டேன்!

சோமு: ஏண்டா?

ராமு: பின்னே என்னடா, கல்யாணமானால் குழந்தை பிறக்கும்! அது தினம் தினம் 10 பைசா கேட்குமேடா.

-நல்லாலம் காசிதாசன்





இரு குதிரைகள்

உமாகல்யாணி

பொருனை நதி சலசலத்து ஓடிக்கொண்டிருந்தது. அதன் கரை நெடுகப் பசிய புற்கள் செழித்து வளர்ந்திருந்தன. பகல் முழுதும் வண்டி இழுத்து அலுத்துப் போன குதிரை அது. ஆனால், அலுப்பையும் மீறிய பசி. எனவே, வேக வேகமாய்ப் புல்லை மேயலானது.

வண்டி ஓடாமல் நிற்கும்போதுதான் எப்போதாவது சிறிது பசும் புல்லை அதன் கண்ணிலே காட்டுவான் திருவாழி. தினமும் சிறிது கொள்ளும் வைப்பான். இவையெல்லாம் அந்தக் குதிரையின் பசிக்குப் போதாது என்பது திருவாழிக்குத் தெரியும்.

ஆனால், வேறு என்னதான் பண்ண முடியும்? அவனோ ஏழை வண்டியோட்டி. அந்த வருமானத்தில் நான்கு பேர் சாப்பிடுகிறார்கள். எனவே இதற்கு மேல் இரை வாங்கிப் போட அவனால் இயலாது.

எனவே, மாலையில் ஒரு மணி நேரம் மட்டும் வாடகைப் பணத்தைப் பெரிதாக எண்ணாமல், வண்டியோட்டப் போகாமல் இங்கு வந்து விடுவான். இந்த நேரத்தில் ஏதாவது மேய்ந்து கொண்டால்தான் உண்டு.

எனவே, மாலைப் பொழுதுகளில் குதிரை மேயும்போது அவன் பொருனையில் நீராடிவிட்டுக் குறுக்குத் துறையில் உள்ள முருகன் கோவிலில் வழிபட்டு வருவான். சில நாட்களில் குதிரையையும் குளிப்பாட்டி விடுவான். இருட்டும்வரை இப்படி இங்கேயே இருந்துவிட்டு அப்புறம் வண்டியுடன் மறுபடியும் கிளம்பி விடுவான்.

பரபரவென்று புல்லை மேய்ந்துகொண்டிருந்த திருவாழியின் குதிரை, தனக்கு மிக அண்மையில் ஒரு குதிரையின் கனைப்புச் சத்தம் கேட்கவே ஏறிட்டுப் பார்த்தது.

அப்படிக் கனைப்புக் குரல் கொடுத்தது குமாரராஜாவின் குதிரையான ஜெயவீரன். வெள்ளி மணிகளும், பட்டுக் குஞ்சலங்களும், நிகுநிகுக்கும் மேனியுமாக ராஜ கம்பீரத்துடன் நின்று கொண்டிருந்தது ஜெயவீரன்.

தனது நோஞ்சான் மேனியையும், ஜெயவீரனின் தளதளக்கும் மேனியையும் ஒப்பிட்டுப் பார்த்து நாணியது திருவாழியின் குதிரை.

''இவ்வளவு சுதந்திரமுடன் பேய்ந்து திரிகிற நீ ஏன் தலை தாழ்ந்து நாணுகிறாய்?'' என்று கேட்டது ஜெயவீரன்.

''அரண்மனையிலே ராஜ உபசாரங்களுடன் வாழும் உன் பெருமை எங்கே? நாளெல்லாம் வண்டி இழுத்து வேதனைப்படும் என் நிலைமை எங்கே? உன் உடலைப் பார். எப்படித் தளதளவென்று மின்னுகிறது! ஆனால், என் உடல் எப்படி வற்றிச் சருகாக...'' என்று ஏக்கமுடன் கூறியது திருவாழியின் குதிரை.

''என்றாலும் உனக்குச் சுதந்திரம் அதிகம். நாள்தோறும் தவறாமல் மாலை வேளைகளில் இங்கு மேய வந்துவிடுகிறாயே!'' என்றது ஜெயவீரன்.

''உனக்கு இப்படி வரவேண்டியது இல்லையே! அரண்மனை லாயத்தில், உனக்காக உணவு வகைகள் தவறாது காத்திருக்குமே!''

''கூண்டுக் கிளிக்குச் சுகமுண்டோ? எவ்வளவுதான் பாலும் பழமும் கொடுத்து , வளர்த்தாலும் சிறை வாழ்க்கை சிறை வாழ்க்கைதானே!

அவர்கள் அரண்மனையில் எவ்வளவு வசதி பண்ணித் தந்தாலும்கூட, அந்தக் கட்டுப்பாடான வாழ்வு எனக்குப் பிடிக்கவே இல்லை. உன் போன்று சுதந்திரமாய் வாழ்வதையே நான் விரும்புகிறேன்'' என்றது ஜெயவீரன்.

அதன் குரலில் தாபம் தொனித்தது. கண்கள்கூடக் கலங்குவது போல் தெரிந்தது. ஜெயவீரனின் கவலை

மிட்டாய்க் கடைக்காரர்: (புதிதாக வேலைக்கு வந்த பையனிடம்) நீ இங்கே ஒரு மிட்டாய்கூட எடுத்துத் தின்னக்கூடாது. உன்னை நம்பலாம் அல்லவா?

பையன்: தாராளமாய் நம்பலாம். நான் இங்கே வருவதற்கு முன்பு ஒரு பச்சை மிளகாய்க் கடையிலே வேலைக்கு இருந்தேன். அங்கே ஒரு மிளகாயைக்கூடத் தின்றதில்லை.

—மீனு முத்து



வண்டிக் குதிரைக்கு வியப்பை அளித்தது.

''நீ வீணாய்க் கவலைப்படுகிறாய். அரண்மனை வாழ்வு எவ்வளவு இனிமையானது! கௌரவமானது! எனக்கு எப்பவுமே மரத்தடி வாழ்வுதான்.. மழை பெய்தால் ஒண்டக்கூட இடம் கிடையாது. ராஜா வீட்டுக் குதிரை என்றால், மனிதர்கள்கூட மரியாதை செலுத்துவார்கள். என்னையோ, 'இது வண்டிக் குதிரை, வெறும் சண்டிக் குதிரை' என்று கிண்டலும் கேலியும் தான் பண்ணுகிறார்கள்!'' என்று வருத்தப்பட்டது வண்டிக் குதிரை.

''நீதான் வீணாய்க் கவலைப்படுகிறாய். எனக்குள்ள மனக் கவலை உனக்கேது?'' என்றது ஜெயவீரன்.

''இளைய ராஜாவைச் சுமந்து கொண்டு ராஜ பவனி வரும் உனக்கா மனக் கவலை? உனக்கு வேலையும் கூட மிகவும் குறைவுதான். என்னைப் போலக் கண்டவர்களையும் சுமந்து திரிய வேண்டாம். உன் முதுகின்மீது இளைய ராஜாவைத் தவிர வேறு யாராவது சவாரி பண்ணிவிட முடியுமா?'' என்று கேட்டது வண்டிக் குதிரை.

''நீ சொல்வது சரிதான். நான் அந்த ஒரே ஒரு பாவியை மட்டும்தான் சுமக்க வேண்டியதிருக்கிறது. ஆனால், நீ இழுத்துச் செல்லும் வண்டியிலோ பல நல்லவர்களும், புண்ணியவான்களும் பயணம் செய்வார்கள். ஏன், உன் எஜமானனே கூட நல்லவன்! முருக பக்தன்! தந்தை சொல் மதிக்கும் தனயன்! தர்ம சிந்தை உடையவன்! அவனை வைத்து வண்டியை இழுப்பதே புண்ணியம். ஆனால், நான் செய்வது என்ன? நீ ஒவ்வொரு நாள் மாலையிலும் இங்குள்ள முருகன் கோவிலுக்கு உன் எஜமானனைச் சுமந்து வரும் அதே வேளையில், நான் எனது எஜமானனாகிய குமார ராஜாவை மது பானச் சாலைக்கும், கேளிக்கைக் கூடங்களுக்கும் சுமந்து போகிறேன். அது மட்டுமா? வேட்டையாடுகிறேன் என்று சொல்லிப் பக்கத்தில் உள்ள காடுகளுக்குச் சென்று, ஒரு பாவமும் அறியாத முயல்களையும், மான்களையும் குமார ராஜா கொன்று குவிப்பான். அதற்கும் நான் உதவுகிறேன். பாவம் பண்ணத் துணை போகும் எனக்கும், புண்ணியம் பண்ணத் துணை போகும் உனக்கும் வேறுபாடு இல்லையா?'' என்று கேட்டது ஜெயவீரன்.

வியப்புடன் நின்றது வண்டிக்குதிரை.

''எனது எஜமானனாகிய பாவிக்கு இப்போது சிறிது உடல் நலக் குறைவு. அதனால்தான் இந்த ஓய்வு எனக்கு. இப்படிக் காலாற வந்தேன்'' என்றது ஜெயவீரன்.

சிரமமான வாழ்க்கைதான் என்றாலும் ஒரு நல்லவருடன் அல்லவா வாழ்கிறோம் என்கிற பெருமையும் நிறைவும் ஏற்பட்டது திருவாழியின் வண்டிக் குதிரைக்கு!

பிருந்தாவனம்

கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் பங்கு கொள்ளும் பகுதி



காது நீண்ட கழுதையார்

காது நீண்ட கழுதையார்
    கணக்கில் ஜீரோ வாங்கினார்.
பூத யானை வாத்தியார்
    போட்டுப் போட்டுச் சாத்தினார்

ஏது செய்வார் கழுதையார்?
    எடுத்தார் ஓட்டம் தெருவிலே.
தோதாய் வந்த சலவையாள்
    துயரக் கதையைக் கேட்டனன்.

''போதும் போதும் படிப்புமே
    பிழைப்பைப் பார்க்க வேண்டுமே!
ஏதும் உண்டோ வழியுமே?
    எனது துன்பம் ஒழியுமே!''

சேதி கேட்ட சலவையாள்
    சிரித்துக் கொண்டான் தனக்குள்ளே
பீதி கொண்ட கழுதையைப்
    பொதி சுமக்க வைத்தனன்.

நீதி என்ன தெரியுமா?
    நிலைத்த படிப்பை நிறுத்தினால்
காது நீண்ட கழுதையார்
    கதியே நமக்குக் கிட்டுமே!

-எஸ். அருண் (219)
பரங்கிப்பேட்டை

ஒரிசாவில் பூக்களின் பெயர்


டிசம்பர் பூ – இட்டோலி
ரோஜாப் பூ – குலாப்
மல்லிகை – மல்லி
நந்தியாவட்டை – டகாரா
சூரியகாந்தி – ஸீஜ் யமுகி
செம்பருத்தி – மந்தாரா


–பி. ரவி (1982)
குறிச்சி, மேலப்பாளையம்.

புதுக் குறள்கள்

அகர முதல எழுத்தெல்லாம் – இனிய
தகர சிலேட்டில் எழுது.

படி நூலில் பயனுடையதை. – படியாதே
பயனில்லா நூலினையே.







பரீட்சை என்பது யாதெனில் யாதொன்றும்
பார்த்து எழுதா திருப்பதே.

வறியவரை எங்கேனும்பார்க்கின்-அவ்விடத்து
உரிய உதவி யாற்று.

பெல் என்ப;ஏனை பிரேக் என்ப.இவ்விரண்டும்
கண்ணென்ப ஓடும் சைக்கிளுக்கு
—நெ. அன்புச்செழியன் (1737)
பண்ருட்டி.



வேடிக்கை விடுகதைகள்

1. கண்தானம் செய்யாத ஊர் எது?
2. ஆங்கில அகர வரிசையில் 'F'க்கு உடம்பு சரியில்லை என்றாலும் கவலையில்லை. ஏன்?
3. குழம்பைத் தங்கமாக்குவது எப்படி?
4. பஸ் ஏன் ஸ்டாப்பில் நிற்கிறது?
5. சம்பளம் வாங்காத டிரைவர் யார்?

விடைகள்:
1. 'ஐ'தராபாத்.
2. அருகிலேயே ஜி.எச். இருக்கிறதே!
3. 22 காரட் போட வேண்டும்.
4. அதனால் உட்கார முடியாது.
5. ஸ்குரு டிரைவர்.

—பி. கிருஷ்ணகுமார் (2670)
சென்னை-5




எந்தப் பையில்

''டேய், இங்கே இருந்த முறுக்கு, சீடை, மைசூர்ப்பாகு எல்லாம் எங்கே காணோம்?''
''பையிலே வச்சிருக்கேன்.''
''பையா, எந்தப் பையில்?''
''அதான், என் தொப்'பை'.
—இரா. கணேஷ்(2530)
சேலம்-1

ஏன் கொடுக்கிறாய்?

அம்மா: பிரபு, ஏண்டா இங்க் பாட்டிலைக் குழந்தையிடம் கொடுக்கிறாய்?
பாபு: அதுதாம்மா 'இங்கு, இங்கு' என்று கேட்கிறது.
—எஸ். மாதவன் (204)
திருச்சி-14.



ஐந்து முறை ஆறு


6 என்ற எண்ணை ஐந்து முறை பயன்படுத்தி 600ஐ வரவழைக்க முடியுமா?

விடை:
முடியும், 666—66=600.
—எஸ். விவேக் (901)
கோட்டூர்

சிரமம் எதற்கு?

முதலாளி: (வேலைக்காரனிடம்): நான் போய் ரெஸ்ட் எடுத்துட்டு வாரேன்.
வேலைக்காரன்: நீங்க எதுக்கு முதலாளி சிரமப்படறீங்க? நானே போய் எடுத்துட்டு வந்துடறேனுங்க.

—இரா. ஸ்ரீனிவாசன் (973)
பொள்ளாச்சி-2



வேடிக்கைப் புதுமொழிகள்

''எந்த ஊருக்கு டிக்கெட்?'' என்றால் 'எங்கள் ஊருக்கு' என்று சொன்னானாம்.

'மாமரத்தில் ஏன் ஏறினாய்?'' என்றால், ''மரம் ஏறப் பழகுகிறேன்'' என்றானாம்.

பட்டாணி வாங்கக் காசில்லாதவன்
பாதம் அல்வாவுக்கு ஆசைப்பட்டானாம்.

கவரிங் நகையைத் தடை செய்யணுமாம்.
களவாணிகள் மகாநாட்டில் தீர்மானமாம்.

—எல். பழனியப்பன் (3035)
சென்னை-40



நமது உடல்

நம்முடைய
இதயம் ஒரு — Pump
இரத்தக் குழாய் ஒரு — Pipe
சிறுநீரகம் ஒரு — Filter
கல்லீரல் ஒரு — Workshop
கண்கள் — Camera
பற்கள் — Grinder
மண்ணீரல் — Slaughter House
இரத்தத்தில் உள்ள
வெள்ளையணுக்கள் — Soldiers

—ஜெ. சச்சுதானந்த சதீஷ் (2637)
ஈரோடு



QUEUE இந்தச் சொல்லில்தான் ஆங்கில உயிரெழுத்துக்கள் நான்கு தொடர்ந்து வந்துள்ளன. இது போன்ற நான்கு உயிர் எழுத்துக்கள் இணைந்து தொடர்ந்து வந்தது கிடையாது.


—ர. சீனிவாசன் (433)
போளூர்



முதலும் முடிவும்

திருக்குறள் தமிழின் முதல் எழுத்தாகிய 'அ'வில் தொடங்குகிறது.
முடியும்போது கடைசி எழுத்தாகிய 'ன்'ல் முடிகிறது. கவனித்திருப்பீர்களே!

—பொ. இரா. தேவராசன் (2575)
கரசங்கால், படப்பை.






தாமரை விதை

தாவர வகைகளில் தாமரை விதைதான் அதிக நாள் உளுத்துப் போகாமல் இருக்கும். காரணம், அதன் மேல் பாகம் மிகவும் உறுதியானது. எப்பொழுது போட்டாலும் முளைத்துக் கொள்ளும்.

—டி. சாவித்திரி (554)
பழனி



பறவையும் மின்சாரமும்

மின்சாரக் கம்பியில் பறவை உட்காரும் போது அது தாக்கப்படுவதில்லை. காரணம், ஒரு கம்பியில் அது அமர்ந்திருப்பதால் மின் சுற்று பூர்த்தி அடைவதில்லை. மற்றொரு கம்பியையும் அதன் உடல் தொட நேருமானால், அப்பொழுது பறவை மின் தாக்குதலுக்கு உள்ளாகும்.

—தன. அனந்தபத்மநாபன்
(2983) சேலம்-1



எது? எது? எது?

1. படுக்க முடியாத பாய் எது?
2. வியாபாரம் நடத்தமுடியாத கடை எது?
3. தங்க முடியாத சத்திரம் எது?
4. தலையில் வைக்க முடியாத பூ எது?
5. சவாரி செய்ய முடியாத கார் எது?
6. விளக்கு எரிக்கப் பயன்படாத திரி எது?

விடைகள்:

(1) பீட்பாய் (2) சாக்கடை (3) நட்சத்திரம் (4) வாழைப்பூ (5) புகார் (6) முந்திரி

—ஆர். சிவகாமி (3084)
தென்னூர், திருச்சி




விமானத்திற்கு வர்ணம்

ஒருவர்: விமானம் இவ்வளவு பெரிதாக இருக்கிறதே. இதற்கு எப்படி பெயிண்ட் அடிப்பார்கள்?

மற்றவர்: அது ஒன்றும் சிரமமில்லை. விமானம் மேலே பறக்கும்போது சிறிதாகி விடுமே. அப்போது அடித்து விடுவார்கள்.

—பா. நடராஜன் (3218)
சென்னை-28



வாயாடி வம்பன் (நாடோடிப் பாடல்)

வாயாடி வம்பன்
வடகரைக்குப் போனான்
வயல்வெளியே ஓடி
வாய்க்காலை மறைத்தான்
அங்கு கண்டான் ஒரு கெண்டை
ஓடி ஓடிப் பிடித்தே
உடைந்தது அவன் மண்டை!

—இளஞ்செழியன்
அடியக்கமங்கலம்

Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032
(Phone: 431543)

Editor: K. Rajendran



"எனக்கும் கொஞ்சம்
இடம் கொடேன்"

புகைப்படம் — என். ராமகிருஷ்ண

REGISTERED No. TN MS (S) 281
Registered as a Newspaper in Sri Lanka